OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 AUG 1939
MADRAS

# தஞ்சைத் திருக்கோயில்கள்.

ஆக்கியோன்
ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.,
தஞ்சை அரசர் திருக்கோயில்கள் கண்காணிப்பாளர்.

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா பதிப்பகம்.
1939.

[பதிப்புரிமை ஆசிரியருக்கே.

Q 2:38 .21193
N39
224 729

# முகவுரை.

தஞ்சை நகரின் புராண வரலாறு எவ்வாற்றானும் சிறப்புடைத்தென்னலாம். ஆதியில் குபேரன் தேவ சிற்பியாகிய விஸ்வகர்மனைக் கொண்டு தென்னாட்டில் அளகாபுரிக்கொப்பாக இந்நகரை நிர்மாணிக்கச் செய்து, அதில் அவன் சில காலம் தங்கி சிவபிரானைத் தியானம் செய்தமையால் அளகை என்று பெயர் பெற்றதென்பர். மற்றொன்று. தஞ்சகன் வேண்டுகோளுக்கிரங்கி தஞ்சாபுரி என்றழைக்கப் பெற்றதென்பது தலமான்மியங்கள்[1] கூறுவது. எங்ஙனமாயினும் ஆகுக.

பழங்காலமே யன்றி, சரித்திர கால முதற்கொண்டும், தஞ்சைத் தன் பெயரை நிலை நாட்டி மிக்க செல்வாக்குற்றமை காணலாகும். பிற்காலச் சோழ வமிசத்திற்கு அடிகோலிய விஜயாலயன், 9-ம் நூற்றாண்டின் மத்தியில் பெரும்பிடுகுமுத்தரையன் என்ற பல்லவ-பாண்டிய சிற்றரசனிடமிருந்து, தஞ்சை நகரைக் கைப்பற்றி, அதனைமிக்க அழகுறச் சமைத்தும்[2], அவனும் அவனுக்குப் பின்னோருமான சோழ மன்னர்கள் அரசு தாங்கிய 13-வது நூற்றாண்டின் மத்திவரை, அதனைத் தம் இராஜதானியாகவும்; பின்பு 14 முதல் 16-வது நூற்றாண்டின் இராஜீய குழப்பத்தினிடை வாளா இருந்தும்; மறுபடியும் நாயக்கர் அரசுரிமை (1549-1673) காலத்தும், அதற்கடுத்த மகாராட்டிர வமிச மன்னர் (1675-1855) காலத்தும், தலைநகராகவும் இருந்து வந்தும், பிறகு கடைசியாக சிவாஜி இராஜா ஆண் சந்ததியில்லாது இறக்கவே, ஆங்கில ஆட்சிக்குள் வந்தமையும், பிறவும் அறியலாகும்.

இப் பல நூற்றாண்டுகளாக, தஞ்சை நகரானது அரசியற்றுறையிலும், கலை ஞான வளர்ச்சியிலும் உன்னத பதவி எய்தியிருப்பினும், மத வளர்ச்சிக்கான பெரும்பணியில் ஒப்பதும் மிக்கது மில்லாத் தனிப்பெருமை அடைந்திருப்பது யாவரும் கண்கூடாக் காணலாகும்.

---

1. பவிஷ்யோத்தர புராணத்தின் பிரகதீசுவர மகாத்மியம்—சரசுவதி மஹால் ஏடுகள் MS 1680; பிரமாண்ட புராணத்தின் தஞ்சாபுரி மகாத்மியம்—MS. 14080. பராசா க்ஷேத்ர மகாத்மியம், சமீவன க்ஷேத்ர மகாத்மியம் முதலியன.

2. முதல் இராஜேந்திரனது திருவாலங்காடு செப்பேடுகள், S. I. I. III p. 415.

224749

முற்காலச் சோழர்களும், அவர்க்குப் பின் போந்த சரித்திர காலச் சோழர்களும், தாம் கண்ட கடவுளருக்கு எண்ணற்ற கோயில்களைக் கட்டியும், அவற்றினுக்கு உப்பு முதல் கற்பூரம் வரைக்கும் ஒன்றும் குறைவுபடாதபடி நிபந்தங்கள் பல விட்டும், இறைபணி நின்றனர். அவர் பின் வந்த விஜயநகரச் சார்பு தாங்கிய நாயக்க மன்னர்களும் வைணவப்பற்று மிக்காராய் பல அரிய விண்ணகர்களை எங்கும் பரப்புவராயினர். அவர்களுக்குப் பின் வந்த மகாராட்டிரர்களும், சிலச் சில கோயில்களை ஆங்காங்கு எழுப்பியும், தமது அரசியற் பாதுகாப்பில் வந்த முன்னோர்களது கோயில்களைப் பராமரித்ததுமன்றி, காசி முதல் இராமேசுவரம், தனுஷ்கோடிவரை தரும சத்திரங்களையும், விடுதிகளையும் யாத்ரீகர்களுக்காக எங்கும் ஏற்படுத்தினர்.

இவ்வாறாக, மதப்பற்றிலும், தரும சிந்தனைகளிலும் ஈடுபட்ட மகாராட்டிர வமிசத்துக் கடைசி சிவாஜி மன்னன் 1855-ல் இறந்ததும், ஆங்கில அரசியலார் தஞ்சாவூர் இராஜ்யத்தையும், அதன் அரசுரிமைச் சொத்துக்களையும், அவர் பராமரிப்பிலிருந்த கோயில்கள் யாவையும் பறிமுதல் செய்தனர். அதன் மேல், அம்மன்னரது முதல் இராணியாகிய மாதுஸ்ரீ காமாட்சியம்பா பாய் சாகேப் அரசாங்கத்தாருடன் வழக்குகள் தொடங்கி, அவைகளை 1863-ல் மீண்டும் பெற்றுத் தான் 1892 வரையிலும், அவருக்குப்பின் இராணி உமாம்பா பாய் சாகேப் 1900 வரையிலும், கடைசி இராணி ஜிஜாம்பா பாய் சாகேப் 1912-வரையிலும், பரிபாலித்து வந்தனர். அதற்குப்பின் ராஜஸ்ரீ சிவாஜி மன்னரின் முதல் இராணியார் ஸ்வீகார புத்திரராம் ராஜஸ்ரீ சரபோஜி என்ற ராஜாராம் ராஜா சாகேப் அவர்களின் புத்திரர் ராஜஸ்ரீ சிவாஜி ராஜா சாகேப் 1927 வரையிலும், தற்காலம் அவர் புத்திரர் ராஜஸ்ரீ இராஜாராம் ராஜா சாகேப் அவர்களின் தரும விசாரணைக்குள்ளும், சென்னை இந்துமத பரிபாலன போர்டாரவர்களால் 1929-ல் நியமிக்கப்பட்ட ஸ்கீம்[2] திட்டப்படிக்கும் நடந்து வருகிறது.

இரண்டாம் சரபோஜி மன்னர், தான் மறுபடியும் பட்டத்திற்கு வந்தபின், 1792-ல் ஆங்கில அரசியலார் அவரிடம் ஒப்புவித்த கோயில்கள் 102 ஆக, இப்போது எஞ்சி நிற்பது 88 ஆகும். அவற்றுள்

1. முதற் குலோத்துங்கச்சோழன் முதன் மந்திரியாகிய "சாமந்த நாராயணன் கட்டிய "சாமந்த நாராயண விண்ணகர் பெருமாள் கருந்திட்டைக்குடிக்கும், சுங்கந்தவிர்த்த சோழநல்லூருக்கும் இடையே இருந்ததென்று கல்வெட்டொன்று, S.I.I. Vol II. p. 113. Ins. 22, கூறுகின்றது. இப்போது இக்கோயில் இஃதென அறியக்கூடாததாகயிருக்கிறது.

2. Board's Order No. 298, dated 5th July 1929.



தஞ்சையிலுள்ளவை 76. பிற, நகரின் செய்மையிலுள்ளன. அவற்றுள் சைவ சமயாச்சாரியார் திருஞான சம்பந்தர் தேவாரப் பதிகங்கள் பெற்றவை திருவிசலூரும், திருவடகுரங்காடுதுறைக் கோயில்களாகும்.[1] நாலாயிரப் பிரபந்த பாசுரங்கள் பெற்றது தஞ்சை மாமணிக் கோயிலாகும். இப் புத்தகத்தில், தஞ்சை நகரிலுள்ள திருக்கோயில்கள் மாத்திரமே குறிப்பிட்டுள்ளன. மற்றும், அவைகளது தனித் தனி வருமானங்களை ஆங்காங்கு குறிப்பிட்டிருப்பினும், அவற்றுள் சிலகோயில்களுக்கு வருவாய் இருந்தும், சிலவற்றிற்கு போதாமலும், ஒன்றும் இல்லாமலும் இருப்பதனால், மேற்கண்ட போர்டார் ஸ்கீம் திட்டப்படி, கோயில்கள் வருமானங்கள் யாவும் பொதுவாகத்திரட்டி, அவைகள் யாவற்றிற்கும், அதனதன் அவசியத்திற்கும் சிறப்பினுக்கும் தக்க திட்டப்படி செலவாகி வருவதும் குறிப்பிடுவதாகும்.

சமய உண்மைகளைப் பரப்பி, அன்பு உணர்வினை எழுப்புதற்காக தஞ்சைப் பெரிய கோயிலில், யுவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 17 ம் நாள் தோற்றுவித்து, சென்ற நான்கு ஆண்டுகளாக பணியாற்றிவரும் இராச ராச சமய சங்கமும், தஞ்சைக்கீழ இராஜ வீதி ஸ்ரீவரதராஜப் பெருமாள் சந்நிதியில் 1937-ம் ஆண்டு முதல் தோற்றுவித்துள்ள இராமாநுஜ தர்சன ஸபையார் உழைப்பும் போற்றற்குரியன.

இச் சிறு புத்தகத்தின் கண் மேற் குறித்த வண்ணம், தஞ்சை அரசர்களின் பராமரிப்புக்குள் வந்த தஞ்சைக் கோயில்களை யல்லாது, மற்றும் நாளடைவில் அவர்களின் ஆளுகையிலிருந்து விலகியவைகளையும், பக்தர்களால் ஆங்காங்கு புதிதாக எடுக்கப்பட்டுள்ளவைகளைப் பற்றியும், எனது சிறிய அவகாசத்தில் கிடைத்த குறிப்புக்களை இவண் ஒருங்கே சேர்த்துள்ளதை அன்பர்கள் ஏற்றருள்வாராக.

இதனை வெளியிடுதற்கான பேருதவி புரிந்த சரஸ்வதி மஹால் புத்தக நிலைய ஆசிரியர் ஸ்ரீ அ. ரங்கநாத தாத்தாச்சாரியார் அவர்களுக்கும், ரிட்டயர்டு பிரதம இன்ஜினீர், தஞ்சை திவான் பஹதூர் ஸ்ரீ R. நரசிம்ஹ அய்யங்கார் அவர்களுக்கும், மற்றும் பலவாற்றானும் உதவிய அன்பர்களுக்கும் எனது நன்றி உரித்ததாகும்.

"இராசராசேச்சரம்".
தஞ்சை.

ஜெ. எம். சோமசுந்தரம்.

1. இவைகளின் விபரங்களை எனது 'இராஜராஜேசுவரமும், பிற சோழர் கோயில்களும்' என்ற நூலில் காண்க.

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தஞ்சைத்தல மான்மியச் சுருக்கம் | .... 1—2 |
| 2. | தஞ்சைத்தல மான்மியம் | .... 1 |
| 3. | தஞ்சை மாமணிக் கோயில் | .... 37 |
| 4. | வின்னாற்றங்கரைக் கோயில்கள் | .... 44 |
| 5. | அரசூர் திருக்கோயில்கள் | .... 46 |
| 6. | கருந்திட்டைக்குடி கோயில்கள் | .... 48 |
| 7. | மாரியம்மன் கோயில் திருக்கோயில்கள் | .... 60 |
| 8. | தஞ்சைத் திருக்கோயில்கள் | .... 63 |
| 9. | தஞ்சைக் கோயில்களைப்பற்றிய நூல்கள் | .... 92 |


# தஞ்சைத் தலமான்மியச் சுருக்கம்.

‘பொன்னியாறு’ என்று சிறப்பாக வழங்கப்பெற்ற காவிரியாற்றின் தென்புறம் ஒரு யோசனை அல்லது எட்டு மைல் தூரத்தில் அமையப்பெற்ற நகரம் தஞ்சை. அதன் வடபாகத்தில் மணிமுத்தா நதி என்ற ஓர் சிற்றாறுண்டு. அது இப்போது ‘வடவாறு’ என்று அழைக்கப்படுகிறது. அதன் மேற்கு அருகாமையில் ‘அமிருதபுஷ்கரணி’ என்று ஒரு குளமுள்ளது. இந்நகரத்திற்கு ‘தஞ்சை’ என்ற பெயர் மஹாவிஷ்ணுவினாலிடப்பெற்றது.

பண்டை ஒருகால், புராணபிரசித்தரான பராசரமுனிவர் இங்கு ஆசிரமத்தைக் கட்டித் தவம் புரிந்துவந்தார். பல சீடர்களைப் படிப்பித்து வந்தார். தேவாசுரர்கள் பண்டு பாற்கடலைக் கடைந்து அமிருதத்தை அடைந்தனர். அதிற் சிறிது பெற்று பராசர முனிவர் இந்த அமிருத புஷ்கரணியில் சேர்த்தார். அது காரணமாக அவரிருக்குமிடமெல்லாம் செழித்து ஓங்கி வளர்ந்து வந்தது. முனிவர் தமது தவத்தைச் செவ்வனே புரிந்து வந்த காலத்தில் உலகில் பனிரெண்டாண்டு மழையில்லாமல் கடும் பஞ்சம் நேர்ந்தது. அதனால், தஞ்சகன், தண்டகன், தாரகன் என்ற மூன்று அசுரர்கள் தம் பரிவாரத்துடன் பராசர முனிவரின் ஆசிரமம் அணுகி அங்குள்ள அக்குளத்தின் நற்சுவை வாய்ந்த நீரை அருந்திக் களைதீர்ந்து தபோமுனிவர்களுக்கு இடையூறு செய்தார்கள். முனிவர் பலவாறு நல்லுரை சொல்லியும் கேட்கவில்லை. முனிவர் பிரமதேவரிடம் முறையிட்டனர். பிரமன் சிவபெருமானிடம் முறையிடச்சொல்லவே, அவரைக்குறித்து தவம் செய்ய, அவர் மனமிரங்கி காளிகாதேவியை அனுப்பினார். அந்தத்தேவியாரொருவரால் அவர்களைக் கொல்ல முடியாததாயிற்று. பெரியதோர் போர் நடந்தது. புஷ்கரணியின் அமிருதம் கலந்த நீரை அருந்துவதினால் அவ்வசுரர்களுக்கு வன்மை குன்றாது போர் புரிய ஏதுவாக இருந்தது. அதுகண்டு மகரிஷி மஹாவிஷ்ணுவைக்குறித்து தவம் செய்யவே, பகவான் ‘கார்போன்ற’ வடிவம் கொண்டு அக்குளத்திலுள்ள தண்ணீரை முற்றும் தாமே அருந்தினார். அதுபற்றி அசுரர்களுக்கு வன்மை குன்றிவிட்டது. வன்மை குன்றவே தஞ்சகன் யானை வடிவமெடுத்துப் போர் புரிந்தான். விஷ்ணு

பகவான் உடனே 'நரசிங்க' வடிவமெடுத்து தஞ்சகனைக் கொன்றார். சாகுமுன், தஞ்சகன் பகவானைக் குறித்து தாம் எடுத்துள்ள 'நரசிங்க' வடிவத்தோடு இங்கு சேவை சாதிக்கவேண்டுமெனவும், தன் பெயரால் இந்தப்பட்டணம் உலகில் வழங்கவேண்டுமென்றும் வரம் கேட்டுக்கொண்டான். பகவான் அப்படியே வரமளித்தார். அதுமுதல் இத்தலம் **தஞ்சாபுரி** என்ற பெயரை அடைவதாயிற்று.

பிறகு, தண்டகன் பூமியைக் குடைந்து பயந்து ஓடினதால் விஷ்ணுபகவான் வராஹம்(பன்றி)உருவம் தரித்து அவனைக்கொன்றார். தாரகனை காளிகா தேவியார் தனது **சக்திகுலிசம்** என்ற சூலத்தால் கொன்றனள். அதுமுதல் போரில் தமது உடம்பில் பட்ட காயமெல்லாம் அழகிய ஆபரணங்களாக மாறி அவ்வம்மையார் **'பச்சைக்காளி''** **'பவழக்காளி'** என்ற திருநாமங்களுடனும் **கோடியம்மன்,** கோடீச்சுரக்காளி என உலகறியப்பெற்றாள். அப்பொழுது பிரமா முதலியோர்களும் பராசர முனிவரும் மஹாவிஷ்ணுவை இவ்விடத்திலேயே அந்தந்த வடிவத்துடனே எழுந்தருளியிருந்து தங்களுக்கு சேவை சாதிக்கருள வேண்டிக்கொண்டதின்பேரில், பகவானும் அவ்விதமே செங்கமலவல்லித்தாயாருடன் **ஸ்ரீநீலமேகப்பெருமாளாகவும்,** ஸ்ரீநரசிங்கமூர்த்தியும் தஞ்சகனை வதஞ்செய்த இடத்திலேயே வெற்றியோடு கூடின ஸ்ரீநரசிங்க **மூர்த்தியாகவும், 'மணிக்குன்ற'** வடிவமாகவும் தோற்றம்பெற்று இந்த மூன்று வடிவமாய், முற்காலத்தில் வெண்ணாற்றிற்குத் தென்கரையில் 'வம்புலாஞ்சோலை'யிலும் அண்மையிலும் எழுந்தருளியிருந்து நாயக்க வம்ச அரசாட்சியின் பிற்காலத்தில் * விண்ணாற்றங்கரையில் எழுந்தருளச் செய்யப்பெற்று உலகமுய்ய சேவை ஸாதித்து வருகிறார்.

---

* விண்ணன் என்ற வேளாளகுலத்து சிற்றரசனால் வெட்டியது.

"கண்ணார் உலகிற் பகீரதனுங் கண்டு கொணர்ந்தான் கங்கையென்பார்,
விண்ணாறு அளித்தோவாறுதந்த வேளாளர்குடியில் விண்ணனன்றோ,
தண்ணார்முன்னி ஓடம்வரச் சம்பந்தனும் செந்தமிழ்பாட,
மண்ணாள்செல்வம் பெருங்கீர்த்தி வகித்தார் சோழமண்டலமே."

சோழமண்டலசதகம்—90.

॥ श्रीः ॥

श्रीशेङ्कमलवल्लीनायिकासमेत श्रीनीलमेघपरब्रह्मणे नमः ॥

# * ॥ तञ्जापुरी माहात्म्यम् ॥

தஞ்சை மாமணிக்கோயில்

## விண்ணாற்றங்கரை, ஸ்ரீநீலமேகப்பெருமாள் பெருமை.

॥ प्रथमोऽध्यायः ॥

अतसीपुष्पसंकाशं तुलसीदामभूषितम् ।
नीलमेघमुदाराङ्गं श्रीमहीसेवितं भजे ॥ ॥ १ ॥

முதல் அத்தியாயம்.

காயாம்பூவின் நிறம்போன்ற காந்தியை உடையவரும், துளசி மாலையினால் அலங்கரிக்கப்பெற்றவரும், அழகிய கம்பீரமான திருமேனியை உடையவரும், இலக்ஷ்மிதேவி பூதேவி இவர்களால் சேவிக்கப்பட்டவருமாயுள்ள ஸ்ரீநீலமேக பகவானை சேவிக்கிறேன்.

साक्षात्कृत्य पराशरस्य तपसा पश्चात्तडिज्ज्योतिषा
भूत्वा नीलवलाहकद्युति पयः पीत्वाऽमृतं सारसम् ।
हत्वा तञ्जकदण्डकप्रभृतिकान् यः पाति लोकत्रयं
तं तञ्जापुरवासिनं कमलया श्रीनारसिंहं भजे ॥ ॥ २ ॥

பராசரமகரிஷியின் தவத்துக் கிணங்கி, ஸ்ரீபிராட்டி மின்னலாகப் பிரகாசிக்க, (தாம்) கறுத்த மேகத்தின் மேனியைத் தரித்து ஸரஸ்ஸில் இருக்கும் அமிருதமயமான தண்ணீரை அருந்தி, தஞ்சகன், தண்டகன் முதலியவர்களைக் கொன்று எந்த

---

* Vide Tanjore Saraswathi Mahal Library Sanskrit Ms. Burnell's No. 1836 and D. No. 10480.

பகவான் மூவுலகத்தையும் காக்கிறாரோ, அந்த ஸ்ரீலக்ஷ்மீசமேதரான ஸ்ரீதஞ்சாபுரத்தில் வசிக்கும் ஸ்ரீநரசிம்மசுவாமியைச் சேவிக்கிறேன். (2)

अथ वक्ष्यामि माहात्म्यं तञ्जापुर्या विशेषतः ।
पराशरतपःसिद्ध्यै प्रसन्नो यत्र केशवः ॥ ॥ ३ ॥

பராசரமகரிஷியின் தவத்தின் சித்திக்காக (அனுக்கிரகிப்பதற்காக) பகவான் பிரசன்னராக எழுந்தருளின இடமான தஞ்சாபுரத்தின் பெருமையை விசேஷமாய்ச் சொல்லுகிறேன். (3)

वधार्थं तञ्जकादीनां त्राणाय जगतामपि ।
यत्र प्रादुरभूद्विष्णुर्नीलमेघाभिधः स्वयम् ॥ ॥ ४ ॥

தஞ்சையில் தஞ்சகன் முதலியவர்களைக் கொல்லுவதற்காகவும், உலகத்தைக் காப்பாற்றுவதற்காகவும் நீலமேகனென்று திருநாமத்துடன் பகவான் தாமாகவே தோன்றினார். (4)

नीलमेघस्य सांनिध्यकारणं च मुनेः कृते ।
वधश्च तञ्जकादीनां संक्षेपेणोच्यते मया ॥ ॥ ५ ॥

மகரிஷியின் அனுக்கிரகத்திற்காகப் பகவான் நீலமேகன் நேராகத் தோன்றின (காரணம்) வரலாறும், தஞ்சகன் முதலியவர்களுடைய இறப்பும் சுருக்கமாய்ச் சொல்லப்படுகிறது. (5)

कावेर्या दक्षिणे भागे प्रवृत्ता योजनान्तरे ।
मणिमुक्तानदी नाम पातालतलवाहिनी ॥ ॥ ६ ॥

காவேரியின் தென்புறத்தில் ஒரு யோசனை தூரத்தில் உள்ள மணிமுக்தாநதி என்று பெயருள்ள ஆறு புறப்பட்டுப் பாதாள உலகத்தில் பாய்கிறது. (6)

तस्यामेव महानासीत् देवखातो ह्रदो वरः ।
संजुष्टः पुण्यतरुभिः पुण्यपुष्पोपशोभितैः ॥ ॥ ७ ॥



அதில் தேவர்களால் வெட்டப்பெற்ற பெரிய உத்தமமான மடு ஒன்று உண்டு. அது புண்ணியவிருக்ஷங்களாலும் மலர்களாலும் விளங்கப்பெற்றது. (7)

सेयं पुष्करिणी पुण्यसलिला लोकपावनी ।
स्थानं तत्पावनं प्रोक्तं समन्ताद्योजनावधि ॥ ॥ ८ ॥

அப்படிப்பட்ட தடாகம் இது. புண்யதீர்த்தத்தையுடையது; உலகத்தைப் பரிசுத்தப்படுத்தக்கூடியது. சுற்றளவு ஒரு யோசனை. அந்த இடம் பரிசுத்தமெனச் சொல்லப்படுகிறது. (8)

सेयं तञ्जापुरी नाम प्रसिद्धा सर्वदिक्ष्वपि ।
विष्णुना कल्पितं नाम तत्कारणमिहोच्यते ॥ ॥ ९ ॥

இந்தத் தஞ்சாபுரி எல்லாத் திக்குகளிலும் பெயர் பெற்றது. விஷ்ணுவினால் பெயர் இடப்பெற்றது. அதற்குக்காரணம் இங்கு சொல்லப்படுகிறது. (9)

तपःस्थलमिदं प्राप कदाचिन्मुनिपुंगवः ।
दिष्ट्या पराशरमुनिर्विचिन्वंस्तपसः स्थलम् ॥ ॥ १० ॥

முனிவருள் உத்தமரான பராசரமகரிஷி, தாம் தவம் புரிவதற்குத் தகுதியான இடத்தைத் தேடிக்கொண்டு வருகையில், தெய்வச்செயலால் இந்த இடம் வந்து சேர்ந்தார். (10)

स दृष्ट्वाऽनुत्तमं देशं हृद्यं पुण्यविवर्धनम् ।
सलिलं पुष्करिण्याश्च प्रफुल्लकमलोल्बणम् ॥ ॥ ११ ॥
रम्यां पुण्यतरुच्छायां मणिमुक्तानदीमपि ।
प्रहर्षमतुलं लेभे तस्थौ विस्मितमानसः ॥ ॥ १२ ॥

அந்த மகரிஷி மனதைக் கவரக் கூடியதும் புண்ணியத்தை விளைவிக்கிறதுமான இந்த இடத்தையும், மலர்ந்த தாமரைப் பூக்கள் நிறைந்த புஷ்கரிணியின் தண்ணீரையும், அழகியதும், புண்ணியவிருக்ஷங்களின் நிழலுடன் கூடியதுமான மணிமுக்தா நதியையும் பார்த்து அதிக மகிழ்ச்சி அடைந்தார். மனம் வியந்து நின்றார். (11-12)

तपः कर्तुं स्थलमिदं पुण्यं रम्यं ममोचितम् ।
इति निश्चित्य सततं वासं चक्रे महामुनिः ॥ ॥ १३ ॥

மகரிஷி, புண்யமுள்ளதும் அழகியதுமாயுள்ள இந்த இடம் எனக்குத் தவம்செய்யத் தகுந்தது என்று நிச்சயித்து, அங்கேயே எப்பொழுதும் வசித்து வந்தார். (வாஸம் செய்யத்தீர்மானித்தார்).

उटजेषु च रम्येषु कृतेषु मुनिपुंगवः ।
शिष्यैश्च मुनिभिः सार्धमुवास तपसान्वितः ॥ ॥ १४ ॥
स्वाध्यायैर्वेदपाठैश्च होमदानजपादिभिः ।
शास्त्रोपन्यासपाठैश्च ध्यानयोगैः समाधिभिः ॥ ॥ १५ ॥
कुर्वन्ति स्म तपोयोगं यथाकालं तपोधनाः ।
अन्वितस्तैर्मुनिवरश्चचार विपुलं तपः ॥ ॥ १६ ॥

இலைக்குடிசைகளும் அழகாய் அமைக்கப்பட்டன. மகரிஷி சிடர்களுடனும், முனிவர்களுடனும் தவம்செய்துகொண்டு வசித்து வந்தார். மற்ற முனிவர்களும் அத்யயனம் வேதபாடம், ஹோமம், தானம், ஜபம், சாஸ்திரங்களை உபந்யசிப்பது, பாடம் சொல்லுவது, தியானம் செய்வது, யோகாப்பியாசம் சமாதி முதலியவைகளை அந்தந்தக் காலங்களில் செய்துவந்தார்கள். பராசரமகரிஷியும் அவர்களுடன் கூடி விரிவாய்த் தவம் புரிந்துகொண்டு வந்தார். (14—16)

ततो देवासुरैः सार्धं पयोधिममृतार्थिभिः ।
मन्थानं मन्दरं कृत्वा ममन्थ पुरुषोत्तमः ॥ ॥ १७ ॥
ततस्तु कौस्तुभो लक्ष्मीः संतानाद्याः समुत्थिताः ।
यत्नेन महता पश्चादमृतं संबभूव ह ॥ ॥ १८ ॥
तदादायामृतं दिव्यं दैत्यारिर्भगवान् हरिः ।
व्यभजत् सर्वदेवानां मुनीनांच दिवौकसाम् ॥ ॥ १९ ॥

பிறகு, தேவர்கள் அமிருதத்தை விரும்பினர். அதற்காகப் பகவான் புருஷோத்தமர், மந்தரமலையை மத்தாகச் செய்து



கொண்டு தேவர்களுடனும், அசுரர்களுடனும் கூடி பாலாழியைக் கடைந்தார். பிறகு அதிலிருந்து கௌஸ்துபம், இலக்ஷ்மி, சந்தானம் முதலிய கற்பகமரங்கள் புறப்பட்டன. நிரம்பவும் பிரயாசைப்பட்ட பிறகு அமிருதம் புலப்பட்டது. பகவான் அந்த அமிருதத்தை எடுத்து தேவலோகத்தில் வசிக்கும் எல்லாத் தேவர்களுக்கும் முனிவருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். (17-19)

स तत्र मुनिशार्दूलः पराशरमुनिस्तदा ।
क्षुत्पिपासामयैर्मुक्ता मदीयाश्रमवासिनः ॥ ॥ २० ॥
पुष्टाश्चौषधयो गावो न शुष्यति जलं सदा ।
सर्वोपकाररहितं न युक्तं मम भोजनम् ॥ ॥ २१ ॥
इति मत्वाऽमृतं सम्यग्गुप्तं [illegible] निर्ययौ ।

அப்பொழுது முனிசிரேஷ்டராகிய பராசரமுனிவர் எனது ஆசிரமத்தில் வசிப்பவர்கள், பசி, தாகம், பிணிகள் ஒன்றும் இல்லாதவர்களாகவும், பசுக்கள், பச்சிலைகள் நன்றாய் வலிமையுடன் கூடியதும், (குளங்களில்) தண்ணீர் ஒரு பொழுதும் வற்றாமல் இருக்கவும், இப்படிப் பலருக்கும் பல உபகாரம் செய்யாதபடி இதை நானே அருந்துவது சரியாகாத காரியம் என்று எண்ணி பராசரர் அதை மூடி சாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொண்டு புறப்பட்டார். (20—21½)

भूलोकाभिमुखं यान्तं तं दृष्ट्वाऽमृतधारिणम् ॥ ॥ २२ ॥
सुत्रामा सहसाऽऽगम्य प्रत्युवाच मुनीश्वरम् ।
भगवन्नमृतं हृत्वा कथं गच्छसि भूतलम् ।
असुरा राक्षसाश्चैव सुधाकाङ्क्षिण एव ते ॥ ॥ २३ ॥
हरेयुरमृतं दिव्यं हरादपि मदोद्धताः ।
आमृष्टं भूतलं तैस्तु कथं वा नेतुमिच्छसि ॥ ॥ २४ ॥

பூலோகத்தை நோக்கிச் செல்லுகின்ற முனிவரைப் பார்த்து, இந்திரன் ஓடிவந்து கூறியதாவது— பகவானே ! அமிருதத்தை எடுத்துக்கொண்டு எப்படி பூலோகம் செல்லுகிறீர் ; அங்கு அசு

சம். இது பொய்யல்ல.(அமிருதம் ஒருபொழுதும் கொடுக்கப்படுகிற பொருளல்ல). ஆசையால் கையில் கிடைத்த அமிருதத்தை உண்டு அமிருதத்தன்மையை (சாவில்லாத்தன்மையை) நீர் அடையவேண்டும். அதனால் பிறருக்கு உபகாரம் செய்யவும் நீடூழி தவம் செய்யத் தகுதியுள்ளவராயும் இருக்கவேண்டும். (32-35)

इत्येतद्वचनं श्रुत्वा प्रत्यवोचत्पराशरः ।
परार्थे यादृशी प्रीतिरात्मार्थे सा न विद्यते ॥ ॥ ३६ ॥

परेषु वा स्वात्मनि वा को भेदः समदर्शिनाम् ।
बहुना किं? भिन्नरुचिः खलु लोकः पुरंदर ॥ ॥ ३७ ॥

ममैषोऽध्यवसायोऽभूत् तिष्ठ गच्छ त्रिविष्टपम् ।
गच्छामि चाहं देवेन्द्रेत्युक्त्वाऽगच्छन्मुनीश्वरः ॥ ॥ ३८ ॥

இது கேட்டுப் பராசரமுனிவர், பிறர் காரியத்தில் எனக்கு எவ்வளவு அன்பு இருக்கிறதோ, அவ்வளவு தன் காரியத்திலில்லை. எல்லோரையும் சமமாய் ஒன்றுபோல் பார்ப்பவர்களுக்குப் பிறரிடத்திலும் தன்னிலும் என்ன வேற்றுமை தோன்றப்போகிறது? இதுவிஷயம் திருப்பித் திருப்பி பேசி என்ன? இந்திரரே! எப்படி மக்கள் வேறுபடுகிறார்களோ, அப்படி அவர்கள் நோக்கமும் வேறுபாடாகிறதென்பது கேட்டதில்லையா. இது எனது உறுதியான எண்ணம். நீர் நின்றால் நிற்க, சுவர்க்கம் செல்லுவதானால் செல்லுக, நான் விடைகொள்ளுகிறேன் தேவேந்திரரே! என்று முனிவர் சொன்னார். (36-38)

कृतनिश्चयमेवैनं विदित्वा पाकशासनः ।
कल्पयन् विविधान् विघ्नान् ययौ नाकं सुरैः सह ॥ ३९ ॥

इति श्रीब्रह्माण्डपुराणे अगस्त्यनारदसंवादे तञ्जापुरीमाहात्म्ये
प्रथमोऽध्यायः ॥

இந்திரன் இவர் மாறுதலடைநிலையை உடையவர் என்று தெரிந்து, பல இடையூறுகளைச்செய்து தேவர்களுடன் சுவர்க்கம் சென்றான். (39)

பிரமாண்டபுராணம், தஞ்சாபுரி மான்மியம்
முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

## ॥ द्वितीयोऽध्यायः ॥

### இரண்டாவது அத்தியாயம்.

—o—

स तीर्त्वा तपसः शक्त्या मार्गमावृत्य तिष्ठतः ।
प्रत्यूहान् परमप्रीतः स्वाश्रमं संददर्श ह ॥ ॥ १ ॥

पराशरं तमायान्तमालोक्याश्रमवासिनः ।
ऋषयः शिष्यसहिताः प्रत्युज्जग्मुर्मुदाऽन्विताः ॥ ॥ २ ॥

प्रविश्याश्रममासीनमृषयः प्रीतमानसाः ।
शशंसुः कुशलप्रश्नमृषिं स्वागतपूर्वकम् ॥ ॥ ३ ॥

मुनिश्च परमोदारो वृत्तान्तं व्याजहार सः ।
संसिद्धिममृतस्यास्य वचनं तद्बिडौजसः ॥ ॥ ४ ॥

பராசரர் தனது தவத்தின் சக்தியினால் வழியில் குறுக்கே நின்று தடுக்கும் பல இடையூறுகளைத் தீர்த்துக்கொண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் தனது ஆசிரமத்தைக் கண்டார். வந்துகொண்டிருக்கும் மகரிஷியைப் பார்த்து ஆசிரமத்தில் வசிக்கின்ற முனிவர்கள் தமது சீடர்களுடன் அவரை எதிர் கொண்டழைத்தனர். ஆசிரமத்தில் சென்று அமர்ந்தார். முனிவர்கள் மகிழ்ச்சியுடன் நல்வரவைச்சொல்லி குசலப்பிரச்னங்களைச் செய்தார்கள். பெருந்தன்மையுடைய பராசரர் நடந்தவரலாற்றைச் சொன்னார். அமிருதம் கிடைத்த விதத்தையும், அதற்கு இந்திரன் செய்த இடையூறுகளையும் சொன்னார். (1—4)

आनीतमत्र यत्नेन कथं वा भोक्तुमिच्छथ ।
अङ्गीकृत्यामृतं भोक्तुमपर्याप्तमतस्त्विदम् ॥ ॥ ५ ॥

पुण्ये सरसि निक्षिप्योपयोक्तुं किमिच्छथ ।
यदिष्टं भवतः प्रीत्या तथैव क्रियतां मुने ॥ ॥ ६ ॥

इत्युक्तवत्सु सर्वेषु तपस्विषु महामुनिः ।
आदायामृतमञ्जाय पुण्ये निक्षिप्तवान् ह्रदे ॥ ॥ ७ ॥

துன்பப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்ட அமிருதத்தை எப்படி அருந்த விரும்புகிறீர்கள்? இது எல்லோரும் உண்பதற்குப் போதுமானதல்லவே. இந்தப் புண்ணிய தடாகத்தில் இதைச் சேர்த்து அப்படி உண்ணவிரும்புகிறீர்களா என்று பராசரர் கேட்க, அதற்கு மற்றவர் தங்களுக்கு என்ன விருப்பமோ, அப்படியே செய்யலாம் என்றுசொல்ல, மகரிஷி பராசரர் அதை எடுத்து உடனே மடுவில் (புஷ்கரிணியில்) சேர்த்து விட்டார். (5—7)

मुनेः प्रभावादमृतरसो व्याप्याखिलं जलम् ।
समन्तादपृथग्भेद्यपुष्पगन्ध इव स्थितः ॥ ॥ ८ ॥
सोऽस्य पुष्करिणीत्याख्यां चकारामृतपूर्विकाम् ।
अमृतं निहितं यस्माज्जलं तदमृतोपमम् ॥ ॥ ९ ॥
सरस्तदाप्रभृत्येवामृतपुष्करिणीति च ।
प्रथितं त्रिषु लोकेषु पावन तीर्थमुच्यते ॥ ॥ १० ॥

முனிவரது வல்லமையினால் அமிருதரசம் தண்ணீரையெல்லாம் சுற்றிப் பரவிற்று. பிரித்தாலும் பிரிக்கமுடியாத பூவின் மணம் போல் இருந்தது. அவர் இதற்கு அமிருதபுஷ்கரிணி என்று பெயரிட்டார். அதில் அமிருதம் சேர்ந்தபடியால் தண்ணீரெல்லாம் அமிருதம்போலாயிற்று அன்றுமுதல் அந்தத் தடாகம் மூவுலகிலும் பெயர் பெற்று புண்யதீர்த்தமென்று சொல்லப்பட்டுவருகிறது. (8-10)

स्नात्वा जलाशये तस्मिन् पीत्वा चाम्बु सुधामयम् ।
निरामयाः सदा तृप्तास्तपश्चक्रुस्तपोधनाः ॥ ॥ ११ ॥
पराशरः प्रसन्नात्मा स्नात्वा पीत्वाऽमृताम्बु तत् ।
तत्र केशवमाराध्य तपः कुर्वन्नुवास सः ॥ ॥ १२ ॥
तपोवनं श्रिया जुष्टं योजनद्वयसंमितम् ।
तरवः पुष्पितास्तत्र सदा तरुणपल्लवाः ॥ ॥ १३ ॥
सा च पुष्करिणी रेजे कह्लारकुमुदोत्पलैः ॥



முனிவர்கள் அந்த மடுவில் நீராடி அமிருதமயமான தண்ணீரை அருந்தி நோயற்ற வாழ்வினராய், எப்பொழுதும் திருப்தியுடன் கூடினவர்களாய்த் தவம் புரிந்துவந்தார்கள் பராசரரும் நீராடி அந்த அமிருதத்தை அருந்தி தெளிந்த மனதுடன் பகவான் கேசவரைப் பூசைசெய்து தவம்புரிந்து வந்தார். அந்த தபோவனம் இரண்டு யோசனை தூரம் நல்ல அழகுடன் விளங்கிற்று. அங்கு மரங்கள் பூக்களால் நிறைந்து காணப்பட்டன. எப்பொழுதும் வாடாத புதிய தளிர்களுள்ளவைகளாய் இருந்தன. அந்த புஷ்கரிணியும் அல்லிமலர் ஆம்பல்மலர் தாமரைமலர் முதலியவைகளால் விளங்கிற்று. (11—13½)

ततः प्रवर्तिते घोरे दुर्भिक्षे द्वादशाब्दिके ।
ग्रहाणां वक्रिमाभूद्वै देवासुरभयंकरः ॥ ॥ १४ ॥
अनावृष्टिनिदानं तदभूज्जगति दारुणम् ।
प्राणिनां दुर्लभं भूमौ पानीयं भोज्यवस्तु वा ॥ ॥ १५ ॥
शाकमूलफलादीनि दुर्लभानि तदाऽभवन् ।
व्यथितं नाभवद्दिव्यामृतं योगान्मुनेः स्थितम् ॥ १६ ॥
तद्दिव्यामृतसंपर्कात् पुष्करिण्या जलं तदा ।
अनावृष्ट्यामपि सदा कूलंकषमिवाभवत् ॥ ॥ १७ ॥
ऋषयः साधवोऽप्यन्ये जना दुर्भिक्षपीडिताः ।
अभिजग्मुर्निदाघार्ताः प्रपामिव तमाश्रमम् ॥ ॥ १८ ॥

इति श्रीब्रह्माण्डपुराणे अगस्त्यनारदसंवादे तञ्जापुरीमाहात्म्ये
द्वितीयोऽध्यायः ॥

பிறகு பன்னிரண்டு வருஷத்திய கடுமையான பஞ்சம் உண்டாகிவிட்டது. தேவர்களும் அசுரர்களும் கலங்கும்படி கிரகங்கள் வக்ரகதியை அடைந்தன. மழையில்லாக் கொடுமை உலகத்தில் மிகவும் பயத்தைக் கொடுத்தது. பூமியில் பிராணிகளுக்கு குடிக்கத் தண்ணீரும், உண்ணுவதற்கு ஆகாரப்பொருள்களும் கிடைக்கவில்லை. காய்கறி, கிழங்கு, பழம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் முனிவர் பராசருடைய யோகசக்தியினால் அந்த திவ்

யாமிருதம் பட்டிலும் ஒரு கெடுதியின்றி இருந்தது. அந்த அமிருதத்தின் சம்பந்தத்தால் புஷ்கரிணியிலுள்ள தண்ணீர் மழையில்லாதபொழுது கூட கரைகளில் அலை அடித்துக்கொண்டிருந்தது. இதரமுனிகளும் மற்றுமுள்ள சாதுமக்களும் பஞ்சத்தில் அடிபட்டு வெயிலில் வாடிப்போய் அணுகும்தண்ணீர்ப்பந்தலைப்போல் அந்த ஆசிரமத்தை நோக்கி வந்து சேர்ந்தார்கள்.

பிர்மாண்டபுராணம், தஞ்சாபுரிமான்மியம்.
இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ॥ तृतीयोऽध्यायः ॥

### மூன்றுவது அத்தியாயம்.

---

अथ दुर्भिक्षपीडार्ताञ्जनांस्तानागतानृषीन् ।
पराशरः प्रहृष्टात्मा प्रत्युवाच सुमान्य च ॥ ॥ १ ॥

आस्वाद्य फलमूलानि पीत्वा चाम्बु सुधामयम् ।
अत्रोपविशतान्योन्यं साधुवृत्त्या यथासुखम् ॥ ॥ २ ॥

इति प्रशस्य तान् सर्वान् ऋषीन् संपूज्य चागतान् ।
मुनिर्विश्वकुटुम्बीवाध्युवासात्र पालयन् ॥ ॥ ३ ॥

பராசரர், பஞ்சத்தினல் துன்பப்பட்டு வந்த மக்களையும் முனிவர்களையும் மகிழ்ச்சியுடன் உபசரித்து, "பழங்கள் கிழங்குகள் அமிருதமயமான தண்ணீர் இவைகளை உண்டு ஒருவர்க்கொருவர் நல்ல மாதிரியாகப் பழகிக்கொண்டு சுகமாய் இங்கே இருங்கள்" என்று சொன்னர். இவ்விதம் அந்த எல்லா இருஷிகளைத் தோத்திரம்செய்து உபசரித்து உலகமே தனதுகுடும்பம்போல எல்லோரையும் பரிபாலித்துக்கொண்டு வசித்துவந்தார். (1—3)

अथ चेरुर्निदाघार्ताः शाल्मलीद्वीपवासिनः ।
सदाराः ससुता भूमावसुराश्चागमोन्मुखाः ॥ ॥ ४ ॥



तञ्जको दण्डकश्चेति तारकश्चेति विश्रुताः ।
पृथिव्यां संचरन्तस्ते क्षुत्पिपासासमन्विताः ॥ ॥ ५ ॥

இலவந்தீவென்று பூமியில் தீவொன்றுண்டு. அதில் தஞ்சகன், தண்டகன், தாரகன் என்று பிரசித்தர்களான அசுரர்கள் மனைவிகளுடனும் பிள்ளைகளுடனும் வசித்தார்கள். அவர்கள் பசிதாகத்தால் வருந்தி அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். வெய்யிலினல் கஷ்டப்பட்டு மகரிஷி இருக்கும் ஆசிரமத்துக்கு வருவதாகத் தயாராயிருந்தார்கள். (4—5)

दूराच्छयामायमानं तं ददृशुस्ते तपोवनम् ।
ते जलाशयबुध्या तदाभिजग्मुस्त्वरान्विताः ॥ ॥ ६ ॥

तमेत्य चैव ददृशुः पराशरतपोवनम् ।
प्रहृष्टजनसंकीर्णं फलमूलोपशोभितम् ॥ ॥ ७ ॥

स्वादुपानीयसंयुक्तं दृष्ट्वा ते विस्मयं गताः ।
अत्यद्भुतमिदं मत्वा पीत्वा चाम्बु रसोत्तरम् ॥ ॥ ८ ॥

भुक्त्वा फलानि ते चक्रुस्तत्रावासं मदोद्धताः ।

தூரத்திலிருந்து பார்க்கும்பொழுது அந்த தபோவனம் கறுத்ததாய்த் தென்பட்டது. அது ஒரு மடு என்று நினைத்து, அவர்கள் அங்கு வேகமாய் ஓடிவந்தார்கள். அது மகிழ்ச்சியுள்ள மக்கள் நிறைந்ததும், கனிகளும் கிழங்குகளும் நிறைந்ததுமான நல்ல சுவையுள்ள தண்ணீர் இருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். நல்ல சுவையுள்ள தண்ணீரை அவர்கள் அருந்தி பழங்களை உண்டு அங்கேயே கர்வமடைந்தவர்களாய் வசித்தார்கள். (6—8)

ततस्तपोवनान्याशु दूषयन्ति स्म ते भृशम् ।
बाधन्ते स्म जनान् सर्वानाश्रमांश्च तपोधनान् ॥ ॥ ९ ॥

मुनिः पराशरः शिष्यैर्ऋषिभिश्च समन्वितः ।
तानासाद्य ततः प्राह गिरा मधुरया पुनः ॥ ॥ १० ॥

मदीयमाश्रममिदं सेवितं साधुभिर्जनैः ।
पवित्रमृषिभिर्जुष्टं बाधध्वे किं महाबलाः ॥ ॥ ११ ॥

वयं मान्या हि भवतामृषयस्तपसि स्थिताः ।
रक्षणीया महावीर्यैर्नित्यमाश्रमवासिनः ॥ ॥ १२ ॥
हिंसां कृत्वा कथं यूयं दुःखं सोढुं समाहिताः ।
सर्वसैन्यैर्महावीरा गच्छतात्रान्यतः स्वयम् ॥ ॥ १३ ॥

அவர்கள் மிகவும் ஆசிரமங்களைக் கெடுத்துவந்தார்கள். ஆசிரமத்தில் இருக்கும் தபோதனர்களைத் துன்புறுத்தினார்கள். இது கண்டு பராசரமகரிஷி தனது சீடர்களுடன் கூடி அவர்களிடம் சென்று இனிமையாய், "இது எனது ஆசிரமம்; நல்ல ஜனங்கள் வசித்துவருகிறார்கள்; புண்ணியமானது; இருஷிகள் இருக்குமிடம்; இதை எதற்காக நீங்கள் பலமுள்ளவர்களாய்த் துன்பப்படுத்துகிறீர்கள். தவம் புரிந்துகொண்டிருக்கும் இருஷிகளாகியநாங்கள் உங்களால் உபசரிக்கவேண்டியவர்களன்றோ? ஆசிரமத்திலிருப்பவர்களை நீங்கள் உங்களுடைய பலத்தைக்கொண்டு காக்கப்படவேண்டியவர்கள் அன்றோ? எங்களைத் தொந்திரவு செய்து அதனால் கஷ்டப்படுகிற எங்களை நீங்கள் எப்படிப் பார்த்துச் சகிக்கிறீர்கள் பெரிய வீரர்களே! நீங்கள் உங்கள் சேனைகளுடன் வேறு இடம் நீங்களாகவே சென்றுவிடுங்கள்" என்று சொன்னார். (9—13)

इत्येतद्वचनं धर्म्यं मुनेः श्रुत्वा मदोद्धताः ।
भर्त्सयन्ति स्म दुर्वृत्ता नश्यतां मतिरीदृशी ॥ ॥ १४ ॥
दुर्वृत्तांस्तान् मुनिर्ज्ञात्वा स्वाश्रमं संप्रविश्य च ।
किं कर्तव्यमिति स्मृत्वाऽचिन्तयत्सुसमाहितः ।
ध्यात्वा चतुर्मुखं देवं ब्रह्माणं कमलासनम् ॥ ॥ १५ ॥
मनसा शिरसा चैव तुष्टाव परमेष्ठिनम् ।
नमः कमलपत्राक्ष नमस्ते विश्वतोमुख ॥ ॥ १५ ॥
प्रसीद कृपया देव त्राहि नः शरणं भवान् ।

இவ்விதம் தருமத்துக்கொத்ததான முனிவர்சொல்லைக் கேட்டு, துஷ்டர்களும் திமிரினால் கர்வப்பட்டவர்களுமான அசுரர்கள் அதட்டினார்கள். கெடுபவர்களுடைய புத்தி இப்படித்தான். முனிவர், அவர்கள் துஷ்டர்கள் என்று தெரிந்து, தனது ஆசிரமத்தில்



சென்று, இனி என்ன செய்யவேண்டியதென்று மனதை நிதானப்படுத்தி ஆலோசித்தார். தாமரையை ஆசனமாகக்கொண்ட நான்முகனான பிரம்மதேவரை பராசரர் தியானம் செய்து தோத்திரம் செய்தார். தலையால் வணக்கம் செய்தார். கமலக்கண்ணனே! வணக்கம்! நாற்புறமும் பார்க்கும் திருமுகத்தையுடையோனே! உமக்கு வணக்கம்! தயவுசெய்யவேணும் உம்மைஅடைக்கலம் புகுந்தோம்! எங்களைக் காக்கவேண்டும்! என்று துதித்தார்கள். (14—16)

स्तुतःस्तुतिभिरित्येवमृषीणां चतुराननः ।
प्रादुरासीन्मुनेरग्रे विधाता हंसवाहनः ॥ ॥ १६ ॥
एते हिंसन्ति दुर्वृत्ता ऋषीन्साधुजनांस्तथा ।
कर्तव्यो भवताह्येषां प्रतीकारो दुरात्मनाम् ॥ ॥ १८ ॥

முனிவர்கள் இவ்விதம் தோத்திரம் செய்ய, அன்னப் பறவையை வாகனமாகக் கொண்ட நான்முகனாகிய பிரம்மதேவர் அவர்களுக்கு முன்பு தோன்றினார். அப்பொழுது முனிவர்கள், இந்த துஷ்டர்கள் முனிவர்களையும் நல்ல ஜனங்களையும் துன்பம் செய்கிறார்கள். இந்த துராத்மாக்களுக்கு ஒருபகை தீர்த்தல் செய்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். (17–18)

इत्येतद्वचनं श्रुत्वा प्रत्युवाच पितामहः ।
तं तथा न वधं जाने तञ्जकादीन् महाबलान् ॥ ॥ १९ ॥
सर्वेषां सृष्टिकर्तारं न हन्ताऽहं कदाचन ।
स्वयं संवर्ध्य संहर्तुं नेच्छेयं तर्हि कंचन ॥ ॥ २० ॥
किंतु प्रथममीशानमभ्यर्थय महामुने ।
उपायेनैव वध्यास्ते विष्णुना ह्यन्यदुर्जयाः ॥ ॥ २१ ॥
इत्युक्त्वा देवदेवश्च तत्रैवान्तरधीयत ।

இது கேட்டு நான்முகக் கடவுள் சொன்னதாவது— மிக்க வலிமையுடையவர்களான தஞ்சகாசுரர்களைக் கொல்வதற்கு நான் ஒரு வழியைப் பார்க்கவில்லை. நானே எல்லாவற்றிற்கும் ஸ்ருஷ்டி கர்த்தா, நானே அவர்களைக் கொல்லுவது ஒருபொழுதும் தகாது, நானே வளர்த்து நானே சொல்வது எனக்கு மனது இல்லை. ஆகையால் முதல் முதல் பரமசிவனைப் பிரார்த்தியும். அவர்

கள் ஒரு யுக்தியினுல்தான் வதம் செய்ய வேண்டியவர்கள். அது வும் விஷ்ணுவினுல்தானுகவேண்டும். வேறு எவராலும் அவர்கள் வெல்ல முடியாதவர்கள் என்று சொல்லி நான்முகக் கடவுள் அங் கேயே மறைந்துவிட்டார். (19—21)

मुनिश्वेशानमभ्यर्च्य ध्यात्वा स्तोत्रमुवाच सः ।
दयानिधे नमस्तुभ्यं प्रसीद परमेश्वर ॥ ॥ २२ ॥

इति मुनिवचनं निशम्य गौरी -
पतिरपि सर्वजनान्तरात्मवर्ती ।
रजत गिरिसमानरूपमाराद्
वृषमधिरुह्य मुनेस्तदाऽऽविरासीत् ॥ ॥ २३ ॥

इति श्रीब्रह्माण्डपुराणे अगस्त्यनारदसंवादे तञ्जापुरीमाहात्म्ये
तृतीयोऽध्यायः ॥

முனிவரும் ஈச்வரனைப் பூசித்துத் தியானம் செய்து தோத்தி ரம் செய்தார். தபோநிதி! பரமேசுவரா! உமக்கு வணக்கம்! தயவு செய்யவேண்டும்! என்று. இப்படி முனிவரின் சொல்லைக் கேட்டுப் பார்வதிநாயகனும் எல்லா மக்களின் உயிருக்குயிராயிருக்கும் பரம சிவனும் வெள்ளிமலைக்குச் சமானமான வடிவை உடைய இருட பத்தின் மேலேறிக்கொண்டு முனிவருக்கு முன் தோன்றினர்.

பிர்மாண்டபுராணம், தஞ்சாபுரி மான்மியம்.
மூன்ருவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ॥ चतुर्थोऽध्यायः ॥

### நான்காவது அத்தியாயம்.

---

तं दृष्ट्वा मुनिरीशानं देवमद्भुतदर्शनम् ।
समभ्यर्च्याब्रवीच्चैनं भूयो भूयः प्रणम्य च ॥ ॥ १ ॥

तञ्जको दण्डकश्चेति तारकश्चेति नामतः ।
कुर्वन्ति स्म तपोविघ्नं दूषयन्ति तपः स्थलम् ॥ ॥ २ ॥

ऋषिसाधूंश्च हिंसन्ति ते हन्तव्याः स्वयंप्रभो ।



முனிவர் பார்க்கப் பார்க்க மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்
கும் திருமேனியுடன் விளங்கும் அந்த சிவபெருமானை வணங்கிப்
பூசை செய்து தெரிவித்துக்கொண்டார். தஞ்சகன், தண்டகன், தார
கன் என்று சொல்லப்படுகிற அசுரர்கள் தவத்துக்கு இடையூறு
செய்கிருர்கள். தவத்துக்குள்ள இடத்தைக் கெடுக்கிருர்கள். முனி
வர்களையும் சாதுசனங்களையும் துன்புறுத்துகிருர்கள். தங்களால்
அவர்கள் அவசியம் கொல்லப்பட வேண்டியவர்கள்:— (1—2)

इति तद्वचनं श्रुत्वा मुनेः स परमेश्वरः ।
कृपानिधिः प्रसन्नात्मा प्रत्युवाच तपोधनम् ॥ ॥ ३ ॥

तञ्जकाद्यसुरा वीरा ममावध्या वरान्विताः ।
वध्यास्ते विष्णुना चैव नियोक्ष्ये चण्डिकां मुने ॥ ॥ ४ ॥

तया निर्वर्तयाभीष्टं दुष्प्रमेयानुभावया ।
इत्युक्त्वा परमेशानस्तत्रैवान्तरधीयत ॥ ॥ ५ ॥

இவ்வாறு முனிவர்கள் சொல்லைக் கேட்டு கருணாநிதியாகிய
சிவபெருமான் தெளிந்த மனதுடன் சொன்னர். "தஞ்சகன்
முதலிய அசுரர்கள் என்னுல் கொல்லத் தகுந்தவர்கள் அல்ல.
அவர்கள் வரம் பெற்றவர்கள். அவர்கள் விஷ்ணுபகவானுல்தான்
கொல்லத்தகுந்தவர்கள்; ஆயினும் நான் சண்டிகாதேவியை அனுப்
புகிறேன்; அவள் மனத்தாலும் எண்ணமுடியாத மிகவல்லமையு
டன் கூடியவள். அவளைக்கொண்டு உமது எண்ணத்தை முடித்துக்
கொள்ளவும்'' என்று சொல்லி அங்கேயே மறைந்துவிட்டார்.(3—5)

सर्वाभरणसंयुक्ता नियुक्ता शूलपाणिना ।
मुनेः समीपमभ्येत्य साऽब्रवीच्छुभया गिरा ॥ ॥ ६ ॥

भवान्नियुक्तकर्माणि कर्तुमीश्वरचोदिता ।
समागताऽहं कर्तव्ये नियोजय महामुने ॥ ॥ ५ ॥

इत्युक्तः स तु रौद्राभां रौद्रीं दृष्ट्वा महामुनिः ।
यथाविध्युपचारैस्तां पूजयामास सुव्रतः ॥ ॥ ८ ॥

சூலாயுதத்தைக் கையில் தரித்தவரான சிவபெருமானால் ஏவப்பட்ட காளியம்மன் எல்லாவிதமான ஆபரணங்கள் பூண்டவளாய் முனிவரின் முன்பு தோன்றி நல்ல சொற்களைக்கொண்டு நான் சிவபெருமானால் உமக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுக்கும்படி ஏவப்பட்டிருக்கிறேன். அதற்காக வந்திருக்கிறேன், எதைச் செய்யவேண்டுமோ, அதைச் சொல்லவும் என்று சொன்னாள். இப்படிச் சொல்லப்பட்டவராய் மகரிஷி பயங்கரமான கோலத்துடன் கூடின உருத்திரனைச் சேர்ந்தவளான காளிகா தேவியைப் பார்த்து முறைப்படி அவளுக்கு வேண்டிய உபசாரங்களைக்கொண்டு பூசையைச் செய்தார். (6–8)

स्वागताद्यैः शुभैर्वाक्यैरनुमान्याब्रवीन्मुनिः ।
तपोवनस्य रक्षार्थं निवासं कुरु शोभने ॥ ॥ ९ ॥

त्वदधीनमिदं रम्यं पवित्रं मत्तपोवनम् ।
हिंसन्ति ये साधुजनांस्तञ्जकाद्याः सुराद्विषः । ॥ १० ॥

तान्निवारय दुर्वृत्तान् विद्रावय महास्त्रनैः ।
तेषां निरसनं कार्यं सर्वथाऽपि प्रयत्नतः ॥ ॥ ११ ॥

यदा ते योद्धुमिच्छन्ति हर्षेण क्रूरनिश्चयाः ।
असुरा निर्दयत्वेन हन्तव्यास्ते त्वया तदा ॥ ॥ १२ ॥

முனிவர், நல்வரவைச் சொல்லி நல்ல வார்த்தைகளால் அவளை உபசரித்து, "தாயே! நீ இந்த தபோவனத்தைக் காக்கவேண்டும். நீ இங்கேயே வசிக்கவேண்டும். அழகியதும் சுத்தமுமான எனது இந்த தபோவனம் உன் சுவாதீனத்திலுள்ளது. தஞ்சகன் முதலிய அசுரர்கள் சாதுக்களைத் துன்பம் செய்கிறார்கள். இந்தக் கொடியவர்களை அதட்டித் திருப்பி ஓட்டவேண்டும். எப்பாடு பட்டாவது அவர்களைத் தொலைக்கவேண்டும். கெட்ட எண்ணமுடைய அவர்கள் எப்பொழுது யுத்தம் செய்ய வருகிறார்களோ, அப்பொழுது கொஞ்சம் கூட இரக்கமில்லாமல் அவர்களைக் கொன்றுவிட வேண்டும்" என்று தெரிவித்துக் கொண்டார். (9—12)

इत्येवं मुनिशार्दूलः कालीं प्रयुयुजे ततः ।
सा तथेति प्रतिज्ञाय ययौ चास्य तपोवनम ॥ ॥ १३ ॥



ददर्शासुरयूथं तदविनीतं मदोद्धतम् ।
पीड्यमानान् मुनीन् साधूञ्जनाननपराधिनः ॥ १४ ॥

दृष्ट्वा तानतिदुर्वृत्तां स्तांश्चुकोप भृशं तदा ।
भर्त्सयामास हुङ्कारैः व्याजहार च तान् प्रति ॥ ॥ १५ ॥

तपोवनमिदं शंभोर्नियोगाद्रक्ष्यते मया ।
तस्माद्गच्छध्वमसुरा यदि जीवितुमिच्छथ ॥ ॥ १६ ॥

இவ்வாறு முனிவர் காளியம்மனை ஏவினார். அம்மனும் அப்படியே வாக்குறுதி கொடுத்து தபோவனம் சென்றாள். மதம் பிடித்துக் கர்வப்பட்டிருக்கும் அந்தக் கொடிய அசுரர்களைப்பார்த்தனள். ஒருவருக்கும் ஒருவிதமான கெடுதி செய்யாதவர்களும் சாதுக்களுமான முனிவர்களை அவர்கள் தொந்தரவு செய்வதைப் பார்த்தாள். அதிக கோபமடைந்தாள். அவர்களை அதட்டி, "இந்த தபோவனத்தை நான் சிவபெருமானின் கட்டளைப்படி காத்துக் கொண்டுவருகிறேன். உலகத்தில் பிழைத்து இருக்க வேண்டுமென்கிற எண்ணம் உங்களுக்கு இருக்குமாயின், நீங்கள் இந்த இடத்தை விட்டு ஓடிவிடுங்கள்" என்று சொன்னாள் (13—16)

इत्येतद्वचनं श्रुत्वा भर्त्सितास्ते सुरारयः ।
अट्टहासं ततः कृत्वा प्रत्यूचुः परुषं तदा ॥ ॥ १७ ॥

तञ्जको धनुरादाय शरवर्षैरवाकिरत् ।
ततः क्रुद्धाऽस्त्रवर्षाणि स्वशस्त्रेण प्रहृत्यच ॥ ॥ १८ ॥

सहसोत्पत्य पादाभ्यां रथं चूर्णीचकार सा ।
मत्वा बलावतीमेनां शक्तिं चिक्षेप दारुणाम् ॥ ॥ १९ ॥

शक्तिं छित्त्वा च शूलेन तद्वक्षसि जघान सा ।
विद्धः शूलेन महता पपात भुवि मूर्छितः ॥ ॥ २० ॥

இப்படி அதட்டப்பட்ட அசுரர்கள் அட்டகாசம் செய்தார்கள். கடுமையான சொற்களைச் சொன்னார்கள். தஞ்சகன் தனது வில்லை எடுத்துப் பாணமழை பொழிந்தான். அதனால் ரோஷமூண்டாகி காளியம்மன் தனது ஆயுதத்தினால் அதைத்தடுத்தாள்.

திடீரென்று மேலே கிளம்பினாள். தனது கால்களால் அவனது இரதத்தைப் பொடிப் பொடியாய் அடித்துவிட்டாள். அப்பொழுது அந்த அசுரர்கள் இவள் ஒரு பெரிய பலசாலினி என்று தெரிந்து அவள்மேல் "சக்தி" என்ற தனது ஆயுதத்தை எறிந்தாள். அந்த சக்தியென்றும் ஆயுதத்தைத் தனது சூலத்தினால் துண்டித்து, அவன் மார்பில் அதனால் அடித்தாள். சூலத்தால் அடிபட்டவுடன் அந்த அசுரன் திடீரென்று பூமியில் விழுந்தான்.

इति सुररिपुनाथेष्वाहतेष्वन्यदैत्याः
समरनिहतशेषा निर्ययुर्भीतभीताः ।
विजितरिपुरथैषा सिंहनादं च कृत्वा
निरगमदपरेषां सौम्यवेषाऽऽजिभूमेः ॥ ॥ २१ ॥

इति श्रीब्रह्माण्डपुराणे अगस्त्यनारदसंवादे तञ्जापुरीमाहात्म्ये
चतुर्थोऽध्यायः ॥

இப்படி அசுரர்களின் தலைவர்கள் அடிபட்டுக் கீழே விழுந்ததும் எஞ்சியுள்ள அசுரர்கள் பயந்து ஓடிப்போய்விட்டார்கள். தேவி காளியம்மன் இவ்விதம் பகைவர்களை வென்று சிம்மநாதம் செய்து கொண்டு பார்வைக்கு நல்ல வேடம் பூண்டவளாய் யுத்தபூமியிலிருந்து வெளிப்பட்டாள். (21)

பிரும்மாண்டபுராணம், தஞ்சாபுரி மான்மியம்,
நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ॥ पञ्चमोऽध्यायः ॥

### ஐந்தாவது அத்தியாயம்.

---

सा गत्वा मुनिशार्दूलं वृत्तान्तं सम्यगब्रवीत् ।
निशम्य स च सुप्रीतः साधु साध्वित्युदाहरत् ॥ ॥ १ ॥



तञ्जकाद्याः सुराः सर्वे लब्धसंज्ञा गतव्यथाः ।
रणभूमिगताः सर्वे समाश्वस्यामृताम्बुना ॥ ॥ २ ॥
चक्रुर्निनादमत्युच्चैर्विद्रुतागमनाय ते ।

காளிகாதேவி முனிவரிடம் சென்று நடந்த வரலாற்றை நடந்தபடித் தெரிவித்தாள். அதுகேட்டு முனிவர், நல்லது, என்றுமகிழ்ந்தார். தஞ்சகன் முதலிய அசுரர்கள் எல்லாரும் அமிருதபானத்தினால் ஆசுவாசமடைந்து சிரமங்கள் தீர்ந்து உணர்ச்சியுள்ளவர்களாகி யுத்தகளத்தில் சென்று வெருண்டோடிய மற்ற அசுரர்கள் திரும்பியும் வந்து சேருவதற்காக உரக்கச் சத்தம் போட்டார்கள். (1—2)

तं निनादं निशम्याथ मुनिर्देवीमुवाच सः ।
त्वया क्षता हि ते दैत्या घोषयन्ति कथं हताः ॥ ॥ ३ ॥

इत्युदाहृतमाकर्ण्य सा देवी लज्जयाऽन्विता ।
अभ्यागच्छदतिक्रुद्धा समीकं यत्र तत्र वै ॥ ॥ ४ ॥

முனிவர் அந்த சப்தத்தைக் கேட்டு தேவியைப் பார்த்துச் சொன்னார். உம்மால் அந்த அசுரர்கள் அடிக்கப்பட்டார்களன்றே. அடிபட்டவர்கள் மறுபடி சத்தம் போடுகிறார்களே, என்ன ? இதுகேட்டு தேவி வெட்கப்பட்டு மறுபடியும் யுத்தகளத்தை நோக்கிச் சென்றனள். (3—4)

बहूनि दिवसान्येव युद्धं चक्रे सुदारुणम् ।
अमृताम्बुबलेनासन्नहतास्ते सुरद्विषः ॥ ॥ ५ ॥
दृष्ट्वा समुत्थितानद्य भर्त्स्यमानान् मुहुर्मुहुः ।
तञ्जकादींश्च सा मेने दुर्जयानमृताम्बुना ॥ ॥ ६ ॥
सा समेत्य मुनिश्रेष्ठं व्रणकोटिसमन्विता ।
वर्तते यावदमृतं तावत्ते दुर्जयास्त्विह ॥ ॥ ७ ॥

அநேக நாட்கள் கடுமையான யுத்தம் செய்தனள். அந்த அசுரர்கள் அமிருதம் கலந்த தண்ணீரை அருந்தி அதனாலுண்டான பலத்தினால் எவ்வளவு அடிபட்டும் இறப்பதில்லை. தேவி

இதுகண்டு, இவர்களை வெல்லமுடியாதென்று கருதி, முனிவரிடம் சென்றாள். உடல் முழுவதும் கோடிக்கணக்கான காயங்கள் ஏற்பட்டிருந்தது. முனிவரே! எதுவரையில் அமிருதம் இங்கு இருக்கிறதோ, அதுவரையில் அவர்களை வெல்வது மிகவும் கஷ்டம் எனச் சொன்னாள். (5-7)

व्रणकोटिविभूषां तां समाश्वास्येदमब्रवीत् ।
किंचिद्विश्रम्यतां देवि वधोपायो विचिन्त्यते ॥ ॥ ८ ॥

தேகமுழுவதும் புண்கள் ஏற்பட்டும் அவை தேவிக்கு அணிகளாகவே தோன்றிற்று. 'தாயே! சற்று களைப்பாறலாம். நான் இவர்களைக் கொல்லுவதற்குள்ள வழியைத் தேடுகிறேன்.' (8)

इत्युक्त्वा तां विसृज्यैष मुनिर्ध्यानपरायणः ।
हरिं परां गतिं बुद्ध्वा तुष्टाव मधुसूदनम् ॥ ॥ ९ ॥

प्रसीद स्वात्मना विष्णो प्रसीद पुरुषोत्तम ।
अहं रक्षोगणाद्भीतस्त्वामेव शरणं गतः ॥ ॥ १० ॥
इति संकीर्तनपरे मुनौ ध्यानपरायणे ।
प्रादुरासीच्छ्रिया सार्धं नीलमेघाभिधो हरिः ॥ ॥ ११ ॥

என்று சொல்லி முனிவர் காளியம்மனை அனுப்பிவிட்டுத் தியானம் செய்தார். விஷ்ணுவே பரகதி என்று தெரிந்து அவரைத் தோத்தரித்தார் புருஷர்களில் சிரேஷ்டரான பகவானே! மகாவிஷ்ணுவே! தயவு புரியவேண்டும். நான் அரக்கர் கூட்டத்திலிருந்து மிகவும் பயந்தவனாகிறேன். நீரே எனக்குத் துணை. உம்மையே அடைக்கலம் புகுந்தேன். இவ்விதம் முனிவர் கீர்த்தனம் செய்துகொண்டு ஒரே மனதாய்ப் பகவானைத் தியானம் செய்ய உடனே பகவான் நீலமேகப்பெருமாள் பிராட்டியுடன் திடீரென்று தோன்றினார். (9--11)

नीलनीरदरूपेण लसन् गगनमास्थितः ।
स्वरूपं विलसत्पद्मातडिद्भासा विराजितम् ॥ ॥ १२ ॥

பகவான் சர்வேசுரன் கறுத்த நீருண்ட மேகம்போன்ற வடிவத்துடன் மின்னல்வேடம் பூண்டு ஒரே ஒளிவடிவமாய் விளங்கும் ஸ்ரீபிராட்டியுடன் கூட அங்கே விளங்கினார். (12)



किमिदं रक्षसां माया दैवी वा वैष्णवी तथा ।
ऋषिभिर्भ्रान्तचेतोभिरीक्ष्यमाणः ससंभ्रमैः ॥ ॥ १३ ॥
अमृताशयमभ्येत्य निःशेषममृतं जलात् ।
हंसः क्षीरं यथा विष्णुरन्वादाय च तत्पपौ ॥ ॥ १४ ॥

இது என்ன வியப்பு, இது அரக்கர்களின் மாயையோ, அல்லது தேவியின் மாயையோ, அல்லது மகாவிஷ்ணுவின் செய்கையோ! என்று முனிவர்கள் பார்த்துப் பார்த்து மிகவும் பிரமிக்கலானார்கள். மனது கலங்கி நின்றார்கள். உடனே பகவான் கிருபாநிதி அமிருதபுஷ்கரிணியை அடைந்து அதிலுள்ள தண்ணீரிலிருந்து அமிருதத்தைக் கொஞ்சமும் மிச்சமில்லாமல் எப்படி அன்னப்பறவை நீரில் கலக்கப்பெற்ற பாலைத் தனித்து உட்கொள்ளுமோ அப்படிப் பிரித்து அருந்திவிட்டார். (13—14)

ततः प्रसन्नवदनः शङ्खचक्रधरो हरिः ।
स्वरूपं दर्शयामास मध्ये मेघश्रिया सह ॥ ॥ १५ ॥
पराशरः प्रसन्नात्मा सेवित्वा पुरुषोत्तमम् ।
मनसा पूजयामास प्रणम्य शिरसा भुवि ॥ ॥ १५ ॥
स्तुवन्नुवाच भगवन् प्रसीद कृपयाऽच्युत ।

பிறகு, பகவான் சங்கு சக்கரம் தரித்தவராய்த் தெளிந்த திருமுகத்துடன் நீலமேகவடிவத்துடன் சேவை சாதித்தருளினார். முனிவர் பாராசரர் மனம் குளிர்ந்து பகவானை நன்றாய் சேவித்து தலையால் வணங்கி மனதாலேயே பூசை செய்தார்; துதித்தார்; பகவானே அருள் செய்யவேண்டுமென்று வேண்டினார். (15—16)

निजगाद हरिर्वत्स तव भक्त्या स्तवेन च ।
प्रीतः प्राप्तोऽस्मि वात्सल्याज्जानामि तव वाञ्छितम् ॥१७॥
अवज्ञायेन्द्रवचनममृतं निहितं भुवि ।
त्वया सरसि यत्नेन वृद्धिस्तस्माद्धि रक्षसाम् ॥ ॥ १८ ॥

आहृतं तद्विशेषेण जीवितं च सुरद्विषाम् ।
हनिष्यामि च तान् दैत्यान् स्वस्थो भव दृढव्रत ॥ १९ ॥

அப்பொழுது பகவான் மகாவிஷ்ணு, "அப்பா, குழந்தாய்! உன்னுடைய பக்திக்காகவும் துதிக்காகவும் மகிழ்ச்சியுற்று உன்னிடத்தில் அன்பினல் இங்கு வந்தேன். உன்னுடைய விருப்பத்தை நான் அறிவேன். இந்திரனுடைய சொல்லைத் தட்டி பிடிவாதமாய்க்குளத்தில் உன்னல் அமிருதம் சேர்க்கப்பட்டது. அதனல் அரக்கர்களுக்கு வளர்ச்சி ஏற்பட்டது. அதனல் பாதகமில்லை. அவர்களை நான் கொன்றுவிடுகிறேன். கவலை இல்லாமல் மனச்சமாதானத்துடன் இரு" என்று சொன்னர். (17—19)

सर्वज्ञः सर्वभूतानामन्तरात्मा स्वयं भवान् ।
पाहि साधूनपायेभ्यो जननीवत् स्तनंधयम् ॥ ॥ २० ॥
हरिश्च शार्ङ्गमादाय शरवर्षैः सलीलया ।
रक्षसामन्धतमसं जघानौघं रविर्यथा ॥ ॥ २१ ॥
सहसा हरिबाणाग्नावापतद्रक्षसां महत् ।
नश्यति स्म बलं सर्वमथ वार्ह्नि पतङ्गवत् ॥ ॥ २२ ॥

इति श्रीब्रह्माण्डपुराणे अगस्त्यनारदसंवादे तञ्जापुरीमाहात्म्ये
॥ पञ्चमोऽध्यायः ॥

அப்பொழுது பகவானைப் பார்த்து, "நீர் எல்லாமறிந்தவர்; எல்லாப் பிராணிகளுடைய மனதில் நீர்தான் இருப்பவர்; குழந்தையைத் தாயார் எப்படிக் காக்கிருளோ அதுபோல சாதுசனங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று துதித்தார். பகவான் மகாவிஷ்ணுவும், சூரியன் இருட்டைப் போக்குவதுபோல விளையாட்டாகவே அரக்கர்களாகிற இருட்டைத் தனது சார்ங்கமென்னும் வில்லை எடுத்து பாணங்களால் தீர்த்துவைத்தார். பிறகு அந்த அரக்கர்களுடைய சேனை முழுவதும் மகாவிஷ்ணுவின் பாணமாகும் தீயில் விட்டிற் பூச்சிகள்போல விழுந்து மடிந்தன. (20—22)

பிரும்மாண்டபுராணம், தஞ்சாபுரிமான்மியம்,
ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## ॥ षष्ठोऽध्यायः ॥

### ஆறுவது அத்தியாயம்,

ततो दैत्याधिपाः क्रुद्धास्त्रयस्ते स्वबलक्षयात् ।
हरिमेवाभ्यधावन्त भीषणा भीषणायुधाः ॥ ॥ १ ॥
तेष्वागच्छत्सु सा काली प्रणम्य हरिमब्रवीत् ।
दीयन्तां भगवन् दैत्या मह्यं युद्धाय कल्पिताः ॥ ॥ २ ॥
एषां वधार्थमीशेन चोदिताऽहं जनार्दन ।
स्थितायां मयि दुर्वृत्तैः कथं योद्धुमिहार्हसि ॥ ॥ ३ ॥
इत्येवं प्रार्थयन्तीं तामुवाच गरुडध्वजः ।
मायया च महावीरानिमान् विद्धि सुदुर्जयान् ॥ ॥ ४ ॥
यद्येवं योद्धुकामाऽसि तेषामन्यतमेन वा ।
कनीयांस्तारको दत्तस्तमेनं हन्तुमर्हसि । ॥ ५ ॥
इत्युक्तवति वैकुण्ठे तथेति प्रणिपत्य सा ।
तारकं प्रतिजग्राह तया युद्धं चकार सः ॥ ॥ ६ ॥

பிறகு, அசுரர்களுக்குத் தலைவர்களாகிய அம்மூவரும், தங்கள்
சேனை அழிவதைப்பார்த்துக்கோபத்துடன் பயங்கரமான ஆயுதங்
களை எடுத்துக் கொண்டு பார்ப்பவர்களுக்குப் பயத்தை உண்டுபண்
ணிக்கொண்டு பகவானை எதிர்த்து வந்தார்கள். அவர்கள் அவ்விதம்
வரும்பொழுது காளிகாதேவி பகவானை அடிபணிந்து தெரிவித்துக்
கொண்டாள். சுவாமி பகவானே! என்னுடன் போர் புரியும்படி
ஏற்பாடு செய்து, இவர்கள் என்னிடம் ஒப்புவிக்கப்படட்டும்.
இவர்களைக் கொல்லுவதற்காகவே நான் சிவபெருமானல் அனுப்பப்
பட்டவள். நான் இருக்கும்பொழுது இந்தக் கொடியவர்களுடன்
தேவரீர் எதற்காக யுத்தம் செய்யவேண்டும்?" என்று வேண்டிக்
கொள்ளும் காளிகாதேவியைப் பார்த்துக் கருடக் கொடியையுடைய
பகவான் "இவர்கள் மகாமாயாவிகள், மகாவீரர்கள்! இவர்களை
வெல்லுவது மிகவும் கஷ்டம். உனக்கு அவர்களில் ஒருவரோ

டாவது போர்புரிய வேண்டுமென்று ஆவலிருந்தால் அவர்களில் சிறியவனுகிய தாரகன் என்பவனைக் கொடுக்கிறேன்; அவனைக் கொல்வாயாக'' என்று சொல்லவே, தேவியும் நல்லது, அப்படியே, என்று வணங்கித் தாரகனுடன் போர்புரிந்தாள். அவனும் இத் தேவியுடன் யுத்தம் செய்தான். (1—6)

अन्यौ पुनस्तथा दैत्यौ हरिमेवाभिगम्य तौ ।
चक्रतुस्तुमुलं युद्धं शरवर्षैः समन्ततः ॥ ॥ ७ ॥
दैत्यैर्नानाविधास्त्राणि दिव्यास्त्राणि च केशवे ।
प्रयुक्तानि च सर्वाणि पुष्पमञ्जुलतां ययुः ॥ ॥ ८ ॥
युद्धेन महताप्येतौ युक्तेनापि जिगीषया ।
मायया च महाविष्णुं न शेकुर्जेतुमच्युतम् ॥ ॥ ९ ॥
लीलया सशरं शार्ङ्गं यावन्न कुरुते हरिः ।
तावत् स्वपक्षपातेन तार्क्ष्यो योधयति स्म तौ ॥ ॥ १० ॥
चण्डेन पक्षमरुता सम्भ्रान्तौ रथसैनिकौ ।
ससर्पतुर्वेगवशात् सागरोर्मिगताविव ॥ ॥ ११ ॥
तयोरनुगतान् सर्वान् वाहांश्चैव रथध्वजान् ।
सञ्जहार शरैर्विष्णुर्धनुश्चैव च सारथिम् ॥ ॥ १२ ॥
कालदण्डोपमं दण्डमादाय सहसाऽऽपतन् ।
तञ्जकः प्राहरत्तार्क्ष्यं स च दण्डमपाहरत् ॥ ॥ १३ ॥
शतघ्नीं प्राक्षिपत्तूर्णं दण्डकः सालमुन्नतम् ।
तञ्जकश्च महाशैलं तत्सर्वं व्यर्थतां ययौ ॥ ॥ १४ ॥
मतङ्गजत्वमास्थाय तञ्जकोऽपि ययौ ततः ।
करेणोद्धृतसालेन दन्तैर्मुसलभीषणैः ॥ ॥ १५ ॥
तमापतन्तमालोक्य ततो वज्रनिभैर्नखैः ।
नृसिंहत्वमुपास्थाय हरिश्चाऽऽगत्य वेगतः ॥ ॥ १६ ॥
आक्रम्य मस्तकं यावद्भिद्यते हरिणा नखैः ।
हित्वा तद्रूपमसुरस्तावत्खड्गधरोऽभवत् ॥ ॥ १७ ॥



खड्गखेटधरं दैत्यं प्रहरन्तं महाबलः ।
अङ्कमारे पयामास हठात्केशग्रहेण सः ॥ ॥ १८ ॥
आक्रम्य पाणिपादं च शिरः शत्रोः स्वबाहुभिः ।
इयेष हृदयं भेत्तुं तेन चाभ्यर्थितो हरिः ॥ ॥ १९ ॥

மற்ற இரண்டு அசுரர்களும் பகவானை எதிர்த்துச் சென்று அம்புகளைப் பெய்துகொண்டு மிகவும் கடுமையானயுத்தம் செய்தார் கள். அவர்களால் பகவான்மேல் எறியப்பட்ட எல்லா அம்புகளும் மலர்கள்போல மெதுவான தன்மையை அடைந்தன. ஜயிக்கவேணு மென்ற எண்ணத்துடன் இவ்விருவரும் பெரியதோர் போர் புரிந் தாலும், மாயையைக்கொண்டு மகாவிஷ்ணுவை வெல்ல அவர்க ளால் முடியவில்லை. பகவான் எதுவரையில் தனது சார்ங்கம் என்னும் வில்லில் வேடிக்கையாக அம்புகளைக் கோர்க்கவில்லையோ, அதற்குள்ளாக ஸ்ரீ கருடன் அவர்களுடன் யுத்தம் செய்தார். அவரது கடினமான சிறகின் காற்றினால் இரதமும் சேனைக்காரனும் கலங்கிவிட்டார்கள். அவர்கள் காற்றின் வேகத்திலுட்பட்டு சமுத் திரத்தின் திரைமாலையில் அகப்பட்டவர்கள்போலத் தடுமாறினார்கள். பகவான் விஷ்ணு அவர்களுடன் வந்தவர்களையும், குதிரைகளையும், இரதம், கொடி முதலியவைகளையும் அழித்துவிட்டார். தேரோட் டியையும் அவனது வில்லையும் தொலைத்துவிட்டார். காலதண்டத் துக்கு ஒப்பான தண்டமென்னும் ஆயுதத்தை எடுத்துக்கொண்டு வந்து தஞ்சகன் கருடனையடிக்கவும், அவர் உடனே அந்த தண் டத்தைக் கீழேவிழும்படி செய்தார். தஞ்சகனும் பெரியதோர் மலையைப் பிடுங்கி எறிந்தான். ஆனால் அவை எல்லாம் பயன்பட வில்லை. வீணாகிவிட்டன. சதக்னி என்னும் ஆயுதத்தை எறிந் தான். தண்டகன் ஆச்சாமரத்தைப் பிடுங்கி எறிந்தான். தஞ்ச கன் யானைவடிவமெடுத்து துதிக்கையினால் ஆச்சா மரத்தைக் கொண்டும் உலக்கைபோன்ற பயங்கரமான தந்தங்களினாலும் யுத் தம்செய்தான். உடனே பகவான் நரசிம்மவடிவமெடுத்து வேகமாய் வந்து அவனது தலையைப் பிடித்து அவரது நகங்களினால் குத்திக் கிழிக்கும்பொழுது, உடனே அவ்வசுரன் தனது யானைஉருவத்தை விட்டு கையில் கத்தியை எடுத்துக்கொண்டான். கத்தியையும் கேடயத்தையும் கையில் பிடித்து அடித்துவரும் மிக வலிமை யுடைய அந்த அசுரனை அவனது மூடிகளில் பிடித்து இழுத்து

பகவான் விஷ்ணு தனது மடியில் போட்டுக்கொண்டு அவனுடைய கை, கால், தலை, முதலியவைகளை தமது கைகளால் ஆக்ரமித்து அவனுடைய மார்பைப் பிளப்பதற்கு முயற்சித்தார். உடனே, அவன் பகவானை வேண்டிக்கொண்டான். (7—19)

भवता वध्यमानस्य प्रार्थनीयं तु विद्यते ।
तथापि लोकलुब्धेन प्रार्थयामि वरं विभो ॥ ॥ २० ॥
नृसिंहं यदिदं रूपं मदर्थं भवता धृतम् ।
अनेनैव स्वरूपेणोपवेष्टुमिहार्हसि ॥ ॥ २१ ॥
किंचेयं नगरी पुण्या प्रथिता लोकपावनी ।
तञ्जापुरीति भगवन् प्रथिताऽस्तु ममाऽऽख्यया ॥ ॥ २२ ॥

சுவாமியே! தம்மால் நான் கொல்லப்படுகிறேன், உலகத்தில் வாழ்வில் விருப்பத்தால் ஒரு வரனை வேண்டிக்கொள்கிறேன். இப்பொழுது எனக்கு ஒரு வேண்டுகோள்தான் உண்டு. என்னிமித்தம் தேவரீர் நரசிம்ம உருவத்தைத்தரித்தீர். இந்தவடிவமாக இங்கேயே சேவை சாதித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கவேண்டும் இந்தப் பட்டணம் புண்ணியமாயும், பிரசித்தியுள்ளதாயும், மக்களை பரிசுத்தப்படுத்துகிறதும், எனது பெயரைக்கொண்டு 'தஞ்சாபுரி' என்று பிரசித்தமானதுமாக இருக்கும்படி அருள்செய்ய வேண்டும் என்றான். (20—22)

इत्युक्तवति दैत्येन्द्रे प्रतिश्रुत्य वरं हरिः ।
नखैर्विपाटयामास तं हिरण्यं यथा पुरा ॥ ॥ २३ ॥
हतं तमसुरं दृष्ट्वा दण्डको भयविह्वलः ।
भुवं विभिद्य हस्ताभ्यां प्रविश्यानुद्रुतं ययौ ॥ ॥ २४ ॥

இப்படி அசுரன் வேண்டிக்கொள்ளவும், பகவான் அப்படியே ஆகட்டும் என்று வரம்கொடுத்தார். முன்னொரு காலத்தில் எப்படி இரணியாசுரனை பகவான் நகங்களால் பிளந்தாரோ, அதேபோல் இவனையும் பிளந்தார். தஞ்சகன் இப்படிக் கொல்லப்பட்டதைப் பார்த்து தண்டகன் பயந்து நடுங்கிப் பூமியைத் தனது கைகளால் பிளந்து கொண்டு வேகமாய் அதில் நுழைந்து ஓடினான். (23—24)



वाराहं वपुरास्थाय चान्वगच्छत् स तं हरिः ।
भूमावन्तर्गतं ज्ञात्वा धावन्तं स्थलवर्त्मना ॥ ॥ २५ ॥
स विष्णुना द्रुतो दैत्यो ययौ पातालवर्त्मना ।
स करोत्खातगूढेन, उदीचीं योजनत्रयाम् ॥ ॥ २६ ॥
अतीत्य तद्गतिं वेगाच्छ्रीवराहोऽग्रतो गतः ।
स्थितश्चावृत्य तन्मार्गमागतं तं जघान च ॥ ॥ २७ ॥

பகவான் பன்றியுருவங்கொண்டு அவனைப் பின்தொடர்ந்து சென்றார். அவன் பூமிக்குள் மறைந்து தரைவழியாய் ஓடினான். பகவான் அதைக்கண்டு அவனைத் துரத்தினார். அவன் பாதாளவழியாய் தனது கைகளினால் பறித்து வடக்கே மூன்றுயோஜனை தூரம் ஓடத் தலைப்பட்டான். பகவான் அவனுடைய வேகத்தைக் கடந்து வேகமாய்ஓடி அவனுக்கு முன்னால்போய் நின்றார். அவன் வரும்வழியை மறைத்துக்கொண்டு அவன் வந்தவுடன் அவனைக் கொன்றார்.

प्रतिश्रुतवरस्तस्मै वधकाले सुरद्विषः ।
श्रीमद्वराहरूपेण तत्राऽस्त तद्वधस्थले ॥ ॥ २८ ॥
तारकश्च महद्युद्धं कृत्वा देव्या तया सह ।
परिक्षीणबलस्त्रस्तो भूतलातान्निरतो ययौ ॥ ॥ २९ ॥
एकयोजनमात्रे तु प्रतीच्यामुदकाशये ।
उत्थितं तमनुद्रुत्य स्वशूलेन जघान सा ॥ ॥ ३० ॥
तं निहत्य महावीर्यं विष्णुमभ्येत्य साऽब्रवीत् ।
निहतस्तारको देवेत्युक्त्वा च प्रणनाम सा ॥ ॥ ३१ ॥
निहतस्तारको देवि महद्युद्धं त्वया कृतम् ।
अतस्त्वमेकवीराऽसीत्यभिनन्द्याब्रवीत्स ताम् ॥ ॥ ३२ ॥
एवं हतेषु दैत्येषु विष्णुनाऽमिततेजसा ।
देवदुन्दुभयो नेदुः पुष्पवृष्टिः पपात च ॥ ॥ ३३ ॥
निवृत्तदेवकार्यं तमभिनान्दितुमागताः ।
देवाश्चेन्द्रादयो ब्रह्मरुद्रसिद्धमुनीश्वराः ॥ ॥ ३४ ॥

ते प्रणम्य हरिं सर्वे ऋषयः किन्नरादयः ।
अभिनन्द्य स्तुवन्ति स्म जयशब्दैः समन्ततः ॥ ॥ ३५ ॥
पराशरश्च धर्मात्मा प्रणम्य शिरसा हरिम् ।
ब्रह्माणं शङ्करं चान्यान् यथार्हं समपूजयत् ॥ ॥ ३६ ॥
हरिं प्रोवाच भगवन् कृतार्थोऽस्मि न संशयः ।
इदं तपःस्थलं रम्यमभूत्पावनमद्य मे ॥ ॥ ३७ ॥
अनेनैव स्वरूपेण चिराय कमलासख ।
उपविश्य स्थले रम्ये पातुं लोकमिहार्हसि ॥ ॥ ३८ ॥
अनुग्रहाय भक्तानां क्षेमाय जगतामपि ।
इहासीनः स्थले रम्ये मत्सेवां प्रतिपालय ॥ ॥ ३९ ॥
पुण्या पुष्करिणी चेयं स्थलं पावनमस्त्वदम् ।
प्रार्थितं मे वरं देहि कृपया भक्तवत्सल ॥ ॥ ४० ॥

தண்டகாசுரனைக் கொல்லும்பொழுது அவன் வேண்டிக் கொண்டதைப் பகவான் அளித்தார். அப்படியே வராகமூர்த்தியாய் பகவான் அவனைக்கொன்ற இடத்திலேயே எழுந்தருளியிருக்கிறார். தாரகாசுரனும் காளிகாதேவியுடன் போர்புரிந்து களைத்து பலம் குறைந்து பயந்து, பூமியில் மறைந்துசென்றான். மேற்கு ஒரு யோசனை தூரத்தில் ஒரு மடுவில் முழுகிக்கிளம்பின அவ்வசுரனை காளிகாதேவி பின்தொடர்ந்து, தனது சூலாயுதத்தால் அடித்துக் கொன்றாள். உடனே காளிகாதேவி பகவானிடம் வந்து, சுவாமியே! தாரகனைக் கொன்றுவிட்டேன் என்று தெரிவித்துக்கொண்டு வணங்கினாள். தேவி! உன்னால் தாரகன் கொல்லப்பட்டான். பெரியதோர் போர் நீ புரிந்தாய். ஆனதுபற்றி 'ஏகவீரை' என்ற பெயர் உனக்கு ஏற்பட்டுவிட்டது என்று காளிகாதேவியின் திறமையைக் கொண்டாடித் திருவாக்கருளினார். இப்படி பகவானால் அசுரர்கள் கொல்லப்பட்டபொழுது தேவ துந்துபி வாத்தியங்கள் முழங்கின. பூமாரி பொழிந்தது. தேவர்களுடைய காரியத்தையும் அவர்களுக்குரித்த உதவியையும் செய்து முடித்தவராகிய பகவானைக்கண்டு சந்தோஷத்தைத் தெரிவிக்க தேவர்களும், இந்திரன்முதலியவரும், ருத்திரன், சித்தர்கள்,



மாமுனிவர்கள், மற்றுமுள்ளவர்களும், கின்னரர்களும், மகரிஷிகளும், அங்கு வந்தார்கள். பகவானை வணங்கினார்கள். ஜய ஜய என்று சொல்லி ஜயகோஷம் செய்து பகவானைத் துதிசெய்தார்கள். தார்மிகரான பாராசரமகரிஷி பிரம்மதேவனையும் சங்கரரையும் இன்னும் மற்றுமுள்ளவர்களையும் பெருமைக்குத் தக்கவாறு பூஜை செய்தார். பகவானை வணங்கி பகவானிடம் தெரிவித்துக்கொண்டார். அடியேன் இன்று பாக்யவானானேன்! எனது காரியம் கைகூடியது சந்தேகமில்லை. இந்த தவத்திற்காகவுள்ள இடம் நேர்த்தியாகவும், பரிசுத்தமுமாகிவிட்டது. சுவாமி! இந்த வடிவத்துடனும் இலக்குமிதேவியுடனும் வெகுகாலம் இந்தத் திருப்பதியில் எழுந்தருளியிருந்து அடியேனுக்குச் சேவை சாதித்தருளவேண்டும். இலக்குமிதேவிக்குத் தோழராயிருக்கும் எம்பெருமானே! தேவரீர் இந்த உருவத்துடனே உலகத்தைக் காக்கவும் பக்தர்களை அனுக்கிரகிக்கவும் உலகத்துக்கு நன்மையை விளைவிக்கவும் இங்கேயே எழுந்தருளியிருக்கவேணும். இந்தப் புஷ்கரிணியும் இந்த தலமும் பரிசுத்தமாகட்டும். அடியேன் வேண்டிக்கொண்ட இந்த வரனைக் கொடுத்தருள்புரியவேணும். பகவானே! என்றார். (28—40)

इत्येवं प्रार्थयन्तं तं मुनिं स पुरुषोत्तमः ॥ ॥ ४१ ॥
तथेति वरदानेनान्वग्रहीत् प्रीतिपूर्वकम् ।
सुरा ब्रह्मादयः सेन्द्रा ऋषिसिद्धमुनीश्वराः ॥ ॥ ४२ ॥
यथागतं युयुर्विष्णुमापृच्छय कुशलोत्तराः ।
पराशरोऽर्चयामास श्रिया सार्धं जगत्पतिम् ॥ ॥ ४३ ॥
नीलमेघं प्रतिष्ठाप्य वैखानसविधानतः ।
स तेनाराधितो विष्णुर्लोकानुग्रहकारणात् ॥ ॥ ४४ ॥
प्रतिश्रुतवरस्तस्मै तञ्जाकयाद्भुताकृतिः ।
तत्राऽस्ते नीलमेघाख्यः श्रिया नीलाम्बुदच्छविः ॥ ४५ ॥

இப்படி வேண்டிக்கொள்ளும் பராசருடைய வேண்டுகோளுக்கிணங்கிப்பகவான் புருஷோத்தமன் அப்படியே ஆகட்டுமென்றுவரம் கொடுத்து அன்புடன் அனுக்ரகித்தார். பிரம்மதேவன்முதலியதேவர்கள், இந்திரர் மாமுனிவர்கள், சித்தர்களும் பகவான் விஷ்ணுவைத்

தொழுது அவரிடம் உத்திரவு பெற்று நல்ல சௌக்கியத்துடன் வந்தவிடம் திரும்பிச்சென்றார்கள். பராசரமகரிஷியும், இலக்குமி தேவியாருடன் நீலமேகக்கடவுளை அங்கே எழுந்தருளச்செய்து, 'வைகாநஸ' ஆகமவிதிப்படி பூஜை செய்துகொண்டுவந்தார். இவ்விதம் அவரால் பூஜை செய்யப்பெற்ற திருமால் உலகத்தைக் காக்க வேணுமென்ற காரணங்கொண்டு தஞ்சகனுக்கு கேட்ட வரனையளிப்பதாக வாக்கு அருளி சொடுத்து நீண்டகாரின் வேடம்பூண்டு பகவான் நீலமேகனென்றதிருநாமத்துடன் அங்கு சேவைசாதித்து வருகிறார்.

श्रीनृसिंहोऽपि भगवांस्तत्राऽऽस्ते तद्वधस्थले ।
ब्रह्माणं शंकरं चैव प्रार्थयित्वा मुनिस्तदा ॥ ॥ ४६ ॥
प्रतिष्ठाप्यार्चयामास तञ्जेश्वरचतुर्मुखौ ।
तेन देवी महाकाली व्रणकोटिसमन्विता ॥ ॥ ४७ ॥
रक्षाविधौ पुरस्यास्य कल्पिता चाधिदेवता ।

பகவான் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியும் தஞ்சகனை வதம் செய்த இடத்திலேயே எழுந்தருளியிருக்கிறார். நான்முகனையும் சிவபெருமானையும் மகரிஷி பிரார்த்தித்து அவர்களை அங்கேயே எழுந்தருளச்செய்து தஞ்சேசுவரர் என்றும், சதுர்முகனென்றும், திருநாமத்துடன் பிரதிஷ்டைசெய்து பூஜித்துவருகிறார். பகவானுமேல அந்த காளிகாதேவியும் யுத்தத்தில் ஏற்பட்ட அநேகம் புண்களுடைய வடிவுடனேயே பட்டணத்தின் எல்லையைக்காக்கும் அதிஷ்டான தேவதையாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு விளங்கிவருகிறாள். (41—47)

चाक्षुषस्य मनोः काले चतुस्त्रिंशयुगे पुरा ॥ ॥ ४८ ॥
नीलमेघः श्रिया सार्धं प्रादुरासीन्मुनेः कृते ।
रम्ये पराशरक्षेत्रे तत्राऽऽस्ते पुरुषोत्तमः ॥ ॥ ४९ ॥

முப்பத்துநான்காவது யுகம் சாக்ஷுஷமனுவின்காலத்தில் பராசரமகரிஷியின் திருப்பதியில் அவருடைய தவத்திற்குக் காரணமாய் ஸ்ரீபிராட்டியுடன் நீலமேகப்பெருமான் எழுந்தருளி இப்பவும் சேவை சாதித்துக் கொண்டிருக்கிறார். (48—49)



एवं तदद्भुतं कर्म कृत्वा लोकहिताय सः।
रम्ये पराशरक्षेत्रे तत्राऽऽस्ते पुरुषोत्तमः ॥ ॥ ५० ॥
एवमुक्तप्रभावा सा नगरी वीर्यवर्धनी
स्थलं तत् पावनं पुण्यं रम्यं पुण्यविवर्धनम् ॥ ॥ ५१ ॥
तीर्थे पुण्याधिके तस्मिन् स्नात्वा मुक्तः स किल्बिषैः ।
प्रदक्षिणत्रयं कृत्वा देवदेवं प्रणम्य च ॥ ॥ ५२ ॥
एकरात्रं वसेद्यस्तु नारायणपरायणः
सर्वपापविनिर्मुक्तः स याति परमां गतिम् ॥ ॥ ५३ ॥
तपःसिद्ध्यै स्थले तस्मिन् ऋषिसिद्धाः मुनीश्वराः
बहवस्तपसि स्थित्वा सिद्धिं प्रापुरनुत्तमाम् । ॥ ५४ ॥
य एतत्कीर्तयेन्नित्यं नरः पर्वणि पर्वणि ।
अप्तोर्यामस्य यज्ञस्य फलमाप्नोति पुष्कलम् । ॥ ५५ ॥
मत्संनिधौ विशेषेण संनिधौ वा मुरद्विषः ।
वैष्णवानां समाजे वा कीर्तयित्वा सुखी भवेत् ॥ ॥ ५६ ॥
पठन् शृण्वन् लिखन् विप्रो त्रिदुषामग्रणीर्भवेत् ।
क्षत्रियो लभते राज्यं वैश्यस्तु धनसंपदः ॥ ॥ ५७ ॥
शूद्रोऽपि भगवद्भक्तिं योधको विजयी भवेत् ।
गर्भिणी जनयेत्पुत्रं कन्या विन्दति सत्पतिम् ॥ ॥ ५८ ॥
एकादश्यामुपोष्यैव द्वादश्यां स्नानमाचरेत् ।
तारयेदात्मनो वंश्यान् सप्त सप्त च सप्त च ॥ ॥ ५९ ॥
एतेषु पिण्डदानं च गयाश्राद्धेन संयुतम् ।
अपि गोग्रासमात्रेण मोदन्ते पितरोऽपि च ॥ ॥ ६० ॥
अयोध्याख्यापुरी काञ्चीपुरी तञ्जापुरी तथा ।
पुरीणां तु त्रयं मुख्यं स्मरणात्पापनाशनम् ॥ ॥ ६१ ॥

इत्येवं नीलमेघस्य विष्णोर्माहात्म्यमुत्तमम् ।
तञ्जापुर्याश्च संप्रोक्तं चरितं च मुनेस्तथा ॥ ॥ ६२ ॥
एतदाख्यानमायुष्यं यः पठेच्छृणुयादपि ।
सर्वान् कामानवाप्नोति विष्णुसायुज्यमाप्नुयात् ॥ ॥ ६३ ॥

इति श्रीब्रह्माण्डपुराणे अगस्त्यनारदसंवादे तञ्जापुरीमाहात्म्ये
॥ षष्ठोऽध्यायः ॥

---

இவ்விதமாச்சரியமான அந்த செய்கையை உலகத்தின் நன்மைக்காகச் செய்து பராசரமகரிஷியின் அழகிய அந்த திருப்பதியில் பகவான் புருஷோத்தமன் இன்றைக்கும் எழுந்தருளியிருக்கிறார்.

இவ்விதம் மனிதர்களுக்கு வீர்யத்தைக் கொடுக்கக்கூடிய தஞ்சைநகரத்தின் பெருமை ஒருவாறு கூறப்பட்டது.

அந்தத் தலமும் பரிசுத்தமானது. புண்யத்தைக் கொடுக்கக்கூடியது. நேர்த்தியாயுள்ளது. அதிகம் புண்ணியத்தை விளைவிக்கக்கூடிய அந்தத் திருப்பதியில் தீர்த்தமாடி செய்த பாபங்களைத் தீர்த்துக்கொண்டு தேவர்களுக்கும் தேவராயிருக்கும் திருமாலை மூன்றுதடவை வலம்சுற்றிவந்து வணங்கித் திருமாலான நாராயண மூர்த்தியையே மனதால் நினைத்துக்கொண்டு எவன் ஒரு இராத்திரி இத்திருப்பதியில் வசிக்கிறானோ, அவன்செய்த எல்லா பாபங்களைக் கழித்து நல்ல பரகதியை அடைகிறான். அந்தத் திருப்பதியில் தவம் செய்து அதன் பலனை (சித்தியை) பல மகரிஷிகள், சித்த புருஷர்கள், மற்றுமுள்ள முனிவர்களும் அடைந்திருக்கிறார்கள். இதை எவனொருவன் பருவந்தோறும் கீர்த்தனம் செய்கிறானோ (சொல்லுகிறானோ) அவன் 'அப்தோர்யாம'மென்று சொல்லப்பட்ட யாகத்தின் பலனை அடைகிறான். என்னுடைய சந்நிதானத்திலாவது ஸ்ரீபகவான் திருமாலின் முன்பாவது, திருவைணவர்களின் முன்பாவது மனிதர்கள் இதைக் கீர்த்தனம் செய்தால் சுகமுடையவர்களாவார்கள். படிக்கிறவனும், கேட்கிறவனும், எழுதுகிறவனும்



படிப்பாளிகளில் முதலாவனாகிறான். க்ஷத்திரியனானால் இராச்சியத்தை அடைகிறான். வைசியனானால் பொருளை அடைகிறான். சூத்திரனானால் பகவானிடம் பக்தியையடைகிறான். படையாளியானால் போரில் வெற்றியடைகிறான். கர்ப்பம் தரித்த மகள் ஆண்பிள்ளையை அடைவாள். மணப்பெண் நல்ல புருஷனை அடைவாள். ஏகாதசியில் நோன்பு இருந்து துவாதசியில் நீராடவேண்டும். அப்படிச்செய்தால் ஒருவன் தனது குலத்தில் பிறந்தவர்களை மூவேழு தடவை சம்சாரத்திலிருந்து கடத்திவிடுவான். இதில் பித்ருக்கள் என்று சொல்லக்கூடிய முன்னோர்களுக்குப் பிண்டம் கொடுத்தால் கயையில் செய்த சிராத்தப் பயனை அடைகிறான். இங்கே பசுவுக்குப் புல்லைக் கொடுத்தால்கூட பித்ருக்கள் மகிழ்ச்சி யடைகிறார்கள்.

அயோத்தி, காஞ்சி, தஞ்சாபுரி, இம்மூன்றும் பட்டணங்களில் முக்கியமானவை. இவைகள், மனதால் நினைத்தாலே பாபத்தைப் போக்கும் திறமையுள்ளவை. இவ்விதம் பகவான் விஷ்ணு நீலமேகப்பெருமாளின் உத்தமமான பெருமையும் தஞ்சாபுரியின் பெருமையும், பராசரமாமுனிவரின் பெருமையும் சொல்லப்பட்டன. இந்த உபாக்யானத்தை எவர் படிக்கிறாரோ, கேட்கிறாரோ அவர் எல்லா விருப்பங்களையுமடைவார். விஷ்ணுவினுடைய சாயுச்சியத்தையும் அடைவார்கள். (41—63)

பிர்மாண்டபுராணம், தஞ்சாபுரி மான்மியம்,
ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

# திருக்கோயில்கள் வரலாறு.

*செங்கமலவல்லித்தாயார்நீலமேகப்பெருமாள்திருவடிகளே சரணம்.*

## தஞ்சைமாமணிக்கோயில்.

மகரிஷிகள் தவப்பயன் பெறுதல், புராணப் பிரசித்தி, ஆழ்வார்களின் மங்களாசாஸனம், ஆசாரியர்கள் உகந்தருளுவது, இவற்றில் ஒவ்வொன்றும் புண்யஸ்தலங்களின் பெருமையை மேன்மைப்படுத்துவனவாகும். இவை யாவும் பொருந்தியுள்ள ஸ்தலங்களுக்கு அவைகள் பொருந்தப்பெறாத மற்ற ஸ்தலங்களைப்பார்க்கிலும் மிகவும் ஏற்றமுண்டு. அத்தகைய பெருமை பெற்று விளங்குவது **தஞ்சைமாமணிக்கோயில்** என்னும் **திவ்யக்ஷேத்ரமாகும்.**

பராசரர் போன்ற மகரிஷிகள் தவப்பயன் பெற்ற இடமாய், நூற்றெட்டு திவ்யதேசங்களிலொன்றாய், பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் இவர்களுடைய மங்களாசாஸனம் பெற்றதாய், ஸ்ரீமந்நிகமாந்தமகாதேசிகன் முதலிய ஆசாரியர்கள் உகந்தருளினதாய், பிரம்மாண்ட புராணத்தில் சிறப்புப் பெற்றதுமாயிருக்கின்றது இந்தப் புண்ணியஸ்தலம்.

பராசர மகரிஷி தமது சிஷ்யர் முதலியோர்களோடு இந்த திருப்பதியிலே தவம்செய்து சித்திபெற்றதாக இப் புராணம் கூறுகிறது. இம்மகரிஷியின் பிரபாவம் வேதத்திலே மேன்மையாயுள்ளது. "ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" (தை-ஆ-1-ம்) (பராசரர்குமாரரான வியாசர் சொன்னார்) என்று இவர் சம்பந்தத்தையிட்டு வியாசருக்குள்ள ஏற்றத்தைக் காட்டியது வேதம்.

இந்த பராசரமகரிஷியின் பிதாவாகிய சக்தி என்னும் ரிஷியை அசுரனொருவன் விழுங்கிவிட்டான். இவர் கோபங்கொண்டு யாகம்செய்து அதன்மூலம் அநேக அசுரரை அழித்துவிட்டார். அதன்மேல் இவருடைய பிதாமகரான வசிஷ்டர் இவரைச் சமாதானப்படுத்தியுள்ளார். பின்பு புலத்தியர் என்னும் மகரிஷியும் "உமக்குப் பரதேவதையைப் பற்றிய தெளிவு ஏற்பட வேண்டும், ம புராணம் ஒன்றை இயற்றப்போகிறாய்" என்று அருள்செய்தார் அதை வசிஷ்டரும் ஆமோதித்துள்ளார். அவர்கள் அருளினால் இந்த பராசரமகரிஷி ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை

இயற்றினர். இதை 'புராணரத்னம்' என்று ஸ்ரீ ஆளவந்தார் முதலிய பூர்வாசாரியர் வழங்குகிறார்கள். இப்படிப்பட்ட மகா பிரபாவமுள்ள பராசரமகரிஷி இந்தத்தலத்தில் தவம்செய்ததின் பேரில் நீலமேகப்பெருமாள் பிராட்டியுடன் சேவை சாதித்து வரம் அருளி அவரை அனுக்கிரகித்துள்ளார் என்று இப்புராணத்தில்கூறியிருக்கிறது. இவ்வாறாகவே ஸ்ரீ நரசிங்கப்பெருமாள் தஞ்சை நாயகியுடன் மார்க்கண்டேய மகாமுனிக்கு நேரில் வந்து அருள் செய்ததும் இந்த திவ்யதேசத்திலேயே. இப்படி மகரிஷிகள் தவப் பயன் பெற்ற பெருமையும் இந்தத் திருப்பதிக்கே சிறப்பாகப் பொருந்தியுள்ளது.

பூதத்தாழ்வார் மங்களாசாஸனபாவது—

" தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்புவேலை, தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தையென்பரே
ஏவல்ல எந்தைக் கிடம் " (இ.தி.பா.70)

என்பது. " ஆச்ரிதர்களுக்காக ஸர்வேச்வரன் சன்னிதி பண்ணுவது அவர்களின் இருதயத்திலும், தஞ்சை முதலிய தலங்களிலும் என்கிறார்கள்" என்பது கருத்து. இப்பாசுரத்தில் தஞ்சையைப் பிறவிடங்களைவிட முற்படக் கூறியிருத்தலினால் மற்ற தலங்களைவிட இத்தலத்திற்குரிய முதன்மை தோற்றுகின்றது. மற்றும்,

" எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கரசு என்னுடை வாணாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
யவருயிர் செகுத்த எம் அண்ணல் !
வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி,
நம்பிகாள் ! உய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம் "

என்பதும்; (பெரி. தி. ப. 1. தி. 1. பா 6.)

" உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறாய்
உலகுய்ய நின்றானை, அன்று பேய்ச்சி
விடப்பாலுண்டு குலித்தசனைக் கன்று பேய்த்து (?)
விளையாட வல்லானை, வரைமீகானில்,



தடம் பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
தவநெறிக்கு ஓர் பெருநெறியை, வையங் காக்கும்,
கதிர்பரிமேல் கற்கியை நான் கண்டுகொண்டேன்
கடி பொழில் சூழ்கடல் மல்லைத்தல சயனத்தே "
(பெ. தி. ப. 2. தி. 5. பா. 3)

என்பதும் திருமங்கைமன்னன் அருளிச்செய்தன.

முதற்பாட்டில், எனக்கு உபகாரகன், எனக்குத்தந்தை, எனக்கு எல்லாவுறவுமுறையுமானவன், என்னையாண்டவன், என்னுடைய வாழ்நாள், என் சுவாமி என்பதாக மங்களாசாஸனம் செய்தருளினதால் இவ்வெம்பெருமான்பக்கல் ஆழ்வாருக்குள்ள விலக்ஷணமான ஈடுபாடு தோற்றுகிறது.

" அம்பினாலரக்கர் வெருக்கொள நெருக்கி அவர் உயிர் செகுத்தவெம்மண்ணல்" (தன்னுடைய சங்கல்பத்தினாலன்றிக்கே அம்பினால் அரக்கர் உயிரை முடித்த என் அண்ணல்) என்பதனால் தஞ்சகன், தண்டகன் முதலிய அசுரரை எம்பெருமான் அழித்ததாக இப்புராணத்திலே கூறியிருப்பதை ஆழ்வார் கூறுவதாகக் கொள்ளுவது பொருத்தமானது.

' வம்புலாஞ்சோலை........தஞ்சைமாமணிக் கோயில்" என்றதும், " ஸஞ்ஜுஷ்ட: புண்யதருபி: புண்யபுஷ்போபசோபிதை: " (புண்ணிய புஷ்பங்கள் விளங்குவதான புண்ணியவிருக்ஷங்கள் நிறைந்து பெற்றது தஞ்சைத்தலம்) என்று இப்புராணத்தில் சொல்லியதை நினைப்பூட்டுகிறது.

இரண்டாவது பாசுரத்தில் " தஞ்சைக் கோயில் தவநெறிக்கோர் பெருநெறியை" என்று அருளிச் செய்திருப்பதும் இவ்வெம்பெருமான் பராசர மகரிஷியின் தவப்பயனளித்ததாக உள்ள இப் புராண வரலாற்றைத் திருவுள்ளம்பற்றியிருக்கலாமென்று தோன்றுகிறது: இங்ஙனமாக இவ்விரு ஆழ்வார்களின் மங்களாசாஸனம் பெருமை இத்தலத்திற்குப் பொருந்தி விளங்குகின்றது.

ஆசாரியர்கள் உகந்தருளும் விதமாவது:— வடகலை ஸம்பிரதாயத்துக்குத் தலைவராயுள்ள ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் திருக்குமாரரும் சிஷ்யருமாகிய நைனாராசாரியரும், இவர் சிஷ்யரான ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமியும் சிஷ்யர்களோடு வெகுகாலம் இந்தத் தலத்திலே வசித்து வருகையில் ஸ்ரீதேசிகனை முதல் முத

லாய் விக்ரகப் பிரதிஷ்டைசெய்து, சித்தாந்த ஸ்தாபனம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்கள் என்றும், நாலாயிரத் தனியன்களையும், ஸ்ரீதேசிகன் அருளிச்செய்ததாயுள்ள 'அமிர்தரஞ்சனீ' முதலிய இருபத்துநான்கு பிரபந்தங்களையும் இந்தச் சன்னிதியிலே முதலில் அநுசந்தானம் செய்துள்ளார்கள் என்றும் ஸம்பிரதாய கிரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

" दिव्य प्रबन्धकृदभिष्टव पद्यगाथाः
वेदान्तदेशिककृता अपि ते प्रबन्धाः ।
यत्सन्निधौ प्रथमसंपठिता महद्भिः
तञ्जेश्वरोऽस्तु स मुदे मम नीलमेघः ॥ "

" திவ்ய ப்ரபந்த க்ருதபிஷ்டவ பத்யகாதா:
வேதாந்த தேசிக க்ருதா அபி தே ப்ரபந்தா: |
யத்ஸந்நிதௌ ப்ரதமஸம்படிதா மஹத்பி:
தஞ்ஜேச்வரோஸ்து ஸமுதே மம நீலமேக: ||

என்கிற சுலோகத்தினால் மேலே சொல்லிய சரித்திரத்தைச் சுருக்கமாகத் தெரிவித்தார் "வாத்ஸ்யாகோபிலாசார்யர்" என்கிற பூர்வாசார்யர். இத் திவ்ய க்ஷேத்திரத்தின் மூன்று திருக்கோயில்களும் இவ்வடகலைச்சார்பைச் சேர்ந்திருப்பதும் குறித்தற்பாலது.

இந்த திவ்யதேசத்திலேயுள்ள ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருக்கார்த்திகைக்குப் பின்பும் திருவத்யயனோத்ஸவத்திற்கு முன்புமாக திருநாட்டுக்கெழுந்தருள, அந்த சமயத்தில் திவ்யப்பிரபந்தம் சேவிப்பது கூடாதாகையால் நாலாயிரத் தனியன்களையும் தேசிகபிரபந்தங்களையும் கொண்டு திருவத்யயனத்தையும் தாம் அருளிச்செய்த **பிள்ளையந்தாதி** என்னும் பிரபந்தத்தைக்கொண்டு இயல் சேவையையும் நடத்தும்படி அந்த ஸ்ரீவைஷ்ணவர் அனுபந்திகளுக்கு நயினாராசாரியர் நியமித்தருளினார். அப்படியே நடத்தினார்கள் என்றும் சம்பிரதாயம். இவ்வாறாகவும் ஆசாரியர்கள் உகந்தருளப்பெற்றதாகும் இந்தத் தலம். *

* மேற்கண்ட வரலாறு ஸ்ரீமதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்யர் அவர்களால் அன்புடன் உதவப்பெற்றது.



I

## ஸ்ரீ நீலமேகப் பெருமாள் கோயில்.

தஞ்சை வெண்ணாற்றங்கரை மேற்குக்கோடியில் திருவையாற்றுப் பெருவழியின் அணித்தாய் அமைந்துள்ளது.

பெருமாள் திருநாமம் : ஸ்ரீநீலமேகப்பெருமாள்.
தாயார் : செங்கமலவல்லித் தாயார்.
கிழக்கே திருமுகமண்டலம் : வீற்றிருந்த திருக்கோலம்.
பராசர மஹரிஷிக்குப் பிரத்யக்ஷம் : சௌந்தர்ய விமானம்.
கன்னிகா புஷ்கரிணி — அம்ருத தீர்த்தம்.

ஸந்நிதியில் ஸ்ரீபெருமாள் திருவடிகளின் கீழ் தஞ்சகன் அஞ்சலிக்கோலமாக வீழ்ந்திருப்பது காணலாகும்.

தனிக்கோயில்கள் : நாச்சியாருக்கும், ஆழ்வாராதிகளுக்கும். பின்னதில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியும் உள்ளது. பிரம்மோத்ஸவம் ஆநி வைகாசி மாஸம் விசாகத்தில் வம்புலாஞ் சோலையில், ராஜா கோரிக்குளம் என்று சொல்லப்படுகிற பராசரர் புஷ்கரணியில் தீர்த்தம். புரட்டாசிமாஸத்தில், ஸ்ரீதேசிகனும் உத்ஸவம் கண்டருள்கிறார். மற்ற திவ்ய தேசங்களில்லாத முறையாக, இக் கோயிலில் தஞ்சகாசுரன் வேண்டுகோளுக்கிணங்கி கருடஸேவையில் ஸ்ரீ ஆண்டாள் சமேதராய் ஸ்ரீநீலமேகப்பெருமாள் ஸேவை ஸாதிப்பது காணலாகும்.

கோயில் முன் மண்டபத்திலுள்ள ஒரு கல்வெட்டு சாஸனப்படி, 1870 நவம்பர் 10உ பிரமோதூத, அர்ப்பிசி 16ம் தேதியில் ஸந்நிதி கருடமண்டபம் 15அங்கணமும், தளவரிசையும், தஞ்சாவூர், மென்னூல் ரெங்கசாமி என்பவரால் சொந்தத்தில் கட்டி முடித்து பிரதிஷ்டையாயின என்பது தெரிகிறது.

வெகுகாலமாக த்வஜஸ்தம்ப நிர்மாண பிரதிஷ்டையில்லாமலிருக்கும் குறையை நிவர்த்திக்க ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் ஸ்வாமிகளால் 10-1-1936 முதல் லக்ஷார்ச்சனை ஆரம்பித்து, யுவ-ஷு பங்குனி-மீ 8உ (20—3—1936)ல் நூதன த்வஜஸ்தம்ப பிரதிஷ்டை செய்யப்பெற்றது.

இக்கோயிலுக்கு வருஷமோஹினித்தொகை ரூ. 722—8—6 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 812—7—3

## 2
## தஞ்சை மணிபர்வதப்பெருமாள் கோயில்.
### (மணிக்குன்றன்)

திருநாமம் ஸ்ரீமணிக்குன்றப்பெருமாள், ஸ்ரீ அம்புஜவல்லித் தாயார், கிழக்கே திருமுகமண்டலம் - வீற்றிருந்த திருக்கோலம். முன்காலத்தில் அளிமோடு கிராமத்தின் கீழ்புரமாக அமைந்திருந்த இத்திருக்கோயில் பிற்காலத்தில் விண்ணாற்றங்கரையில் இப்போதி ருக்கும் தலத்தில் புதிதாகக் கட்டியிருப்பதாகத் தெரிகிறது.

இச்சந்நிதி மங்களாசாசனச் செய்யுள்:—

என் செய்கே னடியேனுரையீர் இதற்கென்று
மென்மனத்தே இருக்கும் புகழ்
தஞ்சையாளியைப் பொன்பெயரோன்
நெஞ்சமன்றிடந்தவனைத் தழலே புரை
மின் செய் வாளரக்கன் நகர்பாழ்படச்
சூழ்கடல் சிறைவைத்து இமையோர் தொழும்,
பொன்செய்மால் வரையை மணிக்குன்றினையன்றி
யென்மனம் போற்றி யென்னாதே.

(பெ. தி. 7-ப. 3-தி. பா 9)

ஸந்நிதிக்கு நுழையும் முன்மண்டப வாயிற்படிகளில் பொறித் துள்ள கல்வெட்டால் மாதுஸ்ரீ காமாக்ஷியம்பா பாய் சாகேப் அவர் களின் ஆக்ஞைப்படி ஸ்ரீநாகராஜ ராமாஜி பண்டிதரவர்களால், இக்கோயிலில் நூதனமாக கட்டை கோபுரம், கதவுள்படவும், திருமதில்சுவர், பிராகாரம், தளவரிசை பலிபீடம், கருடன்கோயில் இவைகளைத் தாபித்தும், 1892 நவம்பர் 9உ புதன்கிழமை ஷை ஆழ்வார்களுக்கும் பிரதிட்டை செய்யப்பெற்றதென்று கூறுகிறது.

இக்கோயிலில் தஞ்சை மூக்குக்கண்ணாடி வியாபாரம் த. தி. வீராசாமி நாயுடு அவர்களின் பாட்டனார் சுப்பய்யாநாயுடு அவர் களால் கருடவாகனம் செய்துகொடுத்தும், அவர்கள் சந்ததியில் த. வீ. ரகுபதி நாயுடு அவர்களால் ஆண்டுதோறும் பங்குனி-மீ உத்தரத்தில் கருடசேவை நடத்தப்பெற்றும் வருகிறது.

சமீபத்தில் விமானஸ்தூபி களவு செய்யப்படவே, தஞ்சைக் கரந்தை ஸ்ரீ. கோ. ராமையா பிள்ளையால் நூதனமாக 1937 ஆகஸ்ட் 19ம் தேதி பிரதிட்டை செய்யப்பெற்றது.

இக்கோயிலுக்கு வருஷ மோஹினித்தொகை ரூ. 237-12-6 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 305—8—6



## 3
## தஞ்சையாளி நகர்
## ஸ்ரீமேலசிங்கப்பெருமாள் கோயில்.

இத் திருக்கோயில் பூர்வத்தில் தஞ்சை மேலவெளித்தோட் டத்தில் இப்போதும் காணப்படும் சிங்கப்பெருமாள்குளம் என் னும் சூரியபுஷ்கரணியின் மேல்கரையில் விளங்கியிருக்க, மற்ற திருக்கோயில்களை விண்ணாற்றங்கரைக்கு மாற்றும்போது, ஸ்ரீமேல சிங்கப்பெருமாள் சந்நிதியும் அவ்விடத்தில் பெயர்த்துப்போய் நிர் மாணிக்கப்பெற்றது. தஞ்சைக் கோட்டைக் கீழ்க்கோட்டத்தில் கீழசிங்கப்பெருமாள் கோயில் என சந்நிதி அமைந்துள்ளதாலும் இந்த திவ்யதேச ஆதிக்கோயில் மேலவெளித்தோட்டத்திலுள்ள சந்நிதியாதலாலும் இதனை மேலசிங்கர் என அழைக்கலாயிற்று.

திருநாமம் : ஸ்ரீநரசிங்கப்பெருமாள் - ஸ்ரீதஞ்சைநாயகித் தாயார்; கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம், மார்க்கண்டேய மகாமுனிக்குப் பிரத்யக்ஷம். வேதசுந்தர விமானம். சூரிய புஷ்கரணி. ஸ்ரீராமதீர்த்தம்.

பிரம்மோத்ஸவம் சித்திரை-மீ. சுவாதியில் தீர்த்தம். திருவத் யயனோத்ஸவமும் நடைபெற்றுவருகிறது.

தனிக்கோயில்கள் :— ஸ்ரீ தஞ்சை நாயகித் தாயாருக்கும்; ஆழ்வார்களுக்குத் தனிமண்டபமும் உண்டு.

மாதுஸ்ரீ காமாக்ஷியம்பாபாய் சாகேப் அவர்கள் காலத்திலேயே இக்கோயிலின் சுற்று மதில் கட்டியும், முன்கட்டை கோபுரம், கதவுள்படவும், ஆழ்வார் சந்நிதி மண்டபமும், தளவரிசையும், பிரதிட்டை செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

இச்சந்நிதிக்கு வெகுகாலமாக த்வஜஸ்தம்ப பிரதிட்டையில் லாத குறையை 1938-ல் விண்ணாற்றங்கரை ஸ்ரீவஞ்சுளத்தம்மாள், ஸ்ரீ.து. கிருஷ்ணமாசாரியார் கைங்கர்யமாக நூதனப் பிரதிட்டை யாகி இருக்கிறது.

தஞ்சைப் பள்ளியகரம் த்வாதச கருடாழ்வார் தாஸரென்னும் R.V.V. நாராயணசாமி ராஜு அவர்களால் திவ்யதேசப்பெருமாள் களுக்கும் மற்றும் பெருமாள்களுக்கும் துவாதசகருடசேவையென 1906-ஞு முதல் பிரதி ஆனி-மீ சிரவணத்தில் உபயமாகவும், தேவஸ்தான உதவியுடனும் 1930-ஞு வரை நடைபெற்றுவந்தும்,

பின்பு நிறுத்தப்பட்டு, மறுபடியும் 1935-ம் ஆண்டுமுதல் தஞ்சாவூர் இராமாநுஜதர்சநஸபையாரால் திவ்யதேச கருடசேவையுடன் நவநீதசேவையும் நடத்தப்பெற்றுவருகிறது.

இக்கோயிலுக்கு வருஷமோஹினித்தொகை ரூ. 1166–10–8 உள்பட மொத்தவருமானம் சுமார் ரூ. 1688—10—8

## ஸ்ரீ ஆநந்தவல்லியம்மன் — தஞ்சபுரீஸ்வரசுவாமி கோயில்.

விண்ணாற்றங்கரை ஸ்ரீ ஆனந்தவல்லியம்மன் கோயில், சோழர் காலத்துக்கு முந்திய குபேரன் பூசித்த பழங்கோயிலாகவேண்டும். தஞ்சைநகரின் தலபுராணத்திற்கியைய ஸ்ரீகாளிகாதேவி தாரகாசுரனைக் கொன்றதன்பின் சூலத்துடன் ரிஷிகள் முதலானவர்களுக்கு ஆனந்தத்தையளித்த திருக்கோலத்துடனும் ஸ்ரீதஞ்சபுரீசருடன் இனிதமர்ந்த அவசரமானது இத் திருக்கோயிலாகும். தஞ்சைத் தலத்திற்குப் பெயர் கொடுத்த பரசிவமாகவும், தேவியார் அதன் காப்புத்தெய்வமாகவும் ஆயினமை காணலாம்.

இக்கோயிலின் புதிய முன்மண்டபத் தூண்களிலொன்றில் வெட்டப்பட்டிருக்கும் சாஸனத்தின் மூலம் "சிவாஜி மகாராஜா ஸாஹேபவர்களுடைய ஜேஷ்ட பத்னியவர்களுமான ஹர் ஹைனெஸ் மாது ஸ்ரீ காமாக்ஷியம்பாபாய் ஸாஹேபவர்களுடைய ஆக்ஞையின்பேரில் எஜண்டு நாகராஜ ராமாஜி பண்டிதர் அவர்களால் ஸ்வாமி ஸந்நிதானத்தில் நூதனமாக மூன்று நிலத்தில் கோபுரமும், வெள்ளைக்கல்லால் மட்டப்பாடு முப்பத்தி 18 அங்கணத்தில் அகலம் கிஜம் 11 நீளம் கிஜம்25 விஸ்தீர்ணமுள்ள நர்த்தன மண்டபமும் பருகாரத்தில் செங்கலால் தளவரிசையும் அரைகுறையாயிருந்த பருகாரத்தின் மதிலை பூர்த்தியாகவும் ஸ்வாமி அம்மன் விமானங்களைப் பழுதுபார்த்தும் கலி. 4983. சாலிவாஹன சகா. 1804. சித்திரபானு-ஞு மாசி-மீ 16உக்கு 1883ஞு பிப்ரவரி மாதம் 26 தேதியில் ஆரம்பித்து 1889ஞு மே மாதம் 31-ம் தேதியில் பூர்த்திசெய்து கும்பாபிஷேகம்செய்யப்பட்டது" என்று தெரிகிறது.

மற்றொன்றும் ஸ்ரீ அம்மன் வெளிமண்டபத்தில் மகாராட்டிர லிபியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டால் ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா அவர்கள் 1783 வருஷத்தில் ஸ்ரீ ஆனந்தவல்லியம்மன் சந்நிதியில் நர்த்தன மண்டபம் செங்கலால் கட்டப்பட்ட தருமம் என்பது கண்டிருக்கிறது.

இக்கோயிலுக்கு வருஷ மோஹினித் தொகை ரூ. 1397–7–8 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 2227—9—8



இதன் உபகோயில்களாக, சங்கிலிப்பிள்ளையார்; மற்றொரு விநாயகர்; ஸ்ரீமேலசிங்கருக்கு ஹனுமார் சந்நிதிகளும் சமீபத்தில் பிரத்தியேகமாக உள்ளன.

ஸ்ரீ கலியாணவெங்கடேசப்பெருமாள் சந்நிதி விண்ணாற்றங்கரையில் அமைந்திருந்த பூர்வகோயிலாக இருக்கலாம். திருவையாற்றுப் பெருவழிக்கு வடக்கே ஸ்ரீநீலமேகப்பெருமாள் சந்நிதிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. தாயார் திருநாமம்: ஸ்ரீ அலமேலுமங்கைத் தாயார். புரட்டாசி மாசத்தில் பிரம்மோத்ஸவம் நடந்துவருவது.

ஸ்ரீ மணிக்குன்றன் கோயில் கல்வெட்டுமற்றொன்றால் மாது ஸ்ரீ காமாட்சியம்பா பாய் சாகேப் அவர்களின் ஆக்ஞைப்படி, 1892 நவம்பர் 9உ ல் இக்கோயில் உட்பிரகாரமதில், பிராகார தளவரிசை புதிதாகக் கட்டப்பெற்றதென்று தெரிகிறது.

இக்கோயிலுக்கு வருஷ மோஹினித்தொகை ரூ. 105.

வேளூர் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் ஸ்ரீநீலமேகப் பெருமாள் சந்நிதிக்கு அடுத்து திருவையாற்றுப் பெருவழிச்குத் தெற்கே அமையப்பெற்றதாகும்.

ஸ்ரீபெருமாள், ஸ்ரீதேவி பூதேவிகளுடன் நின்ற திருக்கோலம். கிழக்கே திருமுகமண்டலம். ஸ்ரீபெருமாள் உற்சவத் திருமேனி மாத்திரம் உள்ளது. கோயில் முற்காலத்திய பிரதிட்டையெனவே கூறலாம். இக்கோயிலுக்கு மோஹினித்தொகை இல்லை. தேவஸ்தான வருஷதிட்டம் சுமார் ரூ, 45–6–0 செலவாகிவருகிறது.

ஸ்ரீ சொக்கநாதர் கோயில் விண்ணாற்றங்கரை இராஜாசத்திரத்தில் அமைந்துள்ளது.

இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினி வருமானம் ரூ. 10-8-0

ஸ்ரீ காசிவிசுவநாத சுவாமி கோயில் என்றதொரு சன்னிதி தஞ்சைவிண்ணாற்றங்கரையில் திருவையாற்றுமார்க்கத்துக்குச்செல்லும் திரும்பும் வழியிலமைந்துள்ளது. இது தஞ்சை வெங்கடராயர் அவர்களால் எடுப்பித்து, தற்போது அவர்கள் சந்ததியில் திரு. த. ஆ. இராமச்சந்திர ராயரவர்கள் பரிபாலனத்திலிருந்துவருகிறது.

ஸ்ரீ சுந்தரேசுவரர் கோயில் விண்ணாற்றங்கரையில் தஞ்சை நகராண்மைக்கழகத்தார் தண்ணீர் பம்பிங் நிலையத்திற்குக்கீழ்புரம் அமைந்துள்ளது.

இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினி வருமானம் ரூ. 52-8-0

6½

ஸ்ரீ காளத்தீசுவரர் கோயில், விண்ணாற்றங்கரையில் தஞ்சை நகராண்மைக்கழகத்தார் தண்ணீர் பம்பிங் நிலயத்திற்கு மேற்புறமுள்ளது.

இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினி வருமானம் ரூ. 25-8-0

லக்ஷ்மீராஜபுரம் ஸ்ரீ அமிர்தசடேசுவரசுவாமி என்கிற ஸ்ரீ தளிகேசுவர சுவாமி கோயில், தஞ்சைப் பள்ளியக்ரகாரத்தில் விண்ணாற்றின் வடகரையில் அமைந்துள்ள அழகிய கோயில். தஞ்சை சரபோஜி மன்னரின் ஜனகமைத்துனராகிய வ. ஸ்ரீ. ராமோஜீ சர்ஜேராவ் காண்டிகேராவ்சாகெப் அவர்களால் திருப்பணி செய்யப் பெற்றதென்பர். அவர் மிக்க சிவப்பற்றுடையவராகவும், மன்னரின் தமக்கையாராகிய தனது மனையாளின் நகைகளின் திரவியங்களைக் கொண்டு இக்கோயிலை எடுப்பித்ததாகவும் கூறுவர். கோயிலுக்கு எதிராக ஆற்றங்கரையில் புஷ்யமண்டபமும், படித்துறையும் கிழக்கில் திருக்குளமும் பொருந்தியது. கோயிலுக்காக அக்கிரகாரம் ஏற்படுத்தி ஆறு வீடுகள் கட்டி, நஞ்சை புஞ்சை நிலங்களுடன் பிராமணர்களுக்குத் தானம் செய்துள்ளார்கள். இந்தக் குடும்பத்தினரின் பாதுகாப்பில் நாளடைவில் இருந்தும், வ. ஸ்ரீ. செகோஜீ சுபான்ஜீ மாடிக்ராவ் சாகேப் காலத்தில் திருப்பணி, கும்பாபிஷேகம் நடந்தும், தற்போது அவர் குமாரர் வ. ஸ்ரீ கோபாலராவ் சுபான்ஜீ மஹாடிக்ராவ் சாகேப் ஆளுகையிலுள்ளது. இக்கோயிலை எடுப்பித்தவருடையதும், அவர் சுவீகார குமாரர் வ. ஸ்ரீ. அமிர்தராவ் சர்ஜேராவ்காண்டிகே அவர்களுடையவும், அவரவர்கள் பத்தினிமார்களினுடையதுமான உருவச்சிலைகள் இக்கோயிலில் உள்ளன.

இக்கோயிலுக்கு சர்க்கார் மோஹினித்தொகை ரூ. 131-4-0 உடன், பிறசொத்துக்களும் தர்மகர்த்தாவின் பராமரிப்பிலுள்ளது.

## அரசூர் திருக்கோயில்கள்.

அரசூர் ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில், தஞ்சை திருவையாற்றுப் பாதை மேற்பக்கத்தில் அரசூர் கிராமத்திற்குத் திரும்பும்பாதைக்கு எதிரில் பழமையான சுப்பிரமணியர் கோயில் சமீபத்தில் புதுப்பித்திருப்பது காணலாம். இதன்கண் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கும் தமிழ் நாட்டில் ஒப்புயர்வற்று விளங்கிய பொய்யாமொழிப் புலவருக்கும் உண்டாய தொடர்பு தமிழ்நாவலர் சரிதை கூறுகின்றது. புலவர் ஊர்கள்தோறும் சென்றுவருங்கால் ஒருநாள் மதுரையை நோக்கிப் புறப்பட்டு இடையிற் பாலைவனத்



தைக் கடந்து பெரிதும் இளைப்புடன் வரும்போது, முருகக் கடவுள் ஒரு வேடுவுருக்கொண்டு வந்து "நீவிர் யாவர்" என்று கேட்ப, "பொய்யாமொழியென்னும் பெயருடைய புலவன் யான்" என்று கூற, "ஆயின் என்மீது ஒரு கவி பாடும்" என்று முருகர் சொல்ல, புலவர் "உன் பெயர் யாது" என்று கேட்ப, முருகர் 'முட்டை' என்றனர்; என்றலும் புலவர்—

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே — மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு"

என்று அம்முருகவேளாகிய வேடனைப் பாடினர் என்றும், இவ்விடத்தில் முருகர் தம் உண்மையுருவத்தைப் புலவருக்கு வெளிப்படுத்தி, அவர் வழி இளைப்பையும் மாற்றி அவர் நாவில் தம் வேலால் எழுதி அநுக்கிரகித்துச் சென்றருளினர் என்பர். இக்கோயில் அரசூர் சைவப்பெருமக்களின் பராமரிப்பில் இருப்பதாகத் தெரிகிறது.

அரசூர் ஸ்ரீ அகஸ்தீசுவர சுவாமி கோயில், தஞ்சையிலிருந்து திருவையாற்று வழியில் 5-மைலுக்கு அணித்தாக அரசூர் என்னும் கிராமத்தில் ஸ்ரீ அகஸ்தீஸ்வரசுவாமி ஆலயம் உள்ளது. கோயில், சோழர்-நாயக்கர்களது இடைக்காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அக்காலத்தில் அரசூர்; சிற்றரசூர், பேரரசூர், தென்மாவை, பூந்துருத்தி, கொத்தமல்லி, கண்டிகுருகாவூர் என்னும் ஊர்களுக்குத் தலைவனான சீநக்கன் என்னும் சிற்றரசனின் இராஜதானியாக இருந்தது. சீநக்கன் மிக்க கொடையாளி. இவ்விடத்தில் இவனுக்கும் பொய்யாமொழிப் புலவர் என்ற புலவர் பெருமானுக்கும் உண்டான நட்பின் திறத்தையும் தமிழ் அருமையும் தமிழுலகம் பாராட்டியுள்ளது.* பொய்யாமொழிப் புலவர் அரசனைப் பிரிந்து வேற்றிடம் சென்றிருந்த சமயம் அரசன் இறந்தானென்று கேட்டு புலவர் ஓடோடி வந்து அரசனைத் தகனம் செய்யப்போகும் சிதையில் கிடத்தியிருக்கக்கண்டு தன்னையும் அவனுடன் சேர்த்து தகனம் செய்விக்கவேண்ட, ஊராரும்

* செந்தமிழ்; V. 12, p. 542

மற்றோரும் அதனைத் தடுக்கவும், அங்குள்ளார் ஒருவர், 'இறந்த அரசனே அதற்குச் சம்மதித்தால் தன்னிஷ்டப்படி நிறைவேற்றிக்கொள்ளலாகுமென்ன' புலவர் அதற்கிசைந்து,

" அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆருயிர்விட்
டின்றுநீ வானுலக மேறினாய் — நன்று நன்று
வானக்க பூண்மடவார் மாரனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட "

என்னும் அருமைப் பாடலைக் கூற, இறந்த உடலும் திரும்பி புலவருக்கு இடங்கொடுக்க, அவனுடன் தீப்பாய்ந்து உயிர்நீத்தனர் என்ற செய்தி இத்தலத்தைப் பொறுத்தது.

இக்கோயிலுக்கு மோஹினி இல்லை. மற்றச் சொத்துக்களிலிருந்து வருமானம் சுமார் ரூ. 332. தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தாரின் ஆளுகைக்குட்பட்டது.

**திருவாதி ஸ்ரீவேணுகோபாலன் கோயில்,** தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தின் பராமரிப்பிலுள்ள இச்சிறு கோயில் திருவையாற்றில் காவிரியின் தென்கரையில் ஜில்லா முனிசிப் கோர்ட்டுக்கு வடக்கிலுள்ளது. வெகுகாலமாக கோயில் உலைந்தும் ஸ்ரீபெருமாள் உற்சவத்திருமேனிகள் திருப்பூந்துருத்தி கிராமத்திலுள்ள பெருமாள்கோயிலில் வழிபாட்டிலுள்ளது.

இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினி இல்லை, தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தாரின் திட்டம் ரூ. 25—8—0

## கருந்திட்டைக்குடி திருக்கோயில்கள்.

### ஸ்ரீ கோடியம்மன் கோயில்.

ஸ்ரீகோடியம்மன் கோயில் புராதன பிரதிஷ்டையாகவும் நகர் காப்புத் தெய்வமாகவுமிருத்தல் வேண்டும். இப்போது தஞ்சைக் கரந்தை விண்ணாற்றங்கரை பெருவழியில் அமைந்துள்ளது. ஆதிக்கோயில் தஞ்சையின் வடமேற்கில் பொங்கிரிபாளையத்தினருகே அமைந்திருந்தும், பிற்காலத்தில் அங்கிருந்த மணிக்குன்றன் திருக்கோயிலும் மற்றவைகளும் விண்ணாற்றங்கரைக்கு மாற்றப்பட்டபோது இச்சன்னிதியும் இப்போதிருக்கும் தலத்தில் சாந்தாகார உருவமாக பிரதிஷ்டையாகியுள்ளது.

தஞ்சைத் தலமான்மியத்திற்கிணங்க, விஷ்ணுவால் தஞ்சகன் தண்டகன் முதலாய அசுரர்களிடமிருந்து இந்த நகரை மீட்கவும்



ஸ்ரீகாளிகாதேவி தாரகனை வதஞ்செய்யவும், பராசரரும் மற்ற முனிவர்களும் அப்போது இலங்கிய ரூபத்துடன் நின்று காத்தருளவேண்டுமென வேண்ட, அம்பிகையும் கோட்டீரவமென்கிற சடைமுடியுடைய கோடிக்காளியாகவும், சாமளை ரூபமாய் பச்சைக் காளியாகவும், தாரகனின் உதிரம் தம்மேல் சோரியிருந்தமையால் பவழக்காளியாகவும் கோட்டீரசாமள பிரவாளகாளியாய் நின்று காத்தருளுகிறாள் என்பது.

சரித்திரகால சோழவம்சத்திற்கு அடிகோலினவனை விஜயாலயச் சோழன் முத்தரையர்களிடமிருந்து தஞ்சைநகரைக் கைப்பற்றி, அதனைப் புதுப்பித்தும் அங்கு நிசும்பசூதனி என்ற துர்க்கைக்கோயிலை நிருமாணித்தான் என்று முதலாம் இராஜேந்திர சோழனது திருவாலங்காடு செப்பேட்டில் * பொறித்துள்ளபடி, இக்கோயிலானது பொங்கிரி பாளையத்திலிருந்த ஆதிக்கோடிக் காளியம்மன்கோயிலாகவே இருத்தல் வேண்டும். இதற்கேற்ப அங்குள்ள ஆதிக்குடிகளும், இராஜராஜசோழன் நாளது வரையிலும் தஞ்சைப் பெரியகோயில் சித்திரை வருடவிழா அஷ்டகொடியன்று பெருமைப்படுத்தும் அறுபத்துநான்கு மனைச் செட்டியார் குடிகளும் இத்தேவியாரைத் தம் குலதெய்வமாகவும் கொள்ளுகிறார்கள்.

புராதன காலமாக இத்தலத்தில் குடியிருந்துவந்த பொங்கிரி ஜாதியார் கோடியம்மனின் புராதன ஐதீக வரலாற்றை வருடந்தோறும் ஆட்டரூபமாக ஆடிவருங்கால், மகாராட்டிர மன்னர் ஒருவர் காலத்தில் அவ்வாட்டத்தினிடையில் ஆவேசமுற்று ஒருவரையொருவர் கொன்று மாய்ந்தனர்என்றும்; அரசன் கவலையுற்றுழி, தேவியானவள் அசரீரியாக தாம் ஒரு திரையின் நிழலில் தோன்றுவதாகத் தெரிவிக்கவும் அரசன் திரையிட்டு தீபங்கள் ஏற்றி ஆராதனை செய்ய, ஸ்ரீகாளிகாதேவியும், பச்சைக்காளி பவழக்காளி ரூபங்களாக அத்திரையின் மீது தோன்ற, அதுமுதல் அத்திருவுருவங்களையே உருவகப்படுத்தி ஆட்டை விழாவில் பங்குனிமாதந்தோறும் பதினொரு நாள் கொலுவிருத்தி, தாரகனைச் சங்கரித்த தினமாகிய மங்களவாரத்தில் நகர்முழுதும் பவனிவருதலாகிய விழாவும் நடந்துவருகின்றது. விழாத்தினங்களிலொன்றில் இக்காளிகாதேவி கழுமோடு கிராமத்துக்கும் எழுந்தருளச்செய்து, அங்கொரு நாள் தங்கி மிக்கச் சிறப்புகளும் வழிபாடுகளும் நடந்து வருகின்றன.

* Vide S.I.I. III, p: 418; also Epi: Ind: XVIII, p. 42

மற்றும் இத்தேவியின் உத்ஸவத் திருமேனிகள் சுமார் 35-ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சைமேலஇராஜவீதியின்மத்தியில் மேலசரகில் உள்ள ஓம் அழகிய பிள்ளையார் கோயிலின் தென்பாரிசத்தில் உற்சவக்கோடியம்மன் சந்நிதியாக பிரதிட்டித்து விளங்கி வருகின்றது. இக்கோயில்களுக்கு பரம்பரை பூசாரியாக தற்போது உள்ளவர்கள் திரு. சா.வெங்கடாசலம் பிள்ளை, ம. சுந்திரம் பிள்ளை, ரா. கரும்பாயிரம் பிள்ளை ஆவர்.

இக்கோயிலுக்கு வருமானம் அரசாங்க மோகினித்தொகை ரூ. 13—2—0 உட்பட மொத்தம் சுமார் ரூ. 20—5—6

**சித்திவிநாயகர்கோயில்,** தஞ்சை விண்ணாற்றங்கரை பெருவழியிலுள்ள புராதனக் கோயில். கில்லண்ணு அப்பாமண்டபம் என்ற மண்டபத்தின்கண் ஸ்ரீசித்திவிநாயகரை கும்பகோணத்திற்கடுத்த ஆரியப்படையூர் கிராமத்தில் வசித்த ரகுசாமி அப்பா போன்சலே அவர்களால் அமரசிம்ஹராஜாகாலத்தில் பிரதிஷ்டைசெய்யப் பெற்றதென்பர். இக்கோயிலுக்காக அவர் ஆரியப்படையூரில் இதற்கு மானியமாக விடப்பட்டு அதன் வருமானம் செலவாகி வருகிறது. விநாயகசதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. கோயிலுக்குள் புஷ்கரணி ஒன்றும் அழகுற அமைந்துள்ளது.

கோயிலுக்கு அரசாங்கமோஹினித்தொகை ரூ 131-4-0உடன், மொத்த வருமானம் சுமார் ரூ. 989–15—0. சொத்து விபரம் காசாத்தோட்டம்; ஆரியப்படையூர் நஞ்சை வேலி 4—5—85

**ஸ்ரீகருவேலநாதசுவாமிஎன்கிற வசிஷ்டேசுவரசுவாமிகோயில்.** அம்மையார் திருநாமம் **பெரியநாயகி ; திரிபுரசுந்தரி** அம்பாள். தஞ்சைக் கருந்திட்டைக்குடி கீழ்பாகத்திலுள்ள புராதனச் சோழர் கோயிலாகும். இத்தலத்திற்கு பதுமபுராணத்திலும், பிரமாண்டபுராணத்திலும், சூதமுனிவரால் அருளிச்செய்த அளகாபுரிபுராணம் என்ற **"சமீவன க்ஷேத்திர மாகாத்மியம்"*** என்ற வரலாறு ஒன்றுண்டு. ஆதியில் இந்த இடம் வில்வவனமாக இருந்ததென்றும், பின்பு குபேரன் இவண் வந்து நகரமொன்றுண்டாக்கிச் சிவபிரானை வழிபட்டுத் தவஞ்செய்த சிவமுகூர்த்தங்கள் அளகீசர்,

* கி. வாசுதேவ நாயக்கர்— தஞ்சைமாநகரத் தலபுராணம் 1893. இந்நூலில் இதன் விரிவான வரலாற்றை அறிந்துகொள்க. Also vide, Sarasvathi Mahal Library MS. No. 1838. அழகாபுரீ என்ற சமீவன க்ஷேத்திரபுராணம்,



224743

அம்மை அசலாம்பிகையென்றும், மற்றும் தெ[illegible] கருங்குட்[illegible]யிருப்பதைக் கண்ட ஒரு சோழனுக்கு, சிவபெ[illegible]யாகத் தோன்ற அதனை துரத்திக்கொண்டு செல்ல அது இத்திருக்குளத்தில் மறையவும், அரசன் அதனில் முழுகி எழ, குட்டநோய் தீர்ந்தானென்பதும், அதுபற்றி இக்கோயிலை எடுப்பித்துத் திருவிழாக்களை ஏற்படுத்தியதாகவும் சமீவனபுராணங் கூறுவது.

இக்கோயில் அப்பர் சுவாமிகளால் குறிக்கப்பெற்ற தேவார வைப்புத்தலங்களிலொன்றாகும். A இக்கோயிற்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள 10-கல்வெட்டுகளை * அரசாங்க கல்வெட்டு பரிசோதகர்களால் ஆராயப்பெற்று **"தென்னிந்திய கல்வெட்டுகள்"** என்று வெளிவந்துள்ளதை ஈண்டு முழுதும் பிரசுரிக்கப்படுகிறது. 42-நெ. கல்வெட்டால் மதுராந்தகச் சோழன் மகன் கந்தராதித்தனால் இக்கோயில் விளக்குகளுக்கு நெய்க்காக ஆடுகள் தானமாக விடப்பட்டதும் ; நெ. 43-ல் மற்றொரு தானமும், இராஜேந்திர சோழனது 3-வது வருடத்தியதான நெ-44, 45ம், இராஜராஜனது நெ.46-ம் இக்கோயிலுக்காக நிலம் வாங்கியதும், நெ.50ல் இராஜேந்திரனால் சுவாமிக்குக் கொடுத்த தங்ககிரீடத்தைப் பற்றியும், நெ. 51-ல் இரண்டு துவாரபாலகர் உருவங்களைக் கோயிலில் நிறுவியிருப்பதான விபரத்தையும் கண்டிருப்பன.

இக்கோயில் மேல்புறத்தில் அமர்ந்துள்ள தண்டாயுதபாணி சந்நிதியில் பொறித்துள்ள கல்வெட்டுக்களால் (1) "ஷை சந்நிதி மண்டபம் 1767-ஆம் விசுவாவசு அற்பிசி தனுர்லெக்னத்தில் சுப்ரமணியன் குமாரன் சொக்கலிங்கம் என்பவர் ஷை சந்நிதி மண்டபம் கட்டி

A நற்கொடிமேல் விடையுயர்ந்த நம்பன் செம்மங்குடி
நல்லக்குடி நளி நாட்டியத்தான்குடி
கற்குடி தென்களக்குடி செங்காட்டங்குடி
கருந்திட்டைக்குடி கடயக்குடி காணுங்கால்
விற்குடி வேள்விக்குடி நல்வேட்டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி
புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே.

— அப்பர், அடைவு திருத்தாண்டகம் 3.

* Vide, Epi. Rep: 1897, Ins. 39 to 51; also, South Indian Inscriptions (Texts) Vol. V pp. 506—510

கும்பாபிஷேகம் செய்தாரென்றும்; (2) சாலிவாகன 1710 பிரபவ, தைமாதத்தில் மாதந்தோறும் சஷ்டி உபயம் செய்கிறவர் கட்டின மண்டபம், ஆறுமுகவாத்தியாரென்றும், (3)சாலிவாகன 1879 வெகுதான்ய, மாசி ஸ்ரீவசிஸ்டேச்வரசுவாமி கோயில் ஸ்ரீ தெண்டாயுதபாணி உத்ஸவ விக்கிரகத்திற்கு சன்னிதி ஏற்படுத்தி பிரதிஷ்டை செய்து தென்புரம் அலங்காரமண்டபம் கட்டி ஷஷ்டி உத்ஸவம் நடந்துவருகிறதும் தவிர விலிஸ்ரீ தை-மீ த்தில் சுவாமி கைங்கரிய சாமான்களுக்கும் மண்டப அறை ஏற்படுத்தப்பட்டது. யாசகத்தில் பில்கலெக்டர் குப்புஸாமிஅய்யர் உபயம்'' என்றும் கண்டிருக்கிறது.

இப்போது இக்கோயில்திருப்பணிகளில்சிறந்தபற்றுடையவர்கள் திரு. த.நா. கோவிந்தராஜுலுபிள்ளை; வீ.கி. இரத்னவேலுபிள்ளை ஆவர். சென்ற ஒன்பது ஆண்டுகளாக வைகாசி பிரம்மோத்ஸவ திருவிழாவில் ஈடுபட்டும் அவர்கள் அதனை நடத்தி வருவது குறிப்பிடுவதாகும்.

சிறப்புக்கள்:—

இராணிசாகேப் மாதுஸ்ரீ தீபாம்பாபாய்சாகேப், மாதுஸ்ரீ ராமகுமாராம்பாபாய்சாகேப் அவர்களால் செய்துகொடுக்கப்பட்ட பல்லக்கில் பெரியநாயகி அம்மையாருடன் ஸ்ரீசப்தரிஷீசுவரரும், வெட்டிவேர் பல்லக்கில் அருந்ததி சமேத வசிஷ்டரும் ஆண்டு தோறும் வைகாசி பிரமோத்ஸவத்தில் கேட்டையில் சப்தஸ்தானம் என்னும் ஏழுத்தலச் சுற்றுவிழா 1895-வருஷம் வரை தஞ்சையிலும், கரந்தை, விண்ணாறு, மகர்நோம்புச்சாவடி முதலிய இடங்களிலும் ஏழுதலமாக நடந்தேறியும்; அதன் பின்பு தேவஸ்தான 'ஏஜண்டு' துரைசாமி அய்யங்கார் உதவியால் ஊரார்கள் வேண்டுகோளுக்கிணங்கி இப்போது (1) கருந்திட்டைக்குடி, (2) திருவிண்ணாறு, (3) தென்குடித்திட்டை, (4) கூடலூர், (5) கடகடப்பை, (6) புன்னைநல்லூர்—மாரியம்மன்கோயில், (7) தஞ்சை திருப்பூமாலைராவுத்தன் கோயில் ஆகிய ஏழு தலங்களில் திருவுலா சுற்றிவருகின்றது. ஒன்பதாம் நாளில் தி ரு த் தே ர் உலாவும் நடைபெறுகின்றது.

ஆடிப்பூரத்தில், வைத்தியம் த. ஜி. நாராயணசுவாமி பிள்ளை கொடுத்த மூலதனத்தின் வட்டியாலும், மற்றும் கரந்தைச் சைவ பெருமக்களின் உதவியாலும் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு விழா நடைபெறுகிறது. இச்சிறப்புக்காகத் திருப்பணியாளர்கள் அழகிய புதிய சோரதம் ஒன்று சமீபத்தில் செய்தும், ஏழாந்திருநாள் கைலாச வாகனத்தைப் புதிப்பித்தும் உள்ளார்கள்.



இத்தலவிருக்ஷம்-வன்னி; தீர்த்தங்கள் நான்கெனவும், அவற்றுள் ஆலயத்தின் கீழ்புறமுள்ள கோயிற்றிருக்குளம்-சூரிய புஷ்கரணியாகும். மார்கழி-தனுர்மாதத்தில் தீர்த்தமும் இத்திருக்குளத்தில் இம்மாதம் முழுதும் முழுக்கு அநுசரிப்பதால் சகல பிணிகள் விலகுமென்பதும் ; பங்குனி-மீ 3, 4, 5 தேதிகளில் கோயிலில் சூரியபூஜைச் சிறப்பும் குறிப்பிடுவதாகும்.

சொத்துக்கள். லெக்ஷுக்தோப்பு 10-மா; பொம்மணித்தோட்டம் ந. வே. 2, மா. 10; கூடலூர் ந. 0-9-60; அரசாங்கமோஹினித் தொகை ரூ. 308—7—0 உடன் மொத்த வருமானம் சுமார் ரூ. 807—2—6

---

## ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் கோயில் கல்வெட்டுகள்.

## No. 1406 of S. I. I. Vol. V. (Texts).

(A. R. No 43 of 1897) on the same wall of a private gift.

ஸ்வஸ்திஸ்ரீ இப்படைஇல் இருபத்துஇரண்டு கல்லுகிவஆணைக் காவான் தாயார்க்கும் தநக்கும் இருபத்தொன்று காசுபற்றின

## No. 1407

(A.R. No. 44 of 1897) of the 3rd year of Rajendra choladeva from the same place

ஸ்வஸ்திஸ்ரீ கொப்பாகேஸரி பந்மரான ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்றுவது நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து பிரம்ம தேயம் போாலத்தூர் சபை யோம் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் கருந்திட்டைகுடி மகாதேவர்க்கு மூலப்ருத்தியரான ஆதிசண்டேஸ்வரதேவர்க்கு ந — — ஒட்டிக்கைத்திட்டு இட்டு குடுத்த பரிசாவது தேவர்பக்கல் நாங்காள் கொண்ட காசு எழுபத்தஞ்சு; இக்காசு எழுபத்தஞ்சுகொண்டு இத்தேவர்க்கு சந்திராதித்தியவற இறையிலி செய்துகுடுத்த நிலம். இவ்வூர் பாலாப்ரியன் பரமேஸ்வரன் ஸ்ரீ ராகவன்பக்கல் விலைகொண்ட நிலம் உள்ளங்கால் என்று பெயர் கூவப்படும் நிலத்துச்குக்கீழ்பார்க் கெல்லை வெள்ளானூர் நிலத்துச்கு மேர்க்கும் தென்பார்க்கெல்லை. இச்செய்கெ புகுதப்பாதை வாய்காலுக்கும் வெள்ளானூர் நிலத் துக்கு வடக்கும் மேல்பாக்கெல்லை வேள்ளானூர் நிலத்துக்குக் கிழக்

கும் வடபார்செல்லை கிடங்கல் நின்றும் கிழக்குநோக்கிப் போன வாய்க்காலுக்கும் வெள்ளாளூர் நிலத்துக்குத் தெற்கும் ஆக இவ் விசைத்த பெருமான்.

## 1408

(A. R. No. 45 of 1897) in the same place of Rajendra I

ஸ்வஸ்திஸ்ரீ கொப்பரகேஸரி பன்மரான ஸ்ரீராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு — — — ர் பால — — — த்த நிலவிலையா வணமாவது தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் கருந்திட்டைக்குடி மகாதேவற்கு பூலைப்புக்கியான சண்டேஸ்வரதேவர்க்கு நான் விற்றுக்கொடுத்த நிலமாவது இவ்வூர் என் நிலம் முள்ளங்காலென்று பெயர் கூவப்படும் நிலம் புத்தகப்படி நூற்றுஇருபத்தெட்டுக் குழி கொண்டது ஒரு மாவாக வந்த நிலம் ஆமா முக்காணி அரைக் காணி — — — முந்திரிகைகீழுமர் — — — வெள்ளாளூர் நிலத்துக்கு மேற்கும் தென்பார்க்கெல்லை இச்செய்கை புகுதபாதைவாய்க்காலுக்கும் மேல்பா — — —லை சாட்டக்கடவல்லதாராக இப்பரிசு விலைக்கு விற்று பொருளறப்பெற்றுக்கொண்டு இக்காசு இருபதுக்கும் விற்று விலையாவணம் செய்து குடுத்தேன். ஸ்ரீசண்டேஸ்வர தேவர்க்கு பால ஸ்ரீயன் பரமேஸ்வரன் ஸ்ரீராகவனென் இவர் பணிக்க இந்நில விலையாவணம் எழுதினேன். இவ்வூர் மத்தியஸ்தன் நாலூர்றுவன் ஸ்ரீகிருஷ்ணனேன கற்பகப்பிரியனென் இவை என் எழுத்து. இப்படி அறிவேன், வாதுலன் கண்ணன் உலோகநாதனென் இப்படி அறிவேன். பாரதாயன் குஞ்சரமல்லன் நின்றனென் இப்படி அறிவேன். பாரதியன் நின்றன் கதினென் இப்படி அறிவேன். வைகாஸனன் பாரத்துவாசி வாசுதேவன் அப்பியேன் இப்படி அறிவேன். பாரதாயன் காடன் சாத்தனேன் இப்படி அறிவேன். பாரதாயன், பரமேஸ்வரன் திருவரங்கனென் இப்படி அறிவேன். பாரதாயன் பாண்டன் பாண்டனென் இப்படி அறிவேன். வைகாசனன் கைசிகன் சிதான் அருமொழியேன்.

## 1409

(A.R. No. 46 of 1897) of Rajaraja I of a sale of land to the temple On the south and west walls of the same shrine.

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போல பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொள்ளக்காந்தளூர்சாலைகலமறுத்தருளி



வேங்கைநாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும், தடிகை பாடியும் குடமலைநாடும், கொல்லமும், கலிங்கமும் எண்திசைநிகழ ஈழமண்டலமும், இண்டிறல்வென்றி தண்டாற்கொண்டு தன்னெழில்வளர் ஊழியுள் எல்லா ஆண்டுந்தொழுதக விளங்கும்யாண்டே செழியரை தேசுகொள் ஸ்ரீகோவிந்தராஜராஜராஜகேஸரிபன்மைக்கு யாண்டு பதினேழுஆவது நித்தவிநோத வளநாட்டு நல்லூர்நாட்டு பிரம்மதேயம் ஸ்ரீராஜகேஸரி சதுர்வேதி மங்கலத்து மகா ஸபையோர் விற்ற நிலவிலையாவணம் நம்முடைய சக்கிரவர்த்தி பிராமணஊர்களில் பிராமணர்க்குக் கீழ்ப்பட்ட ஜாதிகளில் காணிகளில் பணி செய்மக்கள் பணிசெய்காணி யொழிய நின்றார். காணி விற்கவென்று அருளிச்செய்ய புக்க கேழ்விப்படி அதிகாரிகள் மானவன் மூவேந்த வேளார் அடைவுகுத்துவித்து வரிசை விட்டபடி விற்று காசுதண்டுக என்று அருளிச்செய்தது உடையார். பணிமகன் சாத்தம்பியாரை ஏவ, இச்சாத்தம்பியார் கண்டமஹாசகயோம்விற்றநிலவிலையாவணம் நம்முடைய சக்கிரவர்த்தி ஸ்ரீபாராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீகுந்தவைபிராட்டியார் இன்நித்தியவிநோதவளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் புரம்பாடி வடவாற்றின் வடகரை கருந்திட்டைக்குடி தேவர்க்கு திருநொந்தாவிளக்கு வைப்பதற்காக இ. ஸ்ரீ. பராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீகுந்தவை பிராட்டியார்க்கு மகா சபையோர் விற்றுக்குடுக்க நிலமாவது இவ்விராஜகேஸரிச் சதுர் வேதி மங்கலத்து நாகேதாங்கவதித்தேர்க்கு வழாங்கண்ணாற்று ராஜகேஸரி வாய்க்காலுக்கு தெற்கு மூன்றாம் சதிரத்திற்கு வடக்குடைய நிலம் மூன்று மாவும் நரகேதாங்கவதிக்கு மேற்கு 4-ம் கண்ணாற்று ராஜகேஸரி வாய்க்காலுக்கு தெற்கு 2-ஆம்(ஞ்ச)சதிரத்து தெற்கடைந்தவாகாவிலெதெற்கடைந்த ஒருமாவரையும் ஆகநான்மா வரை செய்யும் விற்று விலையாவணம் செய்துகுடுத்தோம் ஸ்ரீபராந்தகதேவர் திருமகளார் ஸ்ரீகுந்தவை பிராட்டியார்க்கு ஸ்ரீராஜகேஸரிச் சதுர்வேதிமங்கலத்து மகாசபையோம் இன்னிலன் நான்மாவரை செய்யும் விற்று விலையாவணம் செய்துகுடுத்துக்கொண்ட விலைப்பொருட்காசு ஈழக்காசு வாசிபடாமைச்செல்லுங்காசு எம்மில் இசைந்த விலைப்பொருட் காசு — இவ் எண்பத்தொண்ணாரையை மூன்றுமா அரைச்காணிக்குக் கீழ்ப்பட்ட ஜாதிகளிலார் காணிவிலைக் காசுக்கே செலவாக — — — நிப்பித்து இந்நிலத்திற்கு இதுவை விலையாவணமும் இதுவை பொருமாவருதிபொருள் சிலவோலையும்

இதுவே ஆவதாகவும் இதுவல்லது வேறு பொருட் மாவருத்திப் பொருட் சில வோலை காட்டக்கடவார் அல்லாதாராக இப்பரிசு ஒட்டி விலைக்கா விற்று பொருள் அறக்கொண்டு விற்று விலையாவணம் செய்துகுடுத்தோம், நம்முடைய சக்கிரவர்த்தி ஸ்ரீபராந்தகதேவர் திருமகளார ஸ்ரீகுந்தவை பிராட்டியார்க்கு ஸ்ரீராஜகேஸரி சதுர்வேதிமங்களத்து மகாசபையோம் பணியால் இவ்வூர்மத்யஸ்தன் திருவேங்கடவன் ஆயர் கோழுந்தினென் இவை என்எழுத்து இப்படி அறிவேன். இவ்வூர் வைகானசன் காச்யபன் ஸ்ரீவாசுதேவன் ஆருவெழுதனின் இப்படி பணியால் மத்யஸ்தன் வெங்கடவன் அரங்கனென் இவை என்னெழுத்து இப்படி பணியால் இவ்வூர் மத்யஸ்தன் வில்லிற்கிடந்தானை மங்கலாச்சனின் இவை என் எழுத்து இப்படி அறிவென் வைகானச சூத்திரத்து கௌதமன் கோவிந்தன் சிங்கப்பெருன்(னென்)எழுத்து இப்படி பணியால்மத்யஸ்தன் அரங்கம்பூதியான மங்கலோத்தமனென் எழுத்து இப்படி பணியால் இவ்வூர் வெட்கோவன் புரர்பியன்நெச்சில் மண்டையன் எழுத்து இப்படி பணியால் மத்யஸ்தன் அறங்கம் உலகனை சாதுப்பிரியனென் இவை என்னெழுத்து இப்படி பணியால் இவ்வூர் வெட்கொவன் பொய்யிலிதெவன் எழுத்து. இப்படி பணியால் இவ்வூர் வெட்கோவன் நக்கன் முந்தரையன் எழுத்து. இப் பதினேழாவது இவ்வோலை பேற்பட்ட நிலம் நான்மாவரையும் இத் தஞ்சாவூர் புறம்படி வடவாற்றின் வடகரை இக் கருந்திட்டைக்குடி தேவர்க்கு சந்திராதித்யவர் நொந்தாவிளக்கு நன்கெரிப்பதற்கு இத்தேவர்கே உரித்ததாகக் குடுத்தேன். பராந்தகன் குந்தவையேன் இப்படி பாடருளி செய்ய எழுதினேன். இவர்க்கு அதிகாரஞ்செய்கின்ற சிறுபெரு உடையான் கோ............ரன் தென்னவன் எரியூர் நாட்டுவேளானென் இவை என் எழுத்து இப் பரிசு ........ அறிவேன். இப்பிராட்டியார்க்கு அதிகாரஞ் செய்கின்ற நாகமங்கிழான் அங்காடி சூற்றிய்யென் இவை என் எழுத்து இப்படி குடுத்தமை அரிவேன். இப்பிராட்டியார் கணக்கு பூவனூர் உடையான் வர குணன் சிங்க — — — — படி குடுத் — — — வேன் ஆழ் — — — ன் என்பா — — — இவை என் எழுத்து இப்படி குடுத்தமை அறிவேன் ஆழ்வார் காணத்தான் மருதங்குடையான் மாயிலெட்டி ஆச்சனேன்.



## 1410

(A. R. No. 47 of 1897) On the west wall of the same shrine a fragmentary record of Rajaraja I

த்ரிபுவனச் சக்கரவர்த்திகள் ராஜ ராஜ தேவர்க்குயாண்டு இருபத்தொராவது கும்ப — — — ஒரு நாள் பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்று — — —

## 1411

(A. R. No. 48 of 1897) On the same wall of the 24th year of Rajaraja I of a gift of a lamp.

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச்செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்காந்தளூர்சாலை கலமருத்தருளி வேங்கைநாடுங் கங்கைபாடியுநுளம்பாடியுந் தடிகைபாடியுங் குடகு மலைநாடும் கொல்லமும் கலிங்கமும் எண்திசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி எழரை இலக்கமும் தெண்திரல் வென்றித் தண்டால் கொண்ட தன்னெழில் வளருழியுள் எல்லாயாண்டும் தொழுதெழவிளங்குய்யாண்டே செழிஞரைத்தேசுகொள் ஸ்ரீகோவிராஜராஜகேஸரி பன்மரான ஸ்ரீராஜராஜாதேவர்க்கு யாண்டு இருபத்திநாலு ஆவது ஸ்ரீராஜராஜதேவர் சிருதனத்து சிறுகளாந்தக தெரிஞ்ச குதிரைசேவகரில் அரங்கன் காரியான சோழவிச்சாதிர முத்தரயனோடு இளையபடை இருமுடி சோழவீரரில் காரிகுளர் வாகை ஸ்ரீராஜராஜதேவர் கர்னவில்லெடுக்கதொளம் எய்து காரி குளர்வாகைபட்டமையால் இவனுக்குரவுமுறை கடவரான காரினக்கத்தின் மகன் கண்டன்காரியும் காரிகொற்றத்தின் மகள் கண்டன் பொற் காரியும் இவள் கொழுந்தன் குட்டிபொன்னுடையும் உள்ளிட்டாரோடும் திருந்தி இந்த ஸ்ரீ கோயில்மாதேவர்க்கு வைத்த நொந்தாவிளக்கு சந்திர ஆதித்தவர் எரிக்கக்கடவரித்தளியில் ஸ்ரீகோயிலுடையார்கள்.

## 1412

(A.R. No. 49 of 1897)
A damaged record on the north wall of the same shrine,

ஸ்வஸ்தி ஸ்ரீகொப்பரகேஸரிபன்மர்க்குயாண்டு இரண்டுஆவது புரம்படி கருந்திட்டைகுடி மாதேவர் கோயில் உடைய கௌசியன் கணபதிசூற்றியனும் பக்குடிசுதந்தியும் இவ்விருவோம்இதஞ்சாவூர் வீரசோழப் பெருந்தெருவில் திருதான சோமபிரான் கோயில்

சாணியுடைய ஆத்திரையன் சிதரம் தாழியான இராமேஸ்வர முடையானுக்கு இக்கருந்திட்டைக்குடி மாதவர் கோயிலில் விற்று குடுத்த நாள் திங்கள் முப்பது வட்டத்து இருபதும் இவ்வூர் பிடாரி கோயில் நாள் இருபதும் சந்திராகாளிகோயில் நாள் இருபதும் இவன் அனுபவிக்க நாங்கள் மூவெரோடந்தபடி.

## 1413

(A. R. No. 50 of 1897) On the same wall of the 5th year of Rajendra I, records gift of a gold diadem

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னிவளர இருநில மடந்தையும் பொற் சேயப்பாவையும் சீர்தனிச் செல்வியும் தன்பெருந் தேவியராகி இன்புற நெடுந்தியல ஊழியுள் இடைதுறை நாடும் தொடர்வன வேலிப்படர் வனவாசியும் சுள்ளிசூழ் மதில் கொள்ளிபாக்கையும் நண்ணற்கு சருமுரன் மண்ணைக்கடகமும் மாபெருந்தண்டால் கொண்ட கோப்பரகேஸரி பன்மரான ஸ்ரீராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு ஐந்து ஆவது தஞ்சாவூர் புரம்படி கருவிட்டகுடி மகாதேவர்க்கு யாண்டு நான்காவதுவரை பலவகையாலும் இட்டார் இட்ட பொன்னால் பட்டங்களும் பொற்பூக்களும் கண்மணிகளும் நெருஞ்சிப்பூக்களும் பிடிவிகை வாரியால கூடின பொன்னும் ஆக பலவகையாலுங்கூடி பொன் ஒன்பதுமாபி குழைநைக்கல்லாலிறை பொன் இருபதின் கழஞ்சே அரைக்காலினால் ராஜேந்திரசோழன் பட்டபொன்று

## 1414

(A R. No. 51 of 1897) On the East wall of the same shrine, Right of entrance, of the 10th year of Ko Parakesarivarman. Records the setting up of the images of two dvarapalakas near which the inscription is found.

ஸ்வஸ்திஸ்ரீ கொப்பரகேஸரி பன்மற்கு யாண்டுபத்தாவது இத்துவாரபாலகர் இருவரையும் செய்வித்து எழுந்தருளிவித்தான் செம்போர்க் கொட்டத்து பட்டிநாட்டுபெழும்பட்டினத்து இருக்கும் வெள்ளாட்டி அருணிவிமலைப்பிராட்டி.

## 1415

(A. R. No. 42 of 1897)

On the south wall of the central shrine in the Vasishteswara Temple at Karuntattangudi; of Gandaraditya son of Madurantaka Gift of sheep for a lamp,

ஸ்வஸ்தி ஸ்ரீ கொப்பரகேஸரி பன்மற்கு யாண்டுபத்தாவது தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் புரம்படிக் கருந்திட்டைகுடி மகா தேவர்க்கு மதுராந்தகன் கண்டராதித்தன் வைத்த ஆடு 96-ம் கொண்டு நெய்யட்டக்கடவமன்றாடி.



படித்துறை ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் கரந்தையில் மணிமுத்தாநதியென்ற வடவாற்றின் தென்கரையிலிருந்தும்; பிறகு வடகரையில் பிரதிட்டை செய்விக்கப்பெற்றதெனத் தெரிகிறது. ஸ்ரீ பெருமாள் உபயநாச்சியாருடன் கிழக்குத் திருமுகமண்டலத்தோடு நின்ற திருக்கோலம், தனித்தாயார் திருநாமம் அலமேலு மங்கைத் தாயார். ஸ்ரீநிவாசன், சூரியன், ஆண்டாள், கருடனுக்குத் தனிக்கோயில்களும் உண்டு.

வைகாசியில் திவ்யதேச கருடசேவையுடன் ஸ்ரீ பெருமாள் உபயநாச்சியாருடன் சேவை சாதிக்கிறார்.

சொத்து. ஆவுசாகேப் தோட்டம் பு. 15 மா. மோஹினித் தொகை ரூ. 5—7—6. தேவஸ்தானத்திட்டச்செலவு ரூ. 72

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயில். கருந்திட்டைக்குடி பெருவழியில், மேலைநகில் மதுரைத் திருவிளையாடலிற் குறித்த மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திர சிறப்புக்களை நினைப்பூட்டக் கூடியதோர் புராதனக்கோயிலாகும். இதற்குச் சம்பந்தப்பட்ட மற்றொரு தஞ்சைக்கோயில், பூபாலராயுத்தன் கோயிலாகும். ஸ்தலவிருக்ஷம் வன்னியாகும்.

பிரம்மோத்ஸவம் ஆவணி மூலத்தில் பத்து நாட்கள் சிறப்பாக நடைபெறும். இக்கோயிலில் காணும் இரண்டு கல்வெட்டுகள், அர்த்தஜாமக்கட்டளைக்காக விடப்பட்ட இரண்டு தானங்களைக் குறிக்கின்றன. மற்றும் இக்கோயிற் பணியில் சிறந்த அபிமானஸ்தர்களில், திரு. வ. மருதப்பா பிள்ளை, P. V. ராமய்யர் முதலியவர்களைக் குறிப்பிடவேண்டியதாகும்.

சொத்து. சாசாத்தோட்டம்; கொடிக்காலூரில் ந. 0-18-85. அரசாங்க மோஹினித் தொகை ரூ. 78-12—0 உடன் மொத்த வருமானம் சுமார் ரூ. 772—1—4

இக்கோயில் வெளிவாயிலுக்கு தென்புறத்தில் **ஆனந்த உச்சி விநாயகரது** ஆலயம் ஒன்றுண்டு. அன்பர்களால் விநாயகருக்கு நவராத்திரி விழாவும் ஏழைகளுக்கு அன்னதானமும் சிறப்பாக நடைபெறுகிறது.

## மற்ற கோயில்கள்.

கரந்தை, மந்தாரடி கீழவெள்ளாளத்தெரு ஸ்ரீஅமிர்தலிங்கவிநாயகர் கோயிலைப் பொறுத்து சோமாசிமாறநாயனார் யாகத்திருவிழா சென்ற 35-ஆண்டுகளாக வைகாசியில் கஃநர் திரு. த.நா. பொன்னுசாமி பிள்ளை, த.தெ. மகாலிங்கம் பிள்ளை, கரந்தை அ.ப. அருணாசலம் பிள்ளை முதலியோரால் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

கரந்தை மேல, கீழ வெள்ளாளத்தெரு, வடுகத்தெரு, ஸ்ரீசெல்லியம்மன் கோயில் ஆண்டுவிழா சித்திரையில் காப்புக்கட்டி தேர் விழாவாகச் சிறப்புடன் நடந்துவருகிறது.

கரந்தை ஸ்ரீகிருஷ்ணன் கோயில் யாதவர்களுக்குக் குலதேவதையாகவும் புராதனக்கோயிலாகவும் இருக்கிறது.

---

## மாரியம்மன் கோயில் திருக்கோயில்கள்.

### ஸ்ரீ மாரியம்மன் கோயில்.

தஞ்சாவூருக்குக் கிழக்கே 3½மயில் தூரத்தில் புன்னை நல்லூர் என்ற புராதனப் பெயருள்ள கிராமம், பின்பு ஸ்ரீமாரியம்மன் கோயில் பிரபாவத்தாலும் தேவியின் அருட்சக்தியாலும், சிறப்புற்று கிராமத்துப் பெயரே தேவியாரின் பெயரால் ஆயது. இக்கோயில் மிகப்புராதனமென்றே சொல்லவேண்டும். சோளேந்திர விஜயம் என்ற வடமொழிநூலில் இக்கோயில் குறிப்பிட்டுள்ளதால் சோழர்காலத்துக் கோயிலேயாதல் வேண்டும். அதற்குச்சான்று இக்கோயிலுக்கு விடப்பெற்ற இனாம்கிராமம் முதலாம் இராஜராஜனின் பெயராகிய அருண்மொழித்தேவன் என்பதைத் தாங்கி அருண்மொழிப்பேட்டை என்றிருப்பதுமாகும். மற்ற மானிய நிலங்கள் — மாரியம்பாள்புரம் முதலிய மகாராட்டிர துளஜாராஜாவினாலும் (1763—87) அவருக்குப்பின் சரபோஜிராஜா (1798 — 1832) முதலியவர்களாலும் விடப்பட்டதென்பர். கோயிலின் வரலாறு:— மகாராட்டிர அரசிற்கு அடிகோலிய வெங்காஜி (கி.பி. 1675-84) இராமேசுவரம் யாத்திரை செய்து திரும்புகாலில் திரிசிராப்பள்ளி சமயபுரத்து ஸ்ரீமாரியம்மன்கோயிலில் தங்கியபோது, அவன் கனவில்தோன்றி, தான் தஞ்சை மாரியம்மன் என்றும், அவன் அங்கு செல்வானாகில் அங்கு மகாராட்டிர அரசை தான் ஆரம்பிப்பாள் என்றும், அவனுக்கும் அவன் வழியினோருக்கும் தாம் உற்றதுணையாகயிருப்பாளென்றும் சொல்லி மறைந்ததாகவும் ஒரு கதை வழங்கிவருகிறது.



1. ஸ்ரீ கோதண்ட ராமர் 2. ஸ்ரீ மாரியம்மன் 3. ஸ்ரீ கைலாசநாதர் கோவில்களின் தூரத்தோற்றம்.
புன்னைநல்லூர்—மாரியம்மன் கோயில் தஞ்சை.

60-A

மற்றும், அவ்வரசு பரம்பரையில் எட்டாவதான துளஜாராஜா காலத்தில், இக்கோயில் சாதாரண கிராம எறும்புப்புற்றாக இருந்ததாகவும், அரசனுக்கு ஒருநாட் கனவில் தேவியானவள் பிராமணச் சிறுமியாக முன் தோன்றவும், யாரென்று வினவ, தான் புன்னைநல்லூர் மாரியம்மன் என்றும், அரசனுடைய மகள் கண்நோயால் வருந்துவதை நீக்குவதாகவும் சொல்லி மறைந்ததாகவும்; பின்பு, அரசனும் புதல்வியும் ஸ்ரீமாரியம்மனைத் தரிசித்து கற்பூரம் ஆரத்திகாணும் போது மகவின் கண்ணினின்று ஒரு சுடர் விழ கண்நோய் நீங்கியதாகவும்; பிறகு ஸ்ரீ அம்மனுக்குப் பல நிலதானங்களும் விடுத்து, கோயிலையும் இப்போதிருக்கும் நிலைமையில் கட்டியதாகவும்; இக்காலந் தொடங்கியே அம்மனுக்குப்பிராமணகுருக்களால் சைவஆகமவிதிப்படி பூசை நடந்துவருகின்றதென்றும்; துளஜா மன்னர் காலத்திலேயே சதாசிவ பிரம்மம் என்ற ஞானியாரால் ஸ்ரீ அம்மனைப் புதியதாக ஸ்ரீசக்கர யந்திரப் பிரதிஷ்டை செய்விக்கப் பெற்றதென்றும் தெரிகிறது. ஆண்டுவிழா ஆவணிமாதத்திலும்; அதன் கடைசி ஆதிவாரத்தில் திருத்தேர் விழாவும் சிறப்பாக நடைபெறுகிறது.

ஸ்ரீமாரியம்மன்கோயில் திருக்குளத்தின் தெற்கு, மேற்கு படித்துறைகளின்பகுதிகள் பல ஆண்டுகளுக்குமுன்னர் சிதைவுற்று விழுந்துவிட அதனைப்புதுப்பிக்கக்கருதி பக்தர்களின்பேருதவியால் திருப்பணி தொடங்கி கருங்கற்படிகளாக முற்றுப்பெற்றிருப்பதும் இவ்விடம் குறித்தற்பாலது. மற்றும், கோயிலில் போதிய விளக்கு வசதியில்லாததால் அக்குறையை அன்பர்கள் உதவியால் மின்சார ஒளி பரப்ப ஏற்பாடு செய்து, 1938-௵ செப்டம்பர்-மீ 9௳ தஞ்சைக் கலெக்டர் திவான்பகதூர் வி. என். விசுவநாதராவ் அவர்களால் ஒளி விளக்குகள் ஏற்றிவைக்கப்பெற்றன. இத்திருப்பணிகளுக்குப் பேருதவியாக நின்றவர்கள். தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்து பரம்பரை டிரஸ்டி, ராஜஸ்ரீ இராஜாராம் ராஜாசாகேப் அவர்களுடன், கரந்தை திருமதி. இராமதர்மஸம்வர்த்தனி அம்மாள், குடந்தை எலெக்டிரிக் இஞ்சினீர் திரு. கு. ஸ்ரீ. சேஷாத்திரி அய்யங்கார், தஞ்சை நெல்பேட்டை வர்த்தகர்கள், மதுரை தேவிபாலவிநோத சங்கீத சபையார், உடையார்பாளையம் ஸ்ரீமத் சமஸ்தானாதிபதியவர்கள், பூண்டி வாண்டையார் அவர்கள், உக்கடை தேவரவர்கள், திருவையாறு திருப்பணியாளர் திரு. மெய்யப்பசெட்டியாரவர்கள் முதலியவராவர்.

இக்கோயிலின் மோகினித்தொகை ரூ. 364-9-4 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 13242-9-9. சொத்துக்கள்: அருமொழிப்பேட்டை வே.36, 19, 21, 56; மாரியம்மன்புரம் வே 19, 13, 7, 41

ஸ்ரீ கோதண்டராமசுவாமி கோயில். இக்கிராமத்தின் மேற்குத் திசையிலுள்ள உன்னத தோற்றத்தினதாய் விளங்குவது ஸ்ரீ கோதண்டராமர் கோயில். இத்திருவிண்ணகரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோதண்டராமர், பழையபாளையம் அதாவது தீட்டாங்கலத்துக்கு அடுத்த பூவனூரிலிருந்து மகாராஷ்டிர மன்னர் காலத்தில் கொணர்ந்து கோயில் நிர்மாணித்துப் பிரதிஷ்டை செய்வித்ததெனத் தெரிகிறது. ஸ்ரீ கோதண்டராமப்பெருமாள், ஸ்ரீ சீதாபிராட்டி, ஸ்ரீ இலக்குமணர், அனுமான் நின்ற திருக்கோலங்கள், கிழக்குத் திருமுகமண்டலம். தனிச்சந்நிதிகள் ஆழ்வார்களுக்கும் ஹனுமாருக்கும் உள.

பிரம்மோத்ஸவம் ஸ்ரீ ராமநவமியில்— முன்னான திருத்தேர் இப்பொழுது பழுதாகி நின்றுவிட, தற்போது சட்டத்தேர் இழுத்துவருகின்றனர்.

இக்கோயிலுக்கு மின்சார ஒளி விளக்குகள் அன்பர்களின் உதவியால் ஸ்ரீ மாரியம்மன் கோயில் உள்பட 9—9—1938ல் ஏற்றி வைத்துள்ளது.

இக்கோயிலுக்கு வருமானம் மோஹினித்தொகை ரூ. 4725-1-9 உள்பட மொத்தம் சுமார் 9372—13—7.

சொத்துக்கள்-கொட்டையூர் வே. 4.5.8; ரிஷியூர் வே.5.4; ஒட்டக்குடி வே. 13.5.3.16; பவானியம்பாள்புரம் வே.5.14.81¾; பிராங்கைத்தோட்டம் வே. 5.11.92; அன்னப்பன்பேட்டை வே. 2.14.3; முதலியன.

ஸ்ரீ கைலாசநாதசுவாமி கோயில் ஸ்ரீ மாரியம்மன் திருக்குளத்திற்குத் தென்பாரிசத்திலுள்ளது. இக்கோயில் ஏற்கனவே சநேமேட்டிலிருந்தும், பிறகு வெண்ணாற்றங்கரை இராஜசத்திரத்துக்கு எதிரிலிருந்தும், அதன்பிறகு புன்னைநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில் திருக்குளத்திற்கு தென்புரத்தில் கட்டி ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விசேஷ விழா, கார்த்திகையில் திருக்கல்யாணம்.

இக்கோயிலுக்கு மோஹினித்தொகை ரூ.150-1-0 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 222-10-1. சொத்து- ஆத்தூர். ந. மா. 15.



இக்கிராமத்தாரின் நன்முயற்சியால் இக்கோயிலுக்கு மின்சார விளக்கும் 9-9-1938ல் மற்ற இருகோயில்களுடன் ஏற்பட்டுள்ளன.

ஸ்ரீ உக்கிரகாளியம்மன் கோயில். தஞ்சை கீழவாசலுக்குக் கீழ்புறம், கருவக்காடு என்னும் ஊர்த்தெருவில் அமைந்துள்ளது. தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. கோயிலுக்கு மோஹினி இல்லை. இதன் சொத்து, சன்னிதி தோட்டத்திலிருந்து வருமானம் சுமார் ரூ. 18—2—5

## தஞ்சைத் திருக்கோயில்கள்.

ஸ்ரீ பாலாம்பிகா ஸமேத வைத்தியநாதசுவாமி கோயில், தஞ்சைக் கீழவாசலில் பூமாலை ராவுத்தன் கோயில் அக்கிரகாரத்தில் அமைந்துள்ளது. முன்பு மாணிக்கவாசகசுவாமிகளுக்காக சிவபெருமான் பாண்டியனிடம் நரிகளைக் குதிரைகளாக்கித் தான் பூமாலை ராவுத்தன் என்று பெயர் பூண்டு (ராவுத்தன் — குதிரைச் சேவகன்) வேதமாகிய குதிரையின் மேலேறி மதுரைக்குப் புறப்பட்ட ஐதிகம் இக்கோயிலைப்பொறுத்தது என்பர். இத்தலத்திற்கு அடுத்தடுத்துவரும் இடங்களுக்கும் இத்திருவிளையாடலைப் பொறுத்த பெயர்களும் பொருந்தியிருத்தல் காணலாகும். நரிகளைப் பரியாக்கிக் கொணர்ந்து இன்னின்ன விதம் பாண்டியனிடம் கொடுத்துக் கொள்ளவேண்டுமென்று பெருந்திட்டமிட்டது கருந்திட்டைக்குடி. இவ்விடத்தில் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர் ஆலயம் இருத்தல் காணலாகும். குதிரைகளைத் திட்டமிட்டது (தென்குடித்திட்டை) என்றும் பொருந்தும். இராவுத்தர்களுக்கு (குதிரைச் சேவகர்களாகிய சிவகணங்களுக்கு) அன்னமிட்டது அன்னப்பன்பேட்டை. நரிகளைப் பரியாக்கியது (நரியனூர்) நரிகளைப் பரிகளாக்கியும், சிவகணங்களை இராவுத்தர்களாக்கியும் கூடாரமடித்துத் தங்கியிருந்த இடம் கூடலூர் எனவும் கூறுகின்றனர்.

வெகுகாலமாக உலர்ந்திருந்த இக்கோயிலைப் புதுப்பிக்க 1937௵ ஜூன்மீ பொது ஜனங்களாலும், சோதிடம் மணி அய்யர் என்று வழங்கும் திரு. டி. ஆர். சுப்பிரமணியய்யர், திரு. இராதாகிருஷ்ணய்யர் இவர்களின் பெருமுயற்சியாலும் திருப்பணி ஊக்கத்துடன் நடைபெற்றுவருகிறது. அரசாங்க மோஹினி இல்லை.

சொத்து:—ஆவு சாலைத் தோட்டத்தில் பு. மா. 8—57.

ஸ்ரீ வடபத்ரகாளி கோயில் தஞ்சைக் கீழவாசலில் பூமாலை ராவுத்தன் கோயில் என்கிற வைத்தியநாதசுவாமி கோயிலின் மேற்

இக்கோயிலின் மோஹினித்தொகை ரூ. 364-9-4 உள்படமொத்த வருமானம் சுமார் ரூ. 13242-9-9. சொத்துக்கள் : அருமொழிப் பேட்டை வே.36, 19, 21, 56; மாரியம்பாள்புரம் வே.19, 13, 7, 41

ஸ்ரீ கோதண்டராமசுவாமி கோயில். இக்கிராமத்தின் மேற்குத் திக்கிலுள்ள உன்னத தோற்றத்தினதாய் விளங்குவது ஸ்ரீகோதண்டராமர் கோயில். இத்திருவிண்ணகரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோதண்டராமர், யமுனாம்பாள்புரம் அதாவது சீடாமங்கலத்துக்கு அடுத்த பூவனூரிலிருந்து மகாராட்டிர மன்னர் காலத்தில் கொணர்ந்து கோயில் எடுப்பித்து பிரதிஷ்டை செய்வித்ததெனத் தெரிகிறது. ஸ்ரீ கோதண்டராமப்பெருமாள், ஸ்ரீசீதாபிராட்டி, ஸ்ரீ இலக்குமணர், ஹனுமான் நின்ற திருக்கோலங்கள், கிழக்குத் திருமுகமண்டலம். தனிச்சந்நிதிகள் ஆழ்வார்களுக்கும் ஹனுமாருக்கும் உள.

பிரம்மோத்ஸவம் ஸ்ரீ ராம நவமியில்— முன்னாள் திருத்தேர் இப்பொழுது பழுதாகி நின்றுவிட, தற்போது சட்டத்தேர் இழுத்துவருகின்றனர்.

இக்கோயிலுக்கு மின்சார ஒளி விளக்குகள் அன்பர்களின் உதவியால் ஸ்ரீமாரியம்மன்கோயில் உள்பட 9—9—1938ல் ஏற்றி வைத்துள்ளது.

இக்கோயிலுக்கு வருமானம் மோஹினித்தொகை ரூ. 4725-1-9 உள்பட மொத்தம் சுமார் 9372—13—7.

சொத்துக்கள்-கொட்டையூர் வே. 4.5.8; ரிஷியூர் வே.5.4; ஒட்டக்குடி வே. 13.5.3/16; பவானியம்பாள்புரம் வே.5.14.81½ ; பிராந்தைத் தோட்டம் வே. 5.11.92 ; அன்னப்பன்பேட்டை வே. 2.14.3; முதலியன.

ஸ்ரீகைலாசநாதசுவாமிகோயில் ஸ்ரீமாரியம்மன் திருக்குளத்திற்குத் தென்பாரிசத்திலுள்ளது. இக்கோயில் ஏற்கனவே சளுமோட்டிலிருந்தும், பிறகு விண்ணாற்றங்கரை இராஜாசத்திரத்துக்கு எதிரிலிருந்தும், அதன்பிறகு புன்னைநல்லூர் ஸ்ரீமாரியம்மன் கோயில் திருக்குளத்திற்கு தென்புரத்தில் கட்டி ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விசேஷ விழா, கார்த்திகையில் திருக்கல்யாணம்.

இக்கோயிலுக்கு மோஹினித்தொகை ரூ.150-1-0உள்படமொத்த வருமானம் சுமார் ரூ. 222-10-1. சொத்து- ஆத்தூர். ந. மா. 15.



இக்கிராமத்தாரின் நன்முயற்சியால் இக்கோயிலுக்கு மின்சார விளக்கும் 9-9-1938ல் மற்ற இருகோயில்களுடன் ஏற்பட்டுள்ளன.

ஸ்ரீ உக்கிரகாளியம்மன் கோயில். தஞ்சை கீழவாசலுக்குக் கீழ்புரம், கருவக்காடு என்னும் புதுத்தெருவில் அமைந்துள்ளது. தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. கோயிலுக்கு மோஹினி இல்லை. இனாம் சொத்து, சஞ்சீவி தோட்டத்திலிருந்து வருமானம் சுமார் ரூ. 18—2—5

## தஞ்சைத் திருக்கோயில்கள்.

ஸ்ரீ பாலாம்பிகா ஸமேத வைத்தியநாதசுவாமி கோயில், தஞ்சைக் கீழவாயில் பூமாலை ராவுத்தன் கோயில் அக்கிரகாரத்தில் அமைந்துள்ளது. முன்பு மாணிக்கவாசகசுவாமிகளுக்காக சிவபெருமான் பாண்டியனிடம் நரிகளைக் குதிரைகளாக்கித் தான் பூமாலை ராவுத்தன் என்று பெயர் பூண்டு (ராவுத்தன் — குதிரைச் சேவகன்) வேகமாகிய குதிரையின் மேலேறி மதுரைக்குப் புறப்பட்ட ஐதீகம் இக்கோயிலைப்பொறுத்தது என்பர். இத்தலத்திற்கு அடுத்தடுத்துவரும் இடங்களுக்கும் இத்திருவிளையாடலைப் பொறுத்த பெயர்களும் பொருந்தியிருத்தல் காணலாகும். நரியைப் பரியாக்கிக் கொணர்ந்து இன்னின்ன விதம் பாண்டியனிடம் நடந்து கொள்ளவேண்டுமென்று பெருந்திட்டமிட்டது கருந்திட்டைக்குடி. இவ்விடத்தில் ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரர் ஆலயம்இருத்தல் காணலாகும். குதிரைகளைத் திட்டமிட்டது (தென்குடித் திட்டை) என்றும் பொருந்தும். இராவுத்தர்களுக்கு (குதிரைச் சேவகர்களாகிய சிவகணங்களுக்கு) அன்னமிட்டது அன்னப்பன் பேட்டை. நரிகளைப் பரியாக்கியது (நரியனூர்) நரிகளைப் பரிகளாக்கியும், சிவகணங்களை இராவுத்தர்களாக்கியும் கூடாரமடித்துத் தங்கியிருந்த இடம் கூடலூர் எனவும் கூறுகின்றனர்.

வெகுகாலமாக உலைந்திருந்த இக்கோயிலைப் புதுப்பிக்க 1937ளூ ஜூன்மீ பொது ஜனங்களாலும், சோதிடம் மணி அய்யர் என்று வழங்கும் திரு. டி.ஆர். சுப்பிரமணியய்யர், திரு. இராதாகிருஷ்ணய்யர் இவர்களின் பெருமுயற்சியாலும் திருப்பணி ஊக்கத்துடன் நடைபெற்றுவருகிறது. அரசாங்க மோஹினி இல்லை.

சொத்து:—ஆவு சாகேப் தோட்டத்தில் பு. மா. 3—57.

ஸ்ரீவடபத்ரகாளிகோயில் தஞ்சைக் கீழவாயில் பூமாலை ராவுத்தன் கோயில் என்கிற வைத்தியநாதசுவாமி கோயிலின் மேற்

புறமுள்ளது. புராதனக்கோயிலென்னலாம். விசயாலயச் சோழன் தஞ்சையைக்கைப்பற்றி அங்கு கட்டியதாகச் சொல்லும் நிசும்ப சூதனி துர்க்கைக்கோயிலாகவுமிருக்கலாம். தேவியாரின் வடிவம் புராதனத் தோற்றமும், சிலர் உருவமாகவும் அமைந்திருத்தல் நோக்கற்பாலது.

ஸ்ரீநாகநாதசுவாமி கோயில், பூமாலைராவுத்தன் கோயிலாகிய ஸ்ரீவைத்தியநாதசுவாமி கோயிலுக்கு அணித்தாய் வடவாறென்னும் மணிமுக்தா நதியின் தென்கரையில் ஆதிசேடனென்னும் நாகத்தாற் பூசிக்கப்பெற்றதும், அனந்தன் பூசிக்கவந்தமையால் திருமாலும் அவண் வந்து ஸ்ரீரெங்கநாதராய் அமர்ந்திருப்பதும் இவர்களுடன் ஸ்ரீ திருநாகநாதசுவாமி ஸ்ரீ அகிலாண்டம்மையாருடன் எழுந்தருளியிருப்பதுமான கோயிலாகும். இக்கோயிலுக்கு எதிரில் சூரியபுஷ்கரணி என்கிற தீர்த்தமுள்ளது.

மாணிக்கவாசகப் பெருமானுக்காக நரியைப் பரியாக்கித் தான் பூமாலைராவுத்தன் எனப் பெயர் பூண்டு குதிரை மீதேறி பாண்டியநாட்டை நோக்கிப்புறப்பட்ட இடம் இக்கோயிலெனக் கூறுவர்.

இவ்வாலயமானது மிசப்பழுதுற்றமைகண்டு தஞ்சை திரு. கோ. துரைசாமி பிள்ளை முதலிய பக்தர்களின் பெருமுயற்சியால் புதுப்பித்து கட்டப்பெற்றுவருகிறது. அரசாங்க மோஹினி இல்லை.

சொத்து:— ஆவுசாரிகப் தோட்டத்தில் பு. 0—15—55. கோயில் வருமானம் சுமார் ரூ. 151—12—0

ஸ்ரீ வல்லபை வெள்ளைப்பிள்ளையார் கோயில், தஞ்சைப் பெரிய கோட்டை கீழவாயிலிலுள்ளது. கடைசி நாயக்கமன்னர் விஜயராகவநாயனய்யா இப்பெரிய கோட்டையைக் கட்டியபோது இவ்வாயில்காப்புத் தெய்வமாக இவ்விநாயகர் சந்நிதியை அமைத்தனர்போலும். வல்லபை மூலத்தானத்துப் பிள்ளையார் நாளடைவில் வெள்ளைப்பிள்ளையாரென அழைக்கலாயிற்று. சிறிதாகவிருந்த இக்கோயிலை, சமீபகாலத்தில் அன்பர்கள் புதுப்பித்தும், ஜவுளி வர்த்தகம் திரு. கண்ணுசாமி செட்டியார் முன்மண்டபத்தையும், நெல் தரகு. திரு. கிருஷ்ணமூப்பனார், ஜவுளி திரு. கோவிந்த பிள்ளை இவர்களால் கோயில் மகாமண்டபமும், மேளம் ஜகந்நாத ரெட்டியால் மடப்பள்ளியும் கட்டப்பட்டுள்ளது. தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தாரின் பாதுகாப்பில் பஞ்சாயத்தார்கள் இக்கோயிற் சிறப்புக்களைக் கவனித்துவருகின்றனர்.

இக்கோயிலுக்கு மோஹினி இல்லை.



கீழசிங்கப்பெருமாள் கோயில் என்ற ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மப்பெருமாள் கோயிலும், அதற்கு எதிர்சரகில் கீழ கோதண்டராமர் கோயில் எனவும் இரு சந்நிதிகள் தஞ்சைக்கீழவாயிலில் உள்ளன. முன்னதான கோயிலிலுள்ள இரு சாசனங்களால், பழுதாயிருந்த தாயார் சந்நிதி சரபோஜி மன்னரால் புதிதாகக் கட்டி, சாலிவாகன 1742 விக்கிரம தை 27உ புதவாரம் பிரதிஷ்டைநடந்ததென்றும்; மற்றொன்றால், பிங்கள கார்த்திகை 16—11—1917-ல் குருவப்ப நாயுடு என்பவரால் பழுதுபார்க்கப்பெற்றதென்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஸ்ரீ கீழசிங்கப்பெருமாள் சந்நிதி புராதனத்தலமாகயிருந்து, நாயக்கர் காலத்தில் பெத்ததாசரி என்ற பெரியாரால் பூசிக்கப்பெற்று விளங்கியதாகும்.

முன்னதின் மோஹினி வருமானம் ரூ. 175 உள்பட மொத்தம் சுமார் ரூ. 190—6—0; பின்னதின் மோஹினி வருமானங்கள் சுமார் ரூ. 128—5—6

கீழஇராஜவீதியில் அரண்மனை வாயிலுக்கு எதிரேயுள்ள பஜனைசாலை விட்டோபா கோயில் உளது. விட்டோபா திருவுருவம் பண்டரிபுரத்திலிருந்து கொணர்ந்தது சரபோஜிமகாராஜா அவர்களால் என்பது கோயில் வாசற்படியிலுள்ள "ஸ்ரீமங்கள மூர்த்திர்ஜெயதி ஸ்ரீமத்போசலகுலமணி சரபேந்திர மகாராஜா சாயேப் அவர்கள், ஸ்ரீபாண்டுரங்காலைய பசனசாலா தர்மம் சொஸ்திஸ்ரீ சாலிவாகனசகாப்தம் 1740 கலியுகசகாப்தம் 4919-ன் செல்லாநின்ற வெகுதானிய-ஞு மாசி-மீ அமரபக்ஷம் சதுர்தசி சோமவாரம் மகாசிவராத்ரி சுபதினத்தில் இந்த தர்மம்" என்று கல்லில் பொறித்துள்ளது.

அரசாங்க மோஹினி இல்லை. தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்தார் திட்டம் ரூ. 48-உடன், அவர்களதுபார்வையிலுள்ளது.

தஞ்சைக் கீழஇராஜவீதி புதுக்கோயில் என்னும் ஸ்ரீமணிகர்ணிகேசுவரர் கோயில், மகாராட்டிரவம்சத்து இரண்டாம் சரபோஜிமன்னர் காசியாத்திரை சென்று திரும்பியபின், அவ்விடம் கங்கைக்கரையில் அவர் கட்டிய மணிகர்ணிகா படித்துறையின் ஞாபகார்த்தமாயும், நருமதைத்தீரத்திலிருந்து கொணர்ந்த சிவலிங்கத்தை இச்சந்நிதியாக பிரதிஷ்டை செய்தும் கோயில் நிருமாணம் செய்யப்பெற்றது. அரசாங்க மோஹினி இல்லை.

இக்கோயில் இதர வருமானம் சுமார் ரூ. 32-10-0

ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில், தஞ்சைக் கீழஇராஜவீதி தெற்குக்கோடியில் அமைந்துள்ளது. பெருமாள் நாச்சியார் கிழக்கே திருமுகமண்டலம். தாயார் வீற்றிருந்த திருக்கோலம். இரு சந்நிதிகளும் தனித்தனியாக ஓரே பிராகாரத்தில் உள்ளது. தற்காலம் பிரம்மோத்ஸவம் நின்றிருப்பது. திருத்தேர் பழுதாகி கோயிலின்முன் நிற்கிறது. 1938ல் ஸ்ரீபெருமாள் கோயில் வெளிக் கதவுகளைப் புதுப்பித்தும், திருமதில்கள் முதலானவை பழுது பார்க்கப்பெற்றதுமாகும்.

இக்கோயிலில் தாயார் சந்நிதி வெளிநிலைச் சுவர்மேல் பதிப்பித்துள்ள கல்வெட்டால் 1890-ஆம் டிசம்பர் 7-ம் தேதியில் ஷை சந்நிதியின் நூதன கோபுரம், கூட்டுமண்டபம் ஜீரணமடைந்திருந்த பெருமாள்தாயார் விமானம் தளவரிசைமுதலியன ஜீரணோத்தாரணம் செய்து மாதுஸ்ரீ காமாட்சியம்பா பாய் சாகேப் அவர்களால் சம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டதென்றும் தெரிகிறது.

இக்கோயில் மோஹினி ரூ. 262—8—0 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 373.

தஞ்சைக்கோட்டை தாஸ்தார் மஹால் சந்தில் அமைந்திருந்த ஸ்ரீ சதுர்புஜ வரதராஜப்பெருமாள் கோயில் உலைந்துபோகவே இச் சந்நிதியிலிருந்த பெருமாளை மேற்கண்ட ஸ்ரீவரதராஜப்பெருமாள் கோயில் மண்டபத்தில் நூதனப்பிரதிட்டை செய்வித்தாரெனவும் தெரிகிறது. இக்கோயில் மோகினி வருமானம் ரூ. 5—7—6

சுல்தான்ஜியப்பா கோயில் எனப் பெயர் பெற்ற ஸ்ரீகலியுக வெங்கடேசர் கோயில், தஞ்சைத் தெற்கு இராஜவீதியின் நடுவிலுள்ளது. சுல்தான்ஜி அப்பா என்பவரால் கட்டி பிரதிஷ்டை செய்த கோயில் என்பர். கோயில் வருமானம் சுமார் ரூ. 131-4-0

இக்கோயிலில் ஸ்ரீ அமிர்த வெங்கடேசர், ஸ்ரீ பூர்வசஞ்சீவி ஹநுமார்சந்நிதிகளும், பிற்காலத்து அவர்களின் புராதனக்கோயில்களிலிருந்து கொணர்ந்து இங்கு நூதனமாக பிரதிஷ்டை செய்விக்கப்பட்டிருக்கிறது. இக்கோயில்களுக்கு தனித்தனியே மோகினி வருமானம் ரூ. 5—7—6

தஞ்சைத் தெற்கு இராஜவீதியின்மத்தியில் மேடையின்மீது உயர்ந்த தக்ஷிண காசி ஸ்ரீ விசுவநாதசுவாமி கோயில் அழகுற அமைந்துள்ளது. கோயிலுக்கு அடுத்துள்ள வர்த்தக அன்பர்களால் மின்சார ஒளி விளக்குகள் ஏற்றப்பெற்றுள்ளது.

இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினி ரூ. 5—7—6 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 230—15—6



தஞ்சை எல்லையம்மன் கோயில் வீதியில் அமைந்திருந்த வீரபத்திர சுவாமி கோயில் உலைந்துபோகவே, இப்போது மேற்கண்ட கோயில் தென் சரகில் பிரதிட்டை செய்து வைக்கப்பெற்றுள்ளது. இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினி ரூ. 13—12—0 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 49—2—0

அளகேசுவர பிள்ளையார் என்கிற தோப்பாரங்கேட்ட பிள்ளையார் சந்நிதி புராதன கோயிலாக அமையும். இவ்விநாயகர்கோயில், முன்பு தெற்கு நோக்கிய சந்நிதியாக இருந்து, 1904-ல் இராணி மாதுஸ்ரீ ஜிஜாம்பா பாய் சாகேபா அவர்கள் காலத்தில் மேடையாகக்கட்டி. இப்போது அமைந்துள்ளபடி மேற்கு நோக்கிய சந்நிதியாகியுள்ளது. இக்கோயில் திருப்பணிக்காக நாயக்கமன்னர் காலத்து கி. பி. 1532-ல், தர்மசாசனபட்டயம் ஒன்று இக்கோயில் சுற்று மதிலில் பொறிக்கப் பெற்றுள்ளது. அது கீழ்குறிப்பிட்டிருப்பது காண்க.

இதன் வருஷ மோஹினித்தொகை ரூ. 10—8—10 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 98—9—0

ஸ்ரீ காளியம்மன் கோயில் தெற்கு இராஜவீதியில் அமைந்துள்ளது. சோழவம்சத்தரசர், தஞ்சைப் பெரிய கோயிலை நிர்மாணஞ்செய்த சிற்பிகளுக்கு தமது கையுறையாக எடுப்பித்துக் கொடுத்ததென்பர். இன்றும் தஞ்சை விஸ்வகர்ம குடும்பத்தினரின் வழிபடு தெய்வமாக அவர்களின் பராமரிப்பிலுள்ளது. இக் கோயிலுக்கு அணித்தாக இருக்கும் அர்க்கசாலைப் பிள்ளையார் கோயில் அன்னவர்களின் பூஜைக்காக கட்டிக் கொடுக்கப்பெற்றதென்பர். இதற்குக் கீழ்புரம் விஸ்வகர்மசபையாரின் பராமரிப்புக்குட்பட்ட விசுவநாதசுவாமி கோயில் ஒன்றுள்ளது.

---

(A. R. No. 39 of 1897) of Vijayanagar King Achyutadeva Maharaya times of about A.D. 1539.

Gopura in front of the Toppul - Pillayar Temple at Tanjore, Records gift of land by Tattappa Nayaka, Son of Kondappa Nayaka

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வர ராஜாதி ராஜராஜ பரமேஸ்வர ஸ்ரீவீரப்பிரதாப, ஸ்ரீவீரஅச்சுததேவராய மஹாராயர் பிருதிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற ஸகாப்தம் 1454 இதன் மேல் செல்லாநின்ற நந்தனஸம்வத்ஸரத்து கற்கடநாயத்து பூர்வ பக்ஷத்து சப்தமியும் சேர்மவாரமும் பெற்ற அஸ்தநட்சத்திரத்து நாள் வாசல் மல்லப்பநாயகர் அய்யன் புத்திரன் சின்னப்பநாயகர் அய்யன் அவர்களுக்கு தர்மமாகவேணும் என்று கொனப்பநாயகர் புத்திரன் தாத்தப்பநாயக்கர் தஞ்சாவூர் பிள்ளையார் அளகேஸ்வர

ஸ்ரீகாளியப்பன் கோயில் திருவாயில் நிலைத்தூண் ஒன்றில்
பொறித்துள்ள கல்வெட்டால் * சாலிவாகன 1681 பிரதாபசிம்ஹ
ராஜா காலத்தில் பாஞ்சாலத்தார் என்ற ஒரு சமூகத்தின் வள்ள
லான வலாசி (பாலாஜி) என்பவரால் ஸ்ரீகாமாட்சிதேவியம்மன்
கோயில் உட்புறச் சந்நிதியும், புறமும் கல்லாற் கட்டப்பெற்ற
தென்று தெரிகிறது. மற்றும் கோயிற் சுவரில் பதிப்பித்துள்ள
இன்னொரு கல்வெட்டால் ஷை கோயில் முன் கோபுரத்தில் யாக
வரிமுதல் யாளவரி கொடுங்கை, மடப்பள்ளி உள்பட திருப்பணி
யும், ரிஷபம், குதிரை, மயில், பெருச்சாளி வாகனங்கள் சுப்பிர
மணிய ஆசாரி குமாரன் வயித்துமுத்தியன் ஆசாரி உபயம் என்று
குறித்துள்ளது.

---

பிள்ளையாரான தோப்பாரங்கட்டிப் பிள்ளையார்க்கும், திருப்பணி
பெருமாள் நயினார்க்கும் திருப்பணிக்கு குடுத்த தர்மசாச
னப்பட்டயம் குடுத்தபடி இன்னையனாற்கு திருப்பணியாரபுறம்
தேவதானமாக செய்து சொந்த சோழமண்டலம் திருச்சிலா
பள்ளி உசாவடி தஞ்சாவூர் சீர்மை காவேரி ஆற்றுக்கு தென்
கரை நித்தியவிநோதவளநாட்டு மிலட்டூர் பற்று சங்கமராயன்
பேட்டை கிராமம் தீர்த்தப்பநாயகர் சின்னப்ப நாயகர் அய்யன்
அவர்களுக்கு புண்ணியமாக வேணுமென்று சேத்து குடுத்த
நஞ்சை புஞ்சை நத்தம் செய்தலை திடர் நாற்பாங்கெல்லையும்
உட்பட்ட நெ-ம் 6-லிம் நத்த நிலம் வேலி ஆக நெ. 7 லிக்கு
நாளதுவரையும் பகுந்த தேவமான்யம் சர்வமான்யம் பட்டவிர்த்தி
நீங்கலாக நிலத்தில் வான்பயிர் உட்பட ... .. ன்று முதல் நெல்லு
முதலுக்கு கூட்டும் வற்கம் செதகொட்டு குடுத்திட்ட சாரன —
தளவா ஒழுக்குருமுட்டம் காவேரி கல்லணை காடுவெட்டு நல்லெருது
நற்பசு எப்பேற்பட்ட சகலாதாயமும் உட்பட கற்கடகநாயற்று
பூர்வபக்ஷத்து ஸப்தமியும் சோமவாரமும் பெற்ற நாள் வாசல் மல்
லப்பநாயகர் அய்யன் புத்திரன் சின்னப்பநாயகர் அவர்களும் தன்
மம் ஆகவேணும் என்று கோனப்பநாயகர் புத்திரன் தாத்தப்ப
நாயகர் ரெவ்வி தொப்பாரங்கட்டிய பிள்ளையார்க்கு தர்மமாக திருப்
பணிக்கு சேத்துக் குடுத்தபடியாலே இந்த தர்மத்துக்கு யியாதா
மொருத்தர் அருதம் பண்ணினவர்கள் கெங்கைக்கரையில் கராம்
பசு கொன்ற பாவத்திலேயும் தன் மாதா பிதாவையும் தன்கையா
லே கொன்ற பாவத்திலே போகக் கடவாராகவும்'' S I.I. Vol. V.
Texts p. 503

* Ins. 202 of 1933.



## முதலாம் இராசராசன் அமைத்த இராஜராஜேசுவரம்.

சோழவேந்தர்கள் தமிழ்நாட்டில் எடுப்பித்த கோயில்களுள்
தலைசிறந்து விளங்குவது முதலாம் இராசராசசோழன் தஞ்சை
யிலே அமைத்த 'பெரியகோயில்' ஆகும். இராசராசன் கி. பி.
985-முதல் 1014-வரை இருபத்தொன்பது ஆண்டு வெகு கீர்த்தி
யுடன் சோழர் பேரரசைத் தாங்கினான்.

தஞ்சை 'இராசராசேச்சரம்' இப்போது சிவகங்கை சிறு
கோட்டையின் தென்பாதியிலிருப்பதைக் காணலாகும். அதனை
அணுக, அக்கோட்டையின் அகழைக் கடந்து, கோட்டைச் சுவரி
லாக்கிய வளைவுக்குள் நுழைந்தும், சிறிது தூரத்தில் எதிர்ப்படும்
அழகிய கோபுரத்தைக் கடந்தும், மற்றும் சிறு தூரத்திலுள்ள
இராசராசன் கட்டிய மற்றொரு அகன்ற கோபுரத்தைக் கடந்
தும் அடையலாம். உள்நுழைந்ததும், கருங்கல், செங்கல்லாலும்
பரப்பப்பெற்ற சுமார் 500-அடி நீளமும் 250-அடி அகலமுமுள்ள
ஒரு பரந்த பேரவைபோன்ற வெளிமுன் அமைந்த மேடையில்
நந்திப்பெருமானின் பெருந்தோற்றமும், அதனைப் பாதுகாக்கக்
கட்டிய நாயக்கர் மண்டபமுமுள்ளது. எதிரில் இறைவன் கோயில்
விமானமும், அடுத்து அம்மையாரின் திருக்கோயிலும் காணலாகும்.
இக்கோயில் திருவாயில் இருபுறமுமமைந்த படிகளால் (trans-
verse steps)முன்னாளில் எய்துவதாகும். இப் படிகளே கோயில்
எடுப்பித்தபோது உடன் உண்டானவை. இக் காரணம் கொண்
டும் நிலப்பறப்புக்குமேல் உயர்ந்த மேடையில் நிறுவப்பெற்ற தன்
மையினாலும் இக்கோயில் மாடக்கோயில் என்பதற்கேற்ற இலக்
கணம் பெற்றதென்பர். திருஅணுக்கன் திருவாயிலுக்கு எதிரே
இப்போது அமைத்துள்ள நேரானபடிகள் பிற்காலத்தில் சரபோஜி
மன்னன் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். கோயிலின் நீட்டளவு
793-அடி. குறுக்களவு 397-அடி. இக்கோயில் முழுதும் இராச
ராசன் காலத்தேதான் ஏழு ஆண்டிற்குள் கட்டி முடிவுற்றதென
கல்வெட்டுகளால் தெரிகிறது.

கோயிலின் கர்ப்பகிருகத்திற்கு மேலேயுள்ள அழகிய விமா
னம் சதுர வடிவமானதும், பதின்மூன்று கோபுரமாடிகள் கொண்
டது. உச்சியில் சதுரவடிவமுள்ள பிரமரந்திரத் தளக்கல்லின்

மேல் கலசமும், அதன்மேல் அழகிய ஸ்தூபி ஒன்றும் அமைக்கப் பெற்றுள்ளன. இச்சிறந்த விமானம் "தக்ஷிணமேரு" என்றும் உத்தமவிமானமென்றும் அழைக்கப்படுகிறது. இது 216-அடி உயரமுடையது. விமான உச்சியில் போடப்பட்ட பிரமரந்திரத் தளம் ஒரே கருங்கல். அது 25½-அடி சதுரம். நிறை 80-டன் என்பர். இதனைத் தஞ்சைக்கு நான்கு மைலுக்கப்பாலுள்ள சாரப் பள்ளம் என்ற கிராமத்திலிருந்து சாரம் போட்டு இச்சிகரத்தில் ஏற்றினார்களென்பது கிராமத்துப் பெயரால் ஊகிக்கப்படுகிறது. சதுரக்கல்லின் நான்கு மூலைகளிலும் முறையே இரண்டு நந்திகள் உள்ளன. அவை தனித்தனி 6½-அடி நீளமும் 5½-அடி அகலமும் உள்ளன. அவற்றையொத்த நந்தியொன்று உமாபரமேச்வரியின் (அம்பிகை) சந்நிதிக்கு எதிரே திருச்சுற்றுமாளிகையில் இருப்பதைக் காணலாம். இக்கோயில் நந்தி ஒரே கல்லால் அமைத்தும் மிக உன்னத தோற்றத்தையுடையது.

தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளிய சுவாமியின்பெயர் 'இராஜராஜேசுவரமுடையார்' என இராசராசனால் வழங்கப்படும். சிவமுகூர்த்தங்கள் பல காணப்படினும் அம்மையின் பெயரெல்லாம் வெவ்வேறாக இல்லாமல் உமாபரமேச்வரி என ஒன்றாகவே இருக்கின்றது. பிற்காலத்தில் இக்கோயில்கொண்ட இறைவனுக்குத் திருநாமம் பெருவுடையார் எனவும், இறைவிக்குப் பெரியநாயகி எனவும், அவை வடமொழியில் பிரகதீசுவரர், பிருகந்நாயகி எனவும் வழங்கிவருகின்றன.* ஸ்ரீபெருவுடையார் அருள்திருமேனி இலிங்கசொரூபமானது நருமதைநதிதீரத்திலிருந்து இங்கு இராச ராசனால் கொணரப்பட்டதென்பர். அதற்கு அமைந்த மகாத்மிய ஆதாரமும், சைத்ரவிழா அஷ்டகொடியன்று இராச ராசன் தஞ்சை அறுபத்துநான்கு மனை வேளாஞ்செட்டிமார்களை அழைப்பித்துச்சிறப்பிக்கும் சம்பிரதாயமும் குறிப்பிடற்பாலன.

* சிற்றம்பலத்திற்கு சிதம்பரம் என்றும், குடமிநாதருக்கு சிகாநாதர் என்றும், பெத்தாரண்ணன் என்னும் தெய்வப்பெயரை ஆபத் உத்தாரணன் என்றும், திருமறைக்காட்டை வேதாரண்ணியம் என்றும், மயிலாடுதுறையை மயூரமென்றும், குரங்காடுதுறையை கபிஸ்தலம் என்றும், தூய தென்மொழிப் பெயர்களையெல்லாம் வடமொழிப் பெயராக மொழி பெயர்க்கப்பட்ட வழக்கு அறியற்பாலது.



இராசராசன் இப் பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள் மிகப்பலவாம். கோயிலுக்கு வேண்டிய அமைப்புக்களில் ஒன்றனையும் குறைவுபடாதுசெய்வதையே அப்பெருமான் தனது வாழ்வின் பயனாகக் கொண்டான். தான் புரிந்த போர்களில் வென்று கொணர்ந்த சொத்துக்கள் யாவற்றையும் அக்கோயிலுக்கே அளித்தனன். நானாவித ஆபரணங்களும், பாத்திரங்களும், நெல் விளையும் கிராமங்கள் பலவும், தினவிதிகளுக்கும், விழாக்களுக்கும் வேண்டிய அளவு பொன்னும், பொருளும், கடவுட்குச்சூட்ட நறுமலரும், நாடோறும்பெறத் தந்து வந்ததோடு தீபங்களுக்கு நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு, நெய் அளப்பதற்கு ஆடு, பசு, எருமை என்ற மூவினமும் இடையர்கள் பெறத்தந்து என்றைக்கும், யாவும், மிகவும் தாராளமாகத் தருமாறு வரும்படியமைத்துத் திருப்பணியை நிலைபெறச் செய்தான். இவை யாவும் இக்கோயிலின் பல பாகத்தும் பொறித்துள்ள கல்வெட்டுகளால் தெரியவருகிறது.

கோயில் எம்பெருமான் சந்நிதியின் உள்சுற்றுப்பிராகாரத்தில் மிகவும் அழகிய இரு ஓவியங்கள் ஒன்றின்மேலொன்றாய் தீட்டப்பட்டுள்ளன. மேலே இருப்பது நாயக்கர் காலத்ததும், உள்ளிருப்பது சோழர்காலத்ததுமாகும். சோழர்காலத்தவை 11-ம் நூற்றாண்டின் சைவசமயப்பற்றை விளக்குவதாக சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரம், திரிபுரசம்ஹாரம், அக்காலமக்கள் வாழ்க்கை முதலியவைகளைக் குறிப்பிடுவனவாகும்.

இக்கோயிலிலுள்ள ஆறுமுகப்பெருமானின் கோயில் மிக்க சிற்பநுட்பங்கள் அமைந்த அருமையான கோயில். அதன் முன்பு சேர்க்கப்பட்ட இராஜாமண்டபத்தில், 1935-ஆண்டு நவம்பர் 6-ல் நிறுவிய இராஜராஜசோழன்பொருட்காட்சிநிலையம் காணத்தக்கது.

இக்கோயில் மேலைப்பிராகாரத்துள்ள கருவூரார் கோயிலும் போற்றுதற்குரியது. கருவூரார் சித்தர்பெருமானின் உருவச்சிலையும், இப்போதுள்ள கோயிலும் சுமார் 35-ஆண்டுகட்குமுன்னர் அமைந்ததாகும். வியாழன்தோறும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் இவரை வணங்கி இவர் அருட்பிரசாதம் பெற்றுவருவது யாவரும் தெரிந்ததொன்றாம். இவரைப் பொற்கொல்லர் மரபினர் என்றும், பதினெண்சித்தர்களில் ஒருவரென்றும், போகருக்கு சிஷ்யரென்றும், சித்தர்நூல்களில் இவர் பெருமையைப் பலவாகக்

கூறுவதிலிருந்து அக்கால அரசர்களால் போற்றப்பெற்றவரென்றும் தெரிகிறது. அதற்கு முன்பு வெகுகாலமாக **கருவூரார்** மேடை ஒன்றே இருந்துவந்தது.

இப்பெரியகோயில் ஆண்டுவிழா, சித்திரையில் 18-நாள் நடைபெறுவது. 9-வது தினம் அஷ்டகொடியன்று **சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்*** குறவஞ்சி மேடையில் அழகுற நடைபெறும். இதற்கு முன்பாக இராஜராஜசோழன் காலமுதலாக அவன்மீது இயற்றப்பெற்ற **'இராஜராஜேசுவர நாடகம்'** கோயிலில் விழாக்கள் தோறும் நடைபெற்றுவந்தது. பல நூற்றாண்டுகளுக்கிடையே அது நழுவப்பெற்று, மகாராட்டிர சரபோஜி மன்னர் காலத்தில், அவர் சபைப்புலவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் சரபோஜிமன்னர்மீது இயற்றியது இந்நாடகம். இது அவர் கால முதல் அஷ்டகொடியன்று கோயிலில் அதற்கென கட்டப்பட்டுள்ள மேடையின்மீது நடிக்கப்பெறுகின்றது. கதைச் சுருக்கம்— சரபோஜிமன்னர்மீது மையலுற்ற மோஹினி என்ற மங்கையின் காதல் நிகழ்ச்சிகளைக் கூறுவது. ஆண்டுவிழாவின் 13-ம் நாள் சதுர்முகசப்பரத்தில் ரிஷபவாகனக்காக்ஷியும், 15-ம் நாள் திருத்தேர் உலாவும் சிறப்புடன் நடைபெறுவது.

மற்றும் 1914 நவம்பர் 15-ல், முதல் விழாவாகக்கொண்டு, ஆண்டுதோறும் ஐப்பசிச் சதயத்தில் இராஜராஜன் விழாவும் 'Rajaraja's Day' சிறப்புடன் கொண்டாடப்பெற்றுவருகிறது.

இப்பெரிய கோயிலுக்குத் தகுந்த விளக்கு வசதிகளில்லாமையால் அன்பர்களின் பேருதவியால் மின்சாரஒளி விளக்குகளுக்காக ஏற்பாடு செய்து சுமார் ரூ. 3868-3-6 செலவிட்டு விளக்குகளை 1935 ஜூலை 12-ல் உயர்திரு. சர். பி.டி. இராஜன் அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்கு அரசாங்கமோஹினி ரூ. 8093-12-0 உடன் மொத்த வருமானம் சுமார் ரூ. 10722—10—0. சொத்துக்கள் சூரக்கோட்டை வே. 20-6-10; கீழவன்னிப்பட்டு வே. 7-1-2

* சாசுவதி மஹால் புத்தகாலயம் ஏட்டுப்பிரதி நம்பர் 599. திருப்பனந்தாள் காசிமடம் ஆதீனத்தார்களால், இதனை மஹாமஹோபாத்யாய ஸ்ரீ-உ-வே சாமிநாதய்யர்அவர்கள் குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளது. முழு விபரம் எனது 'இராஜராஜேசுவரமும் பிற சோழர் கோயில்களும்' என்ற நூலில் கண்டுகொள்க.



கண்டியூர் செ. 10; நாகத்தி வே. 3-0-8-30; வில்லியநல்லூர் ந. வே. 4 ; ஆலங்குடி ந. வே. 1-18-7-35 ; மற்றும் தஞ்சையில் கடைகள் முதலியன.

**ஸ்ரீ லோகநாத ஈஸ்வரர்** என்கிற **சிவலிங்கசுவாமி,** சிவகங்கைக் கோட்டை, சிவகங்கைத் திருக்குளத்துக்குள் தென்புறத்துள்ள ஒரு மேடைமீதுள்ள சிவலிங்கசொரூபமாக அமைந்துள்ளது. இதுவே சமயாச்சாரியர் அப்பர் சுவாமிகள் * **தஞ்சைத் தளிக்குளத்தார்** என்று அழைத்த சிவபெருமானாக இருக்கலாம். அல்லது, அம்முற்காலத்திலிருந்தே இத்தலத்தில் ஒரு கற்கோயில் இருந்து, பின்பு அதனை இராசராசன் தன் பரந்த சைவப்பற்றிற்கு இலக்காக இப்போதிருக்கும் நிலையில் கட்டியிருக்கலாம். இன்னொரு விபரம். **விஸ்வகர்மபக்தோபாக்கியானத்தில்** பொன்மணிபக்தர் சரித்திரத்தில் கூறியிருப்பது. தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்த இராஜராஜச்சோழனது கனவில் பெருவுடையார் "யாம் நீர் கட்டிய மறைவிலும், இடைச்சி நிழலிலும், பொன்மணித்தட்டார் இருதயத்திலும் வசித்துவருகிறோம்" என்று சொல்லியருள; அரசன் அதன் பொருளையறியாது தயங்கி, தஞ்சையில் வசித்த பொன்மணித்தட்டாரைக் கண்டு வினவ, அவர் அரசனை 'கோயிலின் வடபாரிசத்தில் ஸ்தாபிக்கு நேரே ஒரு குளம் வெட்டுவித்து அதற்கு மத்தியில் ஒரு சமாதி ஒன்றை நிருமிக்கச் செய்யவும், அதற்குள் அவர் அணுகி, தன் இருதய கமலத்தினின்று எழுந்த ஜோதியின்மூலம் இறைவனைக் காட்டி, அதனுள் கலந்து மறைந்தார் என்றும், பின்பு இராஜராஜன் இச் சமாதிக்கு பூஜை, நைவேத்தியம் அதுமுதல் நடத்த ஏற்பாடு செய்தனனென்றும் கூறுகிறது.

**ஸ்ரீசங்கரநாராயண சுவாமி கோயில்** சிவகங்கைக் கோட்டை வடக்கு வாயிலுக்கு அணித்தாயுள்ளது. மிகப் புராதன கோயிலாக அமையும். 'சங்கரநாராயண மாகாத்மியம்' என்ற புராணவரலாறுடையதென்பர். இக்கோயில் விமானத்தின் வடபுறத்தில் கோடியம்மன் உற்சவ முகூர்த்தமாகிய பச்சைக்காளி உருவத்தை சார்ந்தா

* "அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற்றுள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார்"
— திருத்தாண்டகம், அப்பர்.
"குளமூன்றும். களமைந்தும். பாடி நான்கும்"—சம்பந்தர்.

காரமாகக்காட்டியிருப்பது இதன் பழைமையை ஒருவாறு உணர்த்தும். ஆண்டுதோறும், இக்கோயில் விழாவில், இராசராசச்சோழன் இக்கோயில் வந்து சிறப்புறுவது உண்டென்றும், இப்போது அவ்வாண்டுவிழா 1929 முதல் நின்றிருப்பதும் அறியலாகும். இக்கோயிலுக்கு மோஹினி வருமானம் ரூ. 469—9—4 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 745—5—4

புலவர்புராணம் ஆசிரியர் முருகதாசர்,இக்கோயில் இறைவன் மீது 'சங்கரநாராயணபதிகம்' பாடியுள்ளார் என்று தெரிகிறது.

இக்கோயிலின்கண் சிவகங்கைப் பிள்ளையார் சந்நிதியொன்று நூதனப் பிரதிட்டையாகியுள்ளது. இக்கோயிலுக்கு வருட மோஹினி ரூ. 5–7–6

ஸ்ரீபாலகணபதி கோயில், தஞ்சை சிவகங்கைக் கோட்டைவாயிலுக்கு அணித்தாய் பெரிய அரசமரங்களின் மேடைக்கு எதிர் மேலசரகிலுள்ள ஒரு சிறு விநாயகர் கோயிலாகும்.இதற்கு ஸ்ரீமத் பிரதாபசிம்ஹராஜா சாகேப் அவர்களுடைய முகாசா மூலதிரவியத்திலிருந்து வருஷமோஹினி ரூ. 26–2–0 கொடுத்துவருகிறார்கள்.

தஞ்சை செட்டித்தெரு ஹனுமார் கோயில். தேவஸ்தானத்தார் பார்வையிலுள்ளது மோஹினி இல்லை. மற்ற வருமானம் ரூ. 4—8—0

மேலவாசல் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், மேற்கு அலங்கத்தில் கோட்டைத் தெய்வமாக உயர்ந்த மேடையின்மேல் அமைந்ததாகும். கோயில் மிக்க பழுதுற்றது கண்டு,அதனைப்புதுப்பிக்க, 1937-ல் ஒரு கமிட்டியார் ஏற்பட்டு இதுவரை கோபுரமும் கோயில் உட்புறமும் புதுப்பித்துள்ளார். மற்றும் பூர்த்தியாக வேண்டியிருக்கிறது. இக்கோயில் மோஹினி ரூ. 52—8—0 உள்பட மொத்த வருமானம் ரூ. 145-15-4. இக்கோயிலுக்கு தென்புறத்தில் கோட்டை எல்லைத் தெய்வமாக ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலும், வடபுறத்தில் ஸ்ரீ அரங்கநாதப்பெருமாள் கோயிலும் தனித்தனியாக அமைந்துள்ளன. பின்னதை சமீபத்தில் கண்டிராக்டர் திரு.வீராசாமிநாயுடு உபயமாகப்புதுப்பித்துள்ளார். முன்னதுக்கு மோஹினி ரூ. 5-7-6, பின்னதுக்கு ரூ. 25-8-2 ஆகும்.

ஸ்ரீ கோங்கணேசுவரர் கோயில் தஞ்சை மேலஇராஜவீதியின் மத்தியிலுள்ள புராதனக்கோயிலாகும். இதன் வரலாறு பவிஷ்யோத்தர புராணத்தில் கொங்கணேசுவர மகாத்மியமாக தஞ்சாபுரி



ாத்மியம் என்ற சரஸ்வதிமஹால் தேவநாகரி ஏட்டுப்பிரதியில் * கூறப்பட்டுள்ளது. தத்தாத்ரேயருடைய சீடரான கொங்கண சித்தர் சிவபெருமானின் ஏவலால், இங்கு தவம் புரிந்து 'கொங்கணம்' என்ற லிங்கத்தை பிரதிட்டை செய்து பூசித்த ஸ்தலமாகும். சுவாமி பெயர் ஸ்ரீ கொங்கணேசுவரர். அம்மன் ஞானம்பிகை. மற்றொரு வரலாறுமுண்டு. இந்நகரிலிருந்த † அன்னபூரண தேவி என்ற வியாபாரியின் மகள் ஸ்ரீகொங்கணேசுவரரிடம் பக்தி பூண்டு மணவினைகாலத்தில் பெற்றோர் ஒரு வரனை நிச்சயிக்கவும் தான் சுவாமியையே மணப்பேன் என்று மறுத்தாள். சிறிது காலத்திற்குப்பின் ஓரிரவு சுவாமியே அவளுக்குத் திருமங்கிலிய தாரணம் செய்து கோயிலுக்குக் கொண்டுபோகப்பட்டாள், மறுநாள் பெற்றோர்கள் பெண்ணைக் காணாது தேட, கோயிலில் இருப்பதாகத்தெரிந்து அழைக்கச் சென்றபோது "நீங்கள் அழைத்துச் செல்லலாகாது. இவள் பரமசிவனின் மனைவி ஆய்விட்டாள்" என்று அசரீரி எழுந்து பூமாரி சொரிய, பெண் கல்லாய்ச் சமைந்ததும் தெரிந்தார்கள். இவ் வரலாற்றைத் தெலுங்கில் 'அன்னபூரண பரிணயமு' என்ற நாடகமாக சிவாஜிராஜா காலத்தில் இயற்றியும், கோயில் விழாக்காலத்தில் நடிக்கப்பட்டும் வந்ததென்பதும் அறியக்கிடக்கிறது. ஸ்ரீ ஞானம்பிகையின் சந்நிதிக்குக் கிழக்கே இவ்வம்மையாருக்கு மற்றொரு அம்மன் சந்நிதி ஏற்பட்டிருப்பதும், கொங்கணசித்தருக்கு தனிச் சந்நிதியும் ஏற்பட்டிருந்தல் காணலாம். இம்மகாத்மியத்தில் அக்காலத்திலிருந்த வீரமார்த்தாண்ட சோழன் இக்கோயிலைப் பழுதுபார்த்தும், கோபுரம், பிராகாரம், மண்டபங்கள் முதலிய கட்டியும், வைகாசியில் திருவிழாவும் ஏற்படுத்தினான் என்று கூறுகிறது.

இக்கோயில் பிரமோத்ஸவம் வைகாசியில் நடைபெறுகிறது. இக் கோயிலுக்கு அரசாங்க மோஹினித்தொகை ரூ. 2471-11-6 ன் மொத்த வருமானம் சுமார் ரூ. 2880—4—0

இக்கோயிலுக்கு மற்றும் பல உபயங்களுமுண்டு.

* M.S. No. B 1849; also J.O.R. IV. iv p. 324—39.

† *Annapurna Parinayamu*- a Telugu Drama. No. 499 of Telugu Ms. catalogue of Sarasvati Mahal Library.

இக்கோயிலுக்கு மேலஅலங்கம் டிராமத்து இலாகாகண்டிராக்டர் திரு. வீராசாமி நாயுடு அவர்களின் உபயத்தால் மின்சார விளக்கு அமைப்பு செய்துகொடுத்து ஒளிவிளக்குகள் ஏற்றிவருகின்றது.

இக்கோயிலில் ஸ்ரீ திரியம்பவ ஈஸ்வரர் சந்நிதியும் நூதனப் பிரதிட்டையாகியுள்ளது. இப்பிரானுக்கு மகிமாலை கிராமத்தில் நஞ்சை மா 10, கு 67 நிலமானியம் உண்டு. இதன் வருமானம் சுமார் ரூ 117—2—0

இக்கோயிலுக்கு எதிரே ஸ்ரீசந்நிதி சுந்தரேசப்பிள்ளையார் என்ற விநாயகர் ஆலயமொன்றுண்டு. இக்கோயில், முன்பு வடவாற்றின் கரையிலிருந்து பிற்காலத்து இத்தலத்தில் பிரதிட்டைசெய்விக்கப் பெற்றதென்பர். இக்கோயிலுக்கு மோஹினித்தொகை ரூ. 131-4-0

ஸ்ரீநாகநாதப்பிள்ளையார்கோயில் தஞ்சை மேலஇராஜவீதி மேல சரகில் ஸ்ரீகொங்கணேசுவரர் கோயிலுக்குச்சமீபமாயுள்ள விநாயகர் கோயில். இக்கோயிலுக்கு மோஹினித்தொகை ரூ. 10–8–10

அய்யன்குளம் ஸ்ரீ விசுவநாதசுவாமி கோயில், மேற்குறித்த விநாயகர் ஆலயத்துக்கு அடுத்துள்ள சிறு கோயிலாகும். இக்கோயிலுக்கு மோஹினித்தொகை ரூ. 65–10–0.

இதற்கடுத்துள்ள அய்யன்குளத்து நடுவில், ஸ்ரீநடுவலநாதர் சந்நிதியொன்றும் (மோஹினி ரூ. 78-12-0); குளத்தின் தெற்குக் கரையில் சுமார் 150-வருடத்திற்கு முன்பு பிரதிட்டை செய்யப் பெற்ற தீர்த்தசஞ்சீவி ஹநுமார் கோயிலும்(மோஹினி ரூ. 5-7-6); மேற்குக்கரையில் வீரஹநுமார் சந்நிதியும்; கீழ்க்கரையில் சுமார் 150-வருடங்களுக்கு முன்பு தஞ்சையிலிருந்து வல்லம் போகும் பெருவழியில் 4-மைலிலுள்ள மானோஜிப்பட்டிக்கோயில் உலைந்து போகவே, அங்கிருந்த ஸ்ரீ லக்ஷத்தோப்பு ஹநுமார் சந்நிதியும் இங்கு கொணர்ந்து பிரதிட்டை செய்விக்கப்பெற்றுளது. இதற்கு மோஹினி வருமானம் இல்லை.

ஸ்ரீ காசிவிசுவநாதர் கோயில், மேலஇராஜவீதி மேல்சாரி லுள்ளதோர் கோயில். விண்ணாற்றங்கரை ஸ்ரீ ஆநந்தவல்லியம்மன் கோயில் கல்வெட்டால், இக்கோயிலின் நூதனசபா மண்டபம், மாதுஸ்ரீ காமாட்சியம்பா சாகேப் அவர்களால் கட்டி 1889 மே 31-ல் பூர்த்திசெய்து கும்பாபிஷேகம் செய்ததென்று கண்டிருக்கிறது. இக்கோயிலுக்கு மோஹினித்தொகை ரூ. 131—4—0 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 690—1—6



ஸ்ரீடபீர் விஜயராமசுவாமி கோயில், டபீர் ராமர்கோயிலெனவும் வழங்கும். மேல இராஜவீதியிலுள்ள விண்ணகராகும். மகாராட்டிரமன்னர் நிலஅளவுக்கென வடநாட்டிலிருந்து வருவித்த டபீர் என்ற ஒருவர் தாம் தினம் பொழுது புலர்வதற்குள் தம் கொட்டிலிலுள்ள பசுக்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் கொடுத்து பராமரித்துவந்ததில், ஒருநாள் அது தவறி பசுக்கள் உணவின்றிக்கிடந்த பாபத்தைப்போக்க, தஞ்சைக் கீழவாயிலுக்கு அடுத்து டபீர் இராமச்சந்திர சுவாமி என்ற இக்கோயிலையும், டபீர்குளம் என்ற திருக்குளத்தையும் கட்டியதாகவும், கோயில் மாத்திரம் பிற்காலத்து அவ்விடமிருந்து இப்போதிருக்கும் மேல இராஜவீதியில் கட்டப்பெற்றதெனவும் கூறுவர்.

இக்கோயில் வாசற்படிக்கல்லில், மராத்தி — நாகர எழுத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டால் * சரபோஜிமன்னர் சாலிவாகன 1727 குரோதன வருடத்தில் இந்த விஜயராமசுவாமி கோயிலில் புதுப்பித்த அமைப்புக்களும், பெருமாளுக்குப்புதியதோர் தேரும் செய்துகொடுத்தமையும் கூறுகிறது. இத்தேர் இப்பொழுதுஇலது. இப்போது நிற்கும் தேர் தஞ்சைப் பெரிய கோயில் விநாயகர் தேர் ஆகும்.

இக்கோயிலுக்கு மின்சாரஒளிவிளக்குகள் பொதுஜனஉதவியால் அமைத்து, தேவஸ்தானம் பரம்பரை டிரஸ்டி அவர்களால் ஒளி விளக்குகள் ஏற்றிவைக்கப்பெற்றுள்ளது.

இக்கோயில் மோஹினி வருமானம் ரூ. 312—3—4. வருடோற்சவம் சித்திரையில் நடைபெறுவதாகும்.

ஸ்ரீமன்னாருசாமி கோயில், போலீஸ் ராமசாமி நாயக்கர் சந்தில் இருக்கிறது. இக்கோயில் மோஹினி வருமானம் ரூ. 26—4—0

ஸ்ரீ பங்காரு காமாக்ஷியம்மன் கோயில், மேலஇராஜவீதியில் உள்ளதோர் சிறப்புற்ற கோயில். ஹைதர்கலாபத்தில் காஞ்சிபுரத்திலிருந்து உடையார்பாளையத்தில் சிலகாலம் தங்கியிருந்து இங்கு கொண்டுவந்த காஞ்சி ஸ்ரீகாமாக்ஷியம்மனின் சுவர்ணத் திருமேனி மறுபடியும் காஞ்சிக்குக் கொண்டுபோகாமலே இவ்விடமே இருந்துவிட்டதாகத் தெரியவருகிறது. இக்கோயில் தஞ்சை ஜில்லா கோர்ட்டார் அவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டு ஸ்கீம் ஆளுகைக்குள் இருக்கிறது.

* Ins. 351 of 1925

**ஸ்ரீ நவநீதகிருஷ்ணன் கோயில்** தஞ்சை மேலஇராஜவீதி மேல்சரகில் அமைந்ததாகும். இதன் வருடமோஹினித்தொகை ரூ. 131–4–0 உள்பட மொத்த வருமானம் சுமார் ரூ. 594–7–6

**ஸ்ரீ பிரதாப வீர ஹனுமார் கோயில்,** மேலஇராஜவீதி கோடியிலுள்ளமகாராட்டிர மன்னர் காலத்துக் கோயில். ஹைதர் கலாபத்திற்குப் பிறகு மகாராட்டிர ராஜகுரு சேதுபாவா சுவாமிகளால் பிரதிட்டை செய்யப்பெற்றது. பிரமோத்ஸவம் சித்திரையில் நடைபெறுகிறது. திருத்தேர் பழுதாகி கோயிலின் முன்நிற்கிறது.

இக்கோயிலுக்கு மின்சார ஒளி விளக்குகள் தேவஸ்தானப் பணியாளர்கள், தஞ்சைப் பெருமக்கள் உதவியாலும் அமைக்கப் பெற்று ஒளிவிளக்குகள் ஏற்றப்பெற்றுள்ளது.

இக்கோயில் மோஹினி ரூ 933—5—4 உள்பட, மொத்த வருமானம் சுமார் ரூ. 1286—10—7

**ஸ்ரீ இரத்னகிரீசுவரர் கோயில்,** சரபோஜி மன்னர் காலத்துக் கட்டிய மற்றொரு கோயிலாகும். இது வடக்குஇராஜவீதி அர்ச். பேதுரு கலாசாலைக்கு அடுத்துள்ளது. இதன் வரலாறு: சரபோஜி மன்னன் முக்தாம்பாள் என்னும் காமக்கிழத்தியின் உயிர்நீப்பால் கிடைத்த புதையல் பெரும்பொருளைக்கொண்டு, ஒரத்தநாடு முக்தாம்பாள் சத்திரம் கட்டியபின்பு, மன்னர் ஒரு வேள்வி செய்யத் தீர்மானித்து அதன் அவிர்பாகத்தை ஒருவரும் ஏற்றுக்கொள்ள வாராமையின், சரபோஜி கவலையுடன், அங்குள்ள புரோகிதர்களை நோக்கி அதனை ஏற்றுக்கொள்ளுபவருக்கு ஏராளமான பொருள் தருவதாகக் கூறியதும், அதனை ஏற்றுக்கொண்ட பழமாநேரி அண்ணா சாஸ்திரிகளால் அத்திரவியத்தைக்கொண்டு அவர் கட்டிய கோயில் என்பர். இதன் மூலசிவலிங்கம் காசியிலிருந்து கொணர்ந்து பிரதிஷ்டையாகியதென்றும், அண்ணாசாஸ்திரிகளின் குடும்பத்தாரே இக்கோயிலை இன்னும் நிர்வகித்துவருகின்றார்களென்றும் தெரிகிறது.

**வடக்குவாயில் ஸ்ரீ தண்டாயுதபாணி கோயில்,** தஞ்சைப் பெரிய கோட்டை வடக்கு வாயிலிலுள்ளது சைவப்பெருமக்களின் பாதுகாப்பிலும் திரு. ஞானஸ்கந்த குருக்கள் பூசையிலும் இருந்து வருவது. இக்கோயிலின் எதிரேயுள்ள கோயிலில் ஸ்ரீ ஆநந்தப்பிள்ளையார், ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் சந்நிதிகள் இரண்டு உள்ளன. முன்னதற்கு மோஹினி வருமானம் ரூ. 5–7–6. இவ்விரண்டு சந்நிதிகளும் அரண்மனை தேவஸ்தானத்தாரின் பார்வையில் உள்ளது.



**ஸ்ரீ குருகுல சஞ்சீவி ஹனுமார் கோயில்,** தஞ்சை வடக்கு இராஜவீதியில் கீழ்பாகத்திலுள்ளது. இதன் அரசாங்க மோஹினி ரூ. 10—8 – 10 ஆகும்.

**ஸ்ரீ பட்டாபி இராமசுவாமி கோயில்,** பூக்கடை அல்லது பஜார் அய்யங்கடை வீதியில் அமைந்துள்ளது. நாயக்கமன்னர் காலத்தில் அரண்மனைக்குச் செல்ல இப்பக்கல் ஒரு வாயில் இருந்ததெனவும், அதனணித்தே சிலகாலம் தங்கியிருந்த பெத்கதாசரி* என்றபெரியார் பூசித்த ஸ்ரீஇராமபிரான் பட்டாபிஷேகப்படம் இன்னும் இம்மூலத்தான சந்நிதியில் இருப்பதைக்காணலாம். அதுவே சந்நிதியாக ஏற்பட்டு, பிற்கால மகாராட்டிரமன்னர் காலத்தில் இப்போதிருக்கும் திருவிண்ணகர் எழுந்ததென்பர். பெருமாள் நின்றதிருக்கோலம்; தெற்குத் திருமுகமண்டலம். இக்கோயிலுக்கு மோஹினி ரூ. 262-8-0 உள்பட மொத்தவருமானம் சுமார் ரூ. 806-2-4.

* தஞ்சையில் நாயக்க மன்னர் அரசியல் நடாத்தும் நாளில் கும்பகோணம் கடலங்குடியில் அரண்மனைப் பணி தாங்கிய விஷ்ணு பக்தர் ஒருவர் இருந்தார். அவர் வடுக குலத்தினர். நீண்ட உருவினையும், வைணவ சின்னங்களையும் மிகுந்து அணிந்தவர். ஒரு நாள் வழக்கப்படி தனது பணி தனதுநெற்றியில் பெரிய நாமம்தரித்து குதிரைமேல்ஏறித் தனது பணி மேல் செல்லுங்கால் தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களின் மண்குவியல் மேல் குதிரைக்கால் இடறி அதனைச் சிதறியது. அது கண்ட சிறுவனொருவன் அவருருவத்தை நோக்கி "இவனென்ன பெத்த தாசரியோ" என எள்ளி நகையாடினன். இவ்வார்த்தைகள் அவர் காதிற்படவே, தமது குதிரையினின் றிழிந்து பையனைத்தழுவி, தனக்கு அப்பெயரிட்டதற்காக வியந்து சென்று, இல்லம் ஏகித் தனது உயரிய பணியை அன்று முதற் துறந்து பக்தி வழியில் ஈடுபடுவோராயினர். சின்னாட் கழித்துத் தஞ்சையை அடைந்து, கீழவாயில் ஸ்ரீ நரசிங்கப்பெருமாள் சந்நிதியில் உறைவாராயினர். அவர் பத்தியின் திறன் ஊர் முழுவதும் பாவியது.

இங்ஙனமிருக்கையில் புலவர்களும், புராணிகர்களும் நிறைந்த அரசவை ஒருநாள் மன்னனுக்குச் சந்தேகமொன்று எழ, அதனைப்போக்க அவர்களை நோக்கி "வைகுண்டம் எவ்வளவு தூரம்" என்று வினவினன். புலவரும் தமக்குப் புலனான வழி, அணித்தெனவும், சேய்மையெனவும், பலவாறு கூறினர். அரசன் சந்தேகம் தெளியாது உண்மையறிய ஆவலாயினன். அதனைக்கண்ட புலவர்களில் ஒருவர் இவ்வூர் நரசிங்கப் பெருமான் சந்நிதியில் 'பெத்ததாசரி' என்று விஷ்ணு பக்தர் ஒருவர் உளர். அவரை வினவின் உண்மையறியக் கூடும் எனத்தெரிவிக்க,

அரசனும் அவரை அழைப்பித்துத் தமது எண்ணத்தை வெளியிட்டான். பக்தரும் சற்று யோசனை செய்து, கஜேந்திரனுக்கு அருள் செய்ததும், திரௌபதையின் குரலுக்கு அணித்தாயிருந்ததும் மற்றும் புராணங்களில் வைகுண்டவாசியான ஸ்ரீபெருமாள் பக்தர்களுக்கு அநுக்கிரஹித்த விபரங்களையும் கூறி, வைகுண்டம் அடியவர்கள் கூப்பிடுகிற ஓசைகேட்கும் தூரத்திலுள்ளது என பதிலளித்தார். அரசனும் ஐயம் நீங்கி, பெத்ததாசரியின் பக்தியை வியந்து தமது பக்கல் அமரவேண்டுமெனப் பணித்தான். இவ்வாறு அரசன் அவருக்குக் காட்டிய நன்மதிப்பில் அழுக்காறுற்ற அவைப்புலவர்கள் அவருக்கு இடுக்கண் விளைவிக்க எண்ணுவாராயினர். பெத்ததாசரியின் இடைவிடாப் பக்தியையும் அவரது வைணவ கீர்த்தனைகளையும் கேட்டறிந்த அப்புலவர்கள், அரசனுக்கும் அவருக்கும் விரோதம் ஏற்படுத்தஎண்ணி, பெத்ததாசரியின் வாயால் அரசன்வாழ்த்துப்பாபெற்றால் இன்னும் சிறப்பும் ஆயுளும் பெறுவான் என அரசவையில் தெரிவித்துக்கொண்டனர். அரசனும் உண்மையறியாது பெத்ததாசரியைக் கேட்க, அவர், "நரஸிம்மனைப் பாடின வாயால் ஊர்சிம்மனைப் பாடுவதில்லை" என மறுத்தார். புலவர்களும் ஊர்ஸிம்மன் எனும் பதங்களுக்குச் சிலேடை வேற்றுப்பொருளாகிய ஊர்சிம்மன் = ஊரையாளுகின்ற ஸிம்ஹம் — ஊர் ஸிம்மன் = நாய் — எனப், பொருள் வேறுபடுத்தி அரசனின் கோபத்திற்கு அவரை உள்ளாக்க, அரசன் பெத்ததாசரியைக் கழுவிலேற்ற உத்தரவிட்டான். கழுவேற்றுமிடமாகிய, இப்போதைய கழுமேட்டிற்கு அவரைக்கொண்டுபோய்க் கழுவேற்றும் சமயத்தில் கழுமரம் தீப்பற்றி வெந்தது. அதுகண்ட அரசனும் மற்றவரும் பயந்து பெத்ததாசரியை விடுவித்தனர். பக்தரும் அரண்மனை மேலவாயில் அணிமையில் தற்போது பூக்கடை இராமசுவாமி கோவில் இருக்குமிடத்தில் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு சுவரில் ஸ்ரீஇராமபிரான் பட்டாபிஷேகப்படமொன்றை எழுதி அதனை வழிபடுவாராயினர். அவர்காலத்துக்குப்பிறகே இக்கோயிலானது கட்டப்பெற்றது. அவர் எழுதிய இராமர் பட்டாபிஷேகப்படமும், இன்றும் இராமசுவாமி கோயில் உள் ஸந்நிதியில் காணப்படுகின்றது. இப்படிக் காலம் கழித்துவரும் நாளில் இவருடைய உற்றார் இவருக்கு ஒரு தொழில் நடத்தவேண்டி ஒரு கடை ஏற்பாடு செய்துகொடுக்க, தம் எண்ணியவாறு பொருள்களையும்; திருமண், மஞ்சள், குங்குமம் யாவும் வழிப்போக்தாருக்குக்கொடுத்துச்செலவழித்துவிட்டார் எனவும், பின்பு சில காலங்கழிக்க இவர் பக்தியில் வியந்த ஸ்ரீரெங்கநாதப்பெருமானே வந்து இவரை அங்கு அழைத்துப்போயினர் எனவும், அவ்விடமிருக்கையில் ஸ்ரீரங்கம் கீழசிங்கப்பெருமான் கோயில்-நரசிம்மன் சந்நிதியில் ஐக்கியமாயினர் என்பதும் வரலாறு.



இக்கோயில் எடுப்பித்தகாலத்து இச்சந்நிதிக்கு எதிராக இப்போதிருக்கும் வேட்டைமார்க்க சஞ்சீவி ஹனுமார் கோயில் ஏற்பட்டிருந்தது. பிற்காலத்தில் இவ்விருகோயிலுக்கும் இடையில் வீடுகளும் கடைகளும் ஏற்பட்டு இரு தனிக்கோயில்கள் போன்று ஆயினமை காணலாகும்.

ஸ்ரீ வல்லம் பட்டாபிராமர் என்ற சந்நிதியும் நூதனமாக இக்கோயிலின்கண் பிரதான சந்நிதிக்கு எதிரில் மேற்கு முகமாக பிரதிட்டித்து பூசை நடந்துவருகின்றது. இப்பெருமாளுக்கு மோஹினித் தொகை ரூ. 15—2—0 ஆகும்.

வேட்டை மார்க்க ஸ்ரீசஞ்சீவி ஹனுமார் கோயில், தஞ்சைக் கோட்டை மானோஜியப்பாவீதியிலுள்ளது நாயக்கர்காலத்ததெனக் கூறலாம். பஜார் பட்டாபி இராமசுவாமி கோயிலுக்கு உபகோயிலாக ஆதியில்ஏற்பட்டு, சந்நிதி வடக்குமுகம் நின்ற திருக்கோலமாக ஸ்ரீஇராமபிரானை அஞ்சலி செய்துகொண்டிருக்கும் பாவனை தெரிகின்றது. இக்கோயில் மோகினி வருமானம் ரூ. 5—7—6

ஸ்ரீ இராஜகோபாலப்பெருமாள் கோயில், தஞ்சை நகரின் மத்தியிலுள்ள நாயக்கரது சிறந்த விஷ்ணுகோயிலாகும். முன் கோபுரம் மிக்குயர்ந்து உன்னத தோற்றத்துடன் விசாலமான பிராகாரங்களையும், நாற்புறமும் அமைந்த செங்கலாலாய உயர்ந்த மதில்களையுமுடையது. முதற்கோபுரவாயிலின் கல்நிலைப் புரைகளில் நாயக்கவம்சத்தவரின் இருஉருவங்கள் தோன்றுவன. அவற்றுள் ஒருவர் தஞ்சை நாயக்கமன்னன் விஜயராகவன் ஆதல்கூடும். முதற் குலோத்துங்கச் சோழனால் எடுத்த மன்னார்குடி ஸ்ரீஇராஜகோபாலன்*கோயிலைப் பெரிதும் புதிப்பித்துக்கட்டிய கடைசி விஜயராகவ நாயக்கமன்னரே இக்கோயிலையும் எடுப்பித்ததாகும்.

இக்கோயிலில் பொறித்துள்ள மூன்று கல்வெட்டுக்கள் அர[illegible]கத்தினர் ஆராய்ந்ததில் ஒன்று (1) அச்சுததேவமகாராயனின் [illegible]த்ததென்றும், மற்றொன்று (2) விஜயநகரமன்னரது முற்றுப் [illegible]ற்த கொடிவழி ஜாபிதா என்றும் தெரிகிறது. அவைகள் முழுவதும் கீழ்குறிப்பிட்டிருப்பது காண்க.

* Tanjore District Gazetteer p. 226

## * No. 1403 of S.I.I. Vol. V

(A. R. No. 40 of 1897) On the West and South walls of the central shrine in the Rajagopala Perumal Temple at Tanjore.

ராஜகோபாலப் பெருமாள் கோவில் தஞ்சாவூர் ஸ்வஸ்தி
ஸ்ரீமன்மஹாமண்டலேஸ்வரன் அரிஹராய விபாடன், பாஷைக்குத்
தப்புவராயர் கண்டன், மூவராயரகண்டன் கண்ட நாடு கொண்டு
கொண்ட நாடுகுடாதான் பூர்வதக்ஷிணபஸ்சிமோத்தர சதுஸ்ஸமுத்
திராதிபதி ஈழமும் சம்பளமும் கொண்டு அருளிய ராஜாதி ராஜன்
ராஜபரமேஸ்வரன் சோழமண்டல் பிரதிஷ்டாசார்யன் தொண்டம
ண்டல ஸ்தாபனாசார்யன் கஜவேட்டையும் நாள் வேட்டையும் கண்
டருளிய ஸ்ரீவீரப்ரதாப அச்சுததேவமஹாராயர் பிருதிவிராஜ்யம்
பண்ணாநின்றசகாப்தம் 1461 இதன் மேல் செல்லா நின்ற விளம்பி
ஸம்வத்ஸரத்து சிம்ஹநாயற்றுப் பூர்வபக்ஷத்து ஏகாதசியும் பிரஸ்
பதிவாரமும்பெற்ற உத்திரட்டாதி நாள் பாண்டிகுலாசனிய் வள
நாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாபுரி திருமலை அம்மன்பேட்டை
யில் திருமலை அம்மன் தர்மமாக பெருமாள் மதனகோபாலப்பெரு
மாளை திருப் பிரதிஷ்டை பண்ணுகையில் பெருமாள் மதனகோபா
லப்பெருமாள் திருக்கோயிலுக்குராயர், அச்யுததேவமகாராயர் அதி
ஷ்டானமாக கட்டளையிட்ட திருவிளம்பற்றினபடி ஆக்கநூர் சமயத்
ரோகரகண்டன் கோண்டம நாயக்கர் புத்ரன் பாபய நாயகர்க்கு
பொற்பண்டாரக் காணியாழ்ச்சிக்கு திருவிளையாட்டம் சிருவரம்
பூரிலே சேத்த இரையிலி நிலம் வேலி நாள் ஒண்ணுக்கு மான்யம்
பிரசாதம் (5) குருணி முப்பது வட்டமும் நாள் ஒன்றுக்கு அம்
முது ஸேத அதிரஸம் இருபது ஸாகியன் இருபது பாயசம் இரு
நாழியால்க் குழம்பு இருநாழி அடைக்காயம்முது முப்பது இலையம்
முது அறுபது சாத்துப்படி ஸந்தனம் பலம் ஒன்றுக்கு ஆக இவ்
வகை பண்யார சுவந்தரம் மாஸம் ஒன்றுக்கு நாள் இரண்டு திறவா
இலக்கைமாதம் ஒன்றுக்குபணம் அஞ்சு. (6) தம்பலவக்கும் திருக்
வழக்கம் பருமதான கோபாலன் சாலால் நெல்லு ரு-ா-தின்
சம் அதியகட்டளை னைவேத்தியத்தில் வரும் விழுக்காடும்
டயம் தரவுக்கு எழுத்தும் லிங்கப்பநாயகர்க்கு மெய்காவல்
ஆழ்சிக்கு திருவிளையாட்டம் சிறுவரம்பூரிலே சேத்த இரையிலி
நிலம் வேலி நாள் ஒ...... (7) நாளுக்கு பரிவட்டம் முழம் 12
யாணமுருத்தம் பலவுக்கும் மு-உ-ரு:ா-தரவுக்கு எழுத்தும்



ர்க்கு அரைகாவல்காணி ஆட்சிக்குதிருவிளையாட்டம் சிருவரம்
பூரில் செத்த இறையிலிநிலம் வேலி நாள் ஒன்றுக்கு மானிய
பிசாதம் 3-நிறுவாக இலக்கை ம்ாதம் ஒன்றுக்கு படரு ஊழியம்
ஆள் இர... (8) பாப்பய நாயக்கர் புத்திரன் வெங்கிடாத்திரிநாயக்
கர்க்கு கோயில் கேழ்விநாயகத்துக்கு திருவிளையாட்டம்சிறுவரம்பூ
ரில் சேத்த இறையிலிநிலம் பிரசாதம் 3 நிறுவாக இலக்கை படரு
பணியாரம் முறை இரண்டு பெரியதிருநாள் பரிவட்டம் படரு
மூகுத்தம் பலவுக்கும் படரு தரவுக்கு எழுத்து முடிப்புக்கு முத்
திரை சா...... (9) தஞ்சை மாமணி கௌதமகோத்தரத்து வைகா
நஸஸூத்திரத்து புராணபட்டர் புத்திரன் உலகுய்யநின்றபெரு
ள்லோகக ...... இரமசந்தரான மதனகோபால நம்பிக்குங்கட்டளை
இட்டதாநஇநிறுவாகம்மாதம் ஒன்றுக்கு20ஷை யூர்காஸ்யபகோத்தி
ரத்து வைகாநஸஸூத்ரத்துகோவிந்தபட்டர் நீலமேகர் புத்திரன்
(10)பாவிக்கஒண்ணதபெருமாளுக்கு தானநிர்வாக நாள்10 ஆகநாள்
30-வட்டத்துக்கும் கட்டளைஇட்ட நாள் 1-க்கு மான்ய பிரசாதம்
மசகூ ...... திருவிளையாட்டஞ் சிருவரம்பூரில் சேத்த இறையிலி
நிலம் க-லியும் மதனகோபால நம்பியார்க்கு குடை ஆள் இறையிலி
நெ-வப (11) ஆக நெ-கவப நிருவாக இலக்கை பட க-க்கு புரு-யால்
பண்ணியாரம் மூன்றுஉம் திருவாராதனத்துக்குவிளக்கு10-க்கும்3
நாளுக்கு பிரசாதம் 53-திருக்கை வழக்கம் நன்மை இன்மைக்கு
535—ள பெரியதிருநாள் பரிவட்டத்துக்கு 5 சங்கிரமத்திருநாளு
க்கு (12) பரிவட்டம் முழம் 12 கற்பகவல்லியார் தெற்குவீதியில்
விட்டமனை 3, இதுவும் பட்டயம்தரபுக்க எழுத்தும் புத்திரபவுத்
திர பரம்பரையாக காணிஆட்சியாக ஆண்டும் அநுபவித்துக்
கொண்டும் திருவாசலில் முன்னுக்கு பதியிற் சுதந்திரமும் பற்றிக்
கொண்டு சந்திராதித்யவரையும் ஸ்வகத்திலே இருக்கவும் (சுலோ
கம்) "பூரயதோ புதவாஞ்சாம் வாரயதோ வைரிபூப சித்தமிதம்
அச்சுதவிஹித விபூதோரச்சுதராயஸ்யஸாஸநம் ததிதம்" சுபமஸ்து.

## No. 1404 of S.I.I. Vol. V

(A. R. No. 41 of 1897) On the north wall of the same shrine.

......மிராபஹம் யத் கஜோப்ய கஜோத்பூதம் ஹரேணாபி
ச பூஜ்யதே, அஸ்திக்ஷீரமயாத் தேவைர்மத்யமாணாத் மஹாம்பு
தே: நவநீத மிவோத்பூதம் அபநீததமோமஹ: தஸ்யாஸீத்தன
யஸ்தபோபிராஜலே .........

2\. ...... ஸ்வீ துளுவேந்த்ரே ஷ–ரியதோ: கிருஷ்ண இவா வயே 1 ததோ பூத் புக்கம மாஜாநிரீஸ்வர: க்ஷிதிபாலக: அத்ர ஸமகுண ப்ரம்ஸம் மௌஸிரத்நம் பஹீபூஜாம் ஸரஸாதுதபூத் தஸ்மாந்நரஸா

3\. ...... பத்வா பஹளஜலரயாம்தாம் விலங்க்யைவ சத்ரூம் ஜீவக்ராஹம் க்ரிஹீத்வா சமிதி புஜபலாத் தஞ்சராஜ்யம் ததீயம் 1 க்ருத்வா ஸ்ரீரங்கபூர்வந்ததபிநிஜவசே பட்டணம் யோப

4, ...... க்ஷாணீபதீநாம் ஸ்ரஜமிவ சிரஸா சாஸனம் யோ வ்யதாநீத் 1 திப்பாஜீநாகலாதேவ்யோ: கௌசல்யாஸ்ரீசுமித்ரயோ: தேவ்யோரிவ ந்ருசிம்மேந்திராத் தஸ்மாத்ப

5\. ங்க்திரதாதிவ வீரௌ விநயிநௌ ராமலக்ஷ்மணாவிவ நந்தநௌ 1 ஜாதௌ வீரந்ருசிம்ஹேந்திர கிருஷ்ணராய மஹீபதீ 1 அஸ்யாஸீ தம்பிகாதேவ்யாம் அச்யுதேந்ரோபி பூபதி: 1

6\. தேவக்யாம். தநுஜாராதிர் வாசுதேவ வி இவாபவத் 1 வீரஸ்ரீ நாரஸிம்ஹ (ஸிம்ஹஸிம்ஹ)ஸ்ஸ விஜயநகரே ரத்னசிம்மாஸனஸ்த: 1 கீர்த்தியா நீத்யா நிரஸ்யன்ருக

7\. நளநஹு–ஷானப்ய வன்யாம் மதான்ந்யாந் 1 ஆஸேதோ ராசுமேரோ ரவனிசுரநுத: ஸ்வைரமா சோதயா த்ரோராபாஸ்சாத் யாசலாந்தா தவிலக்ஷிஹ்தயமா

8\. வர்ஜ்ய ராஜ்யம் சசாஸ 1 தஸ்மிந் குணைந விக்யாதேக்ஷி தேரிந்திரே திவங்கதே 1 ததோப்யவார்ய வீர்யஸ்ரீ: கிருஷ்ணராய மஹீபதி: பிபர்த்தி மணிகேயூரே நிர்விசேஷம் மஹீம் புஜே 11 கதவதி ஸ–ரலோகம் க்ஷோணிபாலே (யசஸ்வி) ததநுஜகுணசாலீ தர்மசீலாச்யுதேந்த்ர: 1 அகிலமவநிலோகம் பாலயன் வைரிஜேதா விலஸித ஹரிசேதா வித்வதிஷ்டப்ரதாதா

The following two lines which must belong to another inscription of Achyuta, are engraved on the tiers of the south wall.

1\. ப்பிறசாதம் 3 நிறுவாக இலக்கை மாதம் 1-க்கு ட்டரு ஊழியம் ஆள் 2-க்கு மாசம் ஒன்றுக்கு ஏ, நாள் ஒன்றுக்கு ப...... பிரஸாதம் இருநாழி மாசம் 1-க்கு பணியாரமுறை 12 பெரிய திருநாள் பரிவட்டத்துக்கு ட்டாரு ஸங்க்ரம திருநாளுக்கு பரிவட்ட முழம் 12 முகுற்த்தம் பலவுக்கும் திருக்கை வழக்கம் ட்டரு இ. 500 தாவுக்கு எழுத்தும் இந்தக் காணியாட்சிப்பேர் களுக்கு வடக்கு ... (2) த்திலே த்ருக்கோயில் ஊழியம் பண்ணிக் கொண்டு ஸ–கத்திலே இருக்கவும்.

ஏதத் ஸ–ராஸ–ரோத்துங்க மௌலிமாலோபலாலிதம் 1
ஸ்ரீமத் கோபாலதேவஸ்ய தஞ்சை நாதஸ்ய சாஸனம் 11
பூரயேதா புதவாஞ்சாம் வாரயேதா வைரிபூப சித்தமிதம் 1
அச்சுதவிஹித விபூதேரச்சுதராஜஸ்யசாஸனம் ஜயதி 11



...ஞ்சை நாயக்கர்களின் கடைசிகாலத்தில் அவர்களுக்கும் மதுரை ...வநாதநாயக்கருக்கும் விரோதம் எழுந்து நடந்த போரில் தஞ்சை நாயக்கரும் அவர் மைந்தன் மன்னாறுவும் நேராக வீரப் போரிட்டு இக்கோயில் வாயிலின் சமீபத்தில் இப்போது கரகக்கோயிலாகத் தோன்றும் இடத்தில் இறந்து வீழ்ந்தனர் (A.D. 1673) என்றும், அவர்களின் ஞாபகார்த்தமாக இச்சிறு கோயில் எடுத்து, நாடோறும் வழிபாடுகள் ஒரு மகாராட்டிர குடும்பத்தினரால் நடைபெறுகின்றதெனத் தெரிகின்றது.

நாயக்கர் இராஜ்யம் மாறவே, அதற்குப்பின் வெகுகாலம் இக்கோயிலில் பூஜைகள் நின்றும், ஹைதர் கலாபத்தில் இக்கோயில் ஸ்ரீஇராஜகோபாலன் திருமேனி மன்னார்குடிக்குக்கொண்டுபோகப்பட்டு திரும்பாமலே அங்கு நின்றுவிட்டதாகவும்; கடைசி மகாராட்டிர சிவாஜிமன்னன் காளியின் அருட்பிரசாதத்திற்காக ஒரு பெரியவேள்வி தஞ்சைக்குச்சமீபமாக பொந்திரிபாளயத்தில் சிவேந்திரைப்பிரதிட்டித்து நடத்திவருமளவில் ஆங்கு நடந்துவந்த நரபலியின் கொடுமையை ஆங்கிலஅரசியற்பிரதிநிதி தடுக்கவும், வேள்வியானது உலைக்கப்பட்டு, அங்கு பிரதிட்டிக்கப்பட்டிருந்த கணக்கற்ற கடவுள் திருமேனிகளையெல்லாம் இக்கோயில் முன்மண்டபத்தில் அவசரமாகக் கொணர்ந்து சேர்ப்பித்தார்களெனவும் கூறுவர்.

அதன்பிறகு, சிவாஜிமன்னருக்குப்பின் அவர் இராணி மாதுஸ்ரீ காமாட்சியம்பாபாய்சாகேப் ஆக்ஞையின்பேரில், 1883-ல் ஏஜண்ட் நாகராஜருமாஜி பண்டிதரால் இக்கோயிலில் நூதனமாக வெள்ளைக்கல்லால் அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் கட்டி, ஸ்ரீபிரபாவ சிவேந்திர சுவாமி (யும்) ஸ்ரீசோடசபுஜ சக்கரபாணியையும் இம் மூலத்தானத்தில் ஸ்தாபித்தும், 1889 மே-மீ 31-ம் தேதியில் பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பெற்றதென்றும் தெரிகிறது. இக்கோயில் மண்டபங்களும், மாரியம்மன், ஆநந்தவல்லி ... கோயில்கள் முன்மண்டபங்களும், இக்காலத்தேதான் வின் ...ங்கரையிலிருந்த சேதுபாவா சுவாமியின் சந்தியாமண்ட... கற்களைக்கொண்டு அமைத்தனர் என்பர்.

ஸ்ரீவிஜயேசுவர சுவாமி என்ற சிவேந்திரர் சந்நிதியொன்று இக்கோயிலின் தென்மேற்கு மூலையிலுள்ளது. அதில் சக்கரத்தாழ்வார் உபயநாச்சியார்களுடன் எண்மர், அவரவர் சந்நிதிக்கு முன்பாக நந்திகளுடன் எழுந்தருளியிருப்பது. விஷ்ணு அம்சமும்

சிவஅம்சமும் கூடிய இச்சந்நிதிகளை சிவேந்திரர் என்றழைத்தனர். கடைசி சிவாஜிமன்னன் பொந்திரிபாளையத்தில் பிரதிட்டித்திருந்த சிவத்துவமே இஃதென்பர். இச்சந்நிதியில் மற்றும் விட்டோபா, பிள்ளையார் உருவச்சிலைகளையும் வழிபாடுடையனவாகப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் இங்கு பிரதிட்டித்தபோது ஸ்ரீ இராஜகோபாலசுவாமி கோயிலில் பூஜை இல்லாதிருந்ததும் குறிப்பதாகும். ஸ்ரீசிவேந்திரருக்கு மோஹினி இல்லை. இதர சொத்துக்களிலிருந்து வருமானம் சுமார் ரூ. 3050—8—6

இக்கோயிலின்கண் நூதனமாக வேறு சந்நிதியிலிருந்து **நூற்றெட்டுத் திருப்பதி** என்ற பெருமாளும் பிரதிட்டை செய்யப் பெற்றுள்ளது. இதன் மோஹினி வருமானம் ரூ. 9—15—3

இதன்பக்கலிலுள்ள மற்றொரு அறையில் சிவாஜி II மன்னரது குருவாகிய நாராயண சாஸ்திரியார் அவர் தர்மபத்தினியாருடைய உயிரளவனதான இரண்டுசிலைகளுள்ளன. இச்சந்நிதிவாயிலில் மேற்குறித்த மன்னரின் பங்களவிலாஸ் அபிமானமங்கையினரின் ஒருவராகிய காசிபாய்அம்மையின் உருவச்சிலை உலோகத்தில் வார்க்கப் பெற்று வேலைப்பாடமைந்த உயிரளவினதாய் நின்றிருப்பதும் காணலாம். அக்காலத்தில் தினமும் இச்சந்நிதிக்கு சிவாஜிமன்னர் வந்ததாகவும், அவர் தரிசனத்திற்காக இவ்வம்மை எதிர்பார்த்த வண்ணமாக இச்சிலை இங்கு வைத்திருப்பதாகவும் கூறுவர். 17-வது நூற்றாண்டில் கர்நாடகயுத்தகாலத்தில் ஆங்கிலப்படைகள் தஞ்சைப் பெரிய கோயிலில் வசித்துவந்தும், இக்கோயிலில் வெடிமருந்துகள் சேமித்துவைத்திருந்ததாகவும் கூறுவர்.

இக்கோயிலின் இரண்டாவது கோபுரம் தாண்டி உள்நுழைந்ததும் வலப்பக்கத்தில் இரண்டு பெருமண்டபங்கள் அடங்கிய கட்டடமொன்றுள்ளது. அதன் முந்தியது, தேவசபை (assembly of the Gods) போன்று கடவுளுருவங்கள் நிறைந்து விளங்கும். பஞ்சலிங்கங்கள் அடங்கிய ஐந்து தனித்தனிச் சந்நிதிகளும், நவக்கிரகங்கள், வெங்கடாசலபதி, பட்டாபிராமன், வேணுகோபாலன், விட்டோபா பண்டரிநாதன், நாமம், சங்குசக்கராயுதந் தரித்த தும்பிக்கையாழ்வார்(பிள்ளையார்), கம்பீரமும் உன்னதமுமான தண்டாயுதபாணி, விநாயகர், ஹனுமான் சிலாஉருவங்களும், பஞ்சலோகத்தில்சோழர்காலத்ததானகாலசம்ஹாரமூர்த்தியின் உருவத்திருமேனியும் திகழ்கின்றன. இதனையொத்த மற்றொரு வீணாதாரமூர்த்தி



அருமைத் திருமேனி தஞ்சை பிரகதீசுவரர்கோயில் இராஜ சோழன் பொருட்காட்சிநிலயத்திலுள்ளது. இவைகளே மேலே பெற்ற பொந்திரிபாளையத்து கடவுள் திருமேனிகளாவன.

இதற்குக்கீழ்புரம் அமைந்த மண்டபத்தில் ஸ்ரீகாளிகாதேவியாரின் மூலவர் உற்சவத் திருமேனிகள் உள்ளன. மகாராட்டிர மன்னர்காலத்தில் இச்சந்நிதி மிக்கபிரபலமாகயிருந்து, நரபலிகளும் ஏற்றதென்பர். இக்காலத்தும் மிக்கஅருட்சக்தியுடன் விளங்குவது.

அன்பர்கள் இச்சந்நிதிக்கும், கோயில் முழுதும் மின்சாரஒளி விளக்குகள் ஏற்படுத்தி, 1938-ல் தஞ்சை நீதிபதி திரு. பொ. இராமலிங்கம், ஐ. ஸி. எஸ். அவர்களால் விளக்குகள் ஏற்றிவைக்கப் பெற்றது.

இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினி இல்லை. ஆனால் மங்களவிலாசத்தாருடைய தேவதான நிலங்களினின்றும் மாதுஸ்ரீ காமாட்சியம்பா பாய்சாகேப் அவர்களின் முகாசாதிட்டத்திலிருந்தும் வருட வருமானம் சுமார் ரூ 392 ஆகும்.

**ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் சந்நிதி,** தஞ்சை அய்யன்கடை வீதிக்கடுத்து, பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் சந்நிதி தெருவின் இலக்காக இருப்பது. உபயநாச்சியாருடன் நின்ற திருக்கோலம். கிழக்குத்திருமுகமண்டலம். நாயக்கர் காலப் பிரதிட்டை இக்கோயில் மூலப்பிரதிட்டை பெருமாளும்- உபய நாச்சியார் சிலைத்திருமேனிகளும் ஐயன்குளத்திலிருந்து எடுத்து வந்துபிரதிட்டையானதென்பர். ஆதிப்பிரதிட்டை தாரு என்றும், முன்பு உபயநாச்சியார் இல்லாதிருந்ததாகவும், ஒருமுறை அர்ச்சகரின் பிசகால் அஸ்தம் பின்னப்படுத்தியதாக, அதன் அபசாரத்திற்காக அர்ச்சகர் அந்தகராக்கப்பெற்றும், மற்றொருசிலாவிக்ரஹம்தயார் செய்துகொண்டிருக்கும்போது, மேற்குறித்த ஸ்ரீபெருமாள் திருமேனிகள் அய்யன்குளத்திலிருந்து சொர்ப்பனமூலம் தெரிந்து ...ரப்பெற்றவை இப்போதைய மூலஸ்தானமாகவும், புதிதாகச் ...தவை பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருக்கிறதும் தெரிகிறது.

சிவாஜிராஜா காளிகாதேவி பூஜை ஏற்படுத்துங்கால் இராஜ கோபால சுவாமி கோயிலில் இடம் போதாமையால் அங்கு இருந்த ஸ்ரீமதனகோபாலப்பெருமாளை (மோஹினி ரூ. 25–7–9) இக்கோயிலின் தென்மேல் பாரிசத்தில் பிரத்தியேகமான தனிச் சந்நிதியிலும்; இராஜகோபால சுவாமி கோயிலுக்கு வெளியிலுள்ள

தெற்குமண்டபக் கோயிலில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஆதிகேசவப் பெரு மாளையும் இக்கோயிலிலேயே தெற்குப்பிரகாரத்தில் தனிப்பிர திட்டை செய்வித்தும் பூஜை நடந்துவருகின்றது. இக்கோயில் வரு மானம் ரூ. 25-7-9. இன்னும் இக்கோயிலுக்குள் ஸ்ரீகளஞ்சிய லெக்ஷ்மியின் சந்நிதியும் ஏற்பட்டிருக்கிறது. இதன் மோஹினி வருமானம் ரூ. 5—7—6.

இக்கோயிலின் கீழ்த்திசையில் இப்பெருமாளின் திருத்தே ருக்கருகாமையில் தேர்முட்டி ஸ்ரீஹநுமார் சந்நிதியொன்றுள்ளது. இதன்உற்சவத்திருமேனி தேவஸ்தானத்தார்வசம் 1932ல்வந்தும், உபயதார்களால் சிறப்பான வருடவிழாக்கள் நடந்தும்வருகின்றன.

இக்கோயில் பள்ளியறை, ஸ்ரீவேணுகோபாலன் சந்நிதி புதுப் பித்திருப்பதும், திருக்கல்யாணம், திருப்பவுத்திர உத்ஸவங்கள், சந்தனக்காப்பு, இவைகள் அர்ச்சகம் வெங்கடாசார்லு அய்யங்கா ரின் நன்முயற்சியாலாயதென்பதையும் குறிப்பிடவேண்டியதாகும்.

இக்கோயிலுக்கு வருஷ மோஹினித்தொகை ரூ. 1137-8-0 உள்பட, மொத்த வருமானம் சுமார் ரூ. 1436—12—8

ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில் அமைப்பு, திருப்பதியைப்போல் பூமிமட்டத்திற்குமேல் உன்னத மேற்பரப் பில் இருப்பதால், திருப்பதி ஸ்ரீ வெங்கடேசுவரரை நினைப்பூட் டுவதாகவும்; இக்கோயிலின் அணித்தாக இருக்கும் ஸ்ரீ கோவிந்த ராஜப்பெருமாள் சந்நிதி, ஸ்ரீரங்கத்தையும், தில்லை சித்ரகூடத்தை யும் நினைப்பூட்டும்படியாக பெருமாள் தென்திருமுகமண்டலம் வைத்து பள்ளிகொண்டிருப்பதும்; காஞ்சி ஸ்ரீவரதராஜரை நினைப் பூட்டுதற்காக தஞ்சைக்கீழவீதியில் ஸ்ரீவரதராஜப்பெருமாள் சந் நிதியும் தஞ்சையில் சிறப்புடன் அமைந்தனவென்றும் கூறுவர்.

ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் கோயிலுக்கு மோஹினி ரூ. 87-8-0 உடன் மொத்தவருமானம் சுமார் ரூ. 135-8-0 ஆகும்.

ஸ்ரீகுருநாத சுவாமி கோயில், தஞ்சை சகாநாயகர் வீதியில், ஸ்ரீபூலோக கிருஷ்ணன் கோயிலை அடுத்த சிவமுகூர்த்தமாகும். பூசாரிகளின் பார்வையில் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. சிவன் இராத்திரி முதலிய விழாக்கள் சிறப்பாக நடந்துவரு கின்றன. இக்கோயிலின் அரசாங்க மோஹினி ரூ. 5—7—6



ஸ்ரீ பூலோக கிருஷ்ணன் கோயில் தஞ்சை சகாநாயகர் வீதி யில் உள்ளது. வேணுகோபால முகூர்த்தமாக நின்ற திருக்கோலம், மேற்குத் திருமுகமண்டலம். இக்கோயிலுக்கு மோஹினி வரு மானம் ரூ. 19—11—0

இச்சந்நிதிக்கு மேல்புறமாக ஸ்ரீயக்ஞநாராயணப்பெருமாள் என்ற மற்றொரு சந்நிதியும் உண்டு ஸ்ரீபெருமாள் நின்ற திருக் கோலம். உற்சவர் மூலவர் உண்டு. இச் சந்நிதி தஞ்சை காசுக் கடை செட்டியார்களால் பரிபாலிக்கப்பட்டுவருகிறது.

ஸ்ரீ எல்லையம்மன் கோயில், தஞ்சை நகர் மத்தியில் எல்லை யம்மன் கோயில் வீதியில் அமைந்த புராதன கிராமதேவதைக் கோயிலாகும். ஆதியில் தேவி, ரேணுகாம்பாள் என்ற பெயரைத் தாங்கியும், மகாராட்டிர அரசு தோன்றியதும், ஸ்ரீஎல்லையம்மன் என்ற பெயருடன் அவ்வம்ச மன்னர், அவர்வகைக் குடியினரது குலதெய்வமாகவும் இருந்துவருவது.

இக்கோயில் வெளிகோபுர வாசற்படி நிலைக்கல்லில் மகாராட்டிர எழுத்தில் பொறித்துள்ள கல்வெட்டால், முன்பு சிறிதாக இருந்த இக்கோயிலை இரண்டாம் சரபோஜிமன்னர் (A. D. 1798—1832) இப்போதிருக்கும் அளவில் பெரிதாக்கியும், கருப்பகிருஹம். அர்த்த மண்டபம், மகாமண்டபம், கீர்த்தனமண்டபம், வாசல் கோபுரம், மடப்பள்ளியும், திருச்சுற்றாலயத்துள்ள மாதங்கி அம்மன் (ஜம தக்னி முனிவரின் தேவியும், பரசுராமரின் தாயும்). நாககன்னிகை கள், சண்டிகேசுவரர் சுற்றுசந்நிதிகளும், நான்கு பிராகாரச் சுவர் கள், செங்கல்தளவரிசையும் போட்டு, கோபுரவாசற்படிகளுடன் புதிதாகத் திருப்பணி செய்ததாகத் தெரிவிக்கின்றது. மற்றும் கோயிலில் மகாராட்டிரசார்புடைய காண்டேராவ், போஸ்ட் கொந்தளாதேவிக்கும் தனித்தனி நிலயங்களும் உள. கருப்பகிருஹத்துள் ஸ்ரீஎல்லையம்மாதேவியும், பிள்ளையார், பரசு ராமர் திருமேனிகள் உள.

இக்கோயிலுக்கு அரசாங்க மோஹினித்தொகை ரூ. 183-12-0 உடன் மொத்த வருமானம் சுமார் ரூ. 209—4—0 ஆகும்.

ஸ்ரீ ஜனார்த்தன இராமசுவாமிப்பெருமாள் கோயில், தஞ்சை எல்லையம்மன் வீதியின் மத்தியில் அமைந்த விண்ணகராகும். இக் கோயிலுக்கு அரசாங்க மோஹினித்தொகை ரூ. 9—15—3.

இக்கோயிலின்கண் ஸ்ரீ தக்ஷிண சஞ்சீவி ஹநுமார் சந்நிதியும் பிற்காலப் பிரதிட்டையாக அமைந்துள்ளது. இச்சந்நிதிக்கு அரசாங்க மோஹினித்தொகை ரூ. 5—7—6.

ஸ்ரீ ஜனார்த்தன வாசுதேவப்பெருமாள் ; ஸ்ரீ விந்தியவசனி சமேத ஸ்ரீ நகரேசுவரர்; ஸ்ரீ கன்னிகாபரமேசுவரியம்மன் இம்மூன்று சந்நிதிகளும் அடுத்தடுத்துள்ளதும், ஸ்ரீ எல்லையம்மன் கோயிலுக்குத் தெற்கே அமைந்தும், வைசியகுலத்தாரின் பராமரிப்பிலுள்ள கோயில்களாகும்.

விஜயமண்டபம் ஸ்ரீ தியாகராஜா கோயில், தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடியிலுள்ளது. மகாராட்டிர காலமுதல் முகாசாப் பொருளிலிருந்து பரிபாலிக்கப்பெற்று, சிவாஜி இராஜா காலத்தில் அரண்மனை தேவஸ்தானத்தாரின் பராமரிப்புக்குள் வந்ததென்பதும், விஜயதசமியன்று மகாராட்டிர மன்னர்கள் இக்கோயிலுக்குச் சென்று அம்பு போடும் வழக்கம் இருந்தும், பின்பு அரசு நீங்கவும் அவ்வழக்கமும் அத்துடன் நின்று போயினமையும் தெரிகின்றது,

ஸ்ரீ செங்கமலநாச்சியம்மன் கோயில். தஞ்சைக்கு சுமார் ஒரு மயில்தூரத்தில் மேம்பாலத்திற்குத்தென்மேற்கிலுள்ளதோர் புராதனகோயில். இதனுள் அம்பிகையின் சந்நிதி, மகாமண்டபத்தைச் சுற்றி கிராமதேவதைகளின் சுற்றாலயங்களும், பிராகாரத்திற்கு அடுத்து மேற்குப்பாகத்தில் ஸ்ரீசாமளாதேவியின் சந்நிதியும்,இன்னும் சிறிதுதூரத்தில் ஐயனார் முதலிய ஐந்து சிறுசந்நிதிகளும், கோயிலுக்கு முன்பு சிறிய திருக்குளமும், அதற்கடுத்துமுனீசுவரருடைய சந்நிதியும் விளங்குவன.

ஸ்ரீ அம்பிகை, தஞ்சாசுரன் முதலிய அசுரர்களை வதைக்க காளிகாதேவியின் ஏழு துர்க்கை அவசரங்களில் ஒன்றெனவும் சோழர் காலத்து சிங்களதேசத்திலிருந்து இங்கு கொணரப்பட்ட கன்னிகை ஒருவள் இறைவன்மேல் வைத்த அன்பால் இங்கே அமர்ந்து சிவப்பேறு பெற்றதன்மேல் சிங்களநாச்சியம்மன் என்றாக இருத்தலும் கூடுமென்பர்.

ஸ்ரீ அம்மன் தஞ்சை நகரவாசிகளின் குலதெய்வமாகப்போற்றப் பெறுவது. தஞ்சை நகரவாசிகளால் இக்கோயில் சமீபத்தில் திருப்பணியாகி மகாகும்பாபிஷேகம் 27—5—1984-ல் நடைபெற்றது. இக்கோயில் தஞ்சை நகரவாசிகளால் பரிபாலிக்கப்பெற்றுவருகின்றது.



தஞ்சை சூரியத்தெரு ஸ்ரீசுப்ரமணியசுவாமி கோயில், தஞ்சை நகரவாசிகளால் கட்டப்பெற்றும், வெகுகாலமாக சமயாச்சாரியர் ஞானசம்பந்தரது குருபூஜையை விழாக்கொண்டாடியும், வருடந் றும் வைகாசியில் அந்த ஆளுடைய பிள்ளையாரது திருநக்ஷத்ர த்தன்று விசேஷ புஷ்பப்பல்லக்கில் எழுந்தருளச்செய்து திரு லக்கம் நடந்துவருவது.அங்ஙனமே அத்திருவிழாவைக்கொண்டாடும் மற்றத் திருக்கோயில்கள் ஆட்டுமந்தைத்தெரு ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில், பெரிய அரிசிக்காரத்தெரு ஸ்ரீசுப்ரமணிய சுவாமி கோயில், வடக்குவாசல் ஸ்ரீசுப்ரமணிய சுவாமி கோயில், ஸ்ரீவெள்ளைப்பிள்ளையார் கோயில், காம்பை சம்பந்தமூர்த்திசுவாமி கோயில், தஞ்சை மேலஇராஜவீதி சம்பந்தமூர்த்தி மடாலயத்தார் ஆவன.

தஞ்சைப்பூக்காரத்தெரு ஸ்ரீசுப்ரமணியசுவாமி கோயில், பல வருடங்களுக்குமுன்பு திருச்செந்தூரிலிருந்து கொண்டுவந்த சுப்ரமணிய சுவாமி திருவுருவத்தை இங்கு பிரதிட்டித்திருந்தும், நாளடைவில் பக்தர்களால் சிறப்புற்றும், தஞ்சை வக்கீல் இராவ்பகதூர் ஸ்ரீநிவாஸம் பிள்ளையவர்களால் கோயிலுக்கு இடம் வாங்கிக்கொடுத்தும், பின்பு அதனைக்கட்டியும், பொதுமக்களின் கோரிகைக்கப்படி தஞ்சை சப்கோர்ட்டார் ஸ்கீம் ஆளுகைக்குட்பட்டுள்ளது. மற்றும் பூச்சந்தைக்காரர்களின் முயற்சியாலும், நன்கொடைகளாலும் நடைபெறுவது.

தஞ்சை பில்லுக்காரத்தெரு ஸ்ரீசுந்தரமூர்த்தி விநாயகர்கோயில், புதிய ஆறுஇய மேட்டூர் கால்வாயின் கீழ்க்கரையில் அமைந்துள்ளது. ஸ்ரீ தண்டாயுதபாணி சந்நிதியும் பொருந்தியது. தைமாதம் சிறப்புறு பூசனைகளுடன் அன்னதான பாலாபிஷேக விழாவும் தருமகர்த்தா திரு. கே. தியாகராஜ வாண்டையார், த. அ. சதாசிவ தென்கொண்டார் இவர்களது பார்வையில் நடைபெறுவது.

ஸ்ரீ இரட்டை விநாயகர் கோயில், தஞ்சை மணிமுக்தாநதி யென்ற வீரசோழன் வடவாற்றின் தென்கரையில் இராஜாகோரி சமாதிகளின் தென்பாகத்தில் அமைந்த பழமையான லாகும். இவ்விநாயகர்மீது ஞானி வீரபத்ரபிள்ளை அவர் ல் 'இரட்டை மணிமாலை' என்ற நூலும், மற்றும் பிறராலும் அநேக தோத்திரப்பாமாலைகளும் அமையப்பெற்றது. கோயில் சிதைவுற்றிருப்பதுகண்டு அன்பர்கள் இதனைத் தற்காலம் திருப்பணி செய்துவருகின்றனர்.

## தஞ்சைத் திருக்கோயில்களைப் பற்றிய நூல்கள்.

கரந்தை ஸ்ரீவசிஸ்டேசுவரர் என்கிற கருவேலநாதர் பதிகம். புலவர்புராணம் இயற்றிய முருகதாசர் இயற்றியது.

வெள்ளைப்பிள்ளையார் கீர்த்தனை, இது ஹிரண்யநாடகம் ஆசிரியர் அன்னப்பன்பேட்டை வினைதீர்த்தபிள்ளையால் ஆக்கியது.

தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி. இது பிரபந்தம் 96-வகையுள் ஒன்று. தஞ்சைக் கீழவாசலில் கோயில்கொண்டுள்ள வெள்ளைப்பிள்ளையார் விஷயமானது. இந்நூலை நாயக்கர்காலத்தில் செய்திருக்கவேண்டும். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

"உந்தியிலே வேதாவை அரிபெறுவரென்று
உலகமெங்கும் சொன்னவளென் ஓரகத்தியம்மே
நந்தனிட மனையில்மால் வளருவாரென்று
நாடறியச் சொன்னவளென் நாத்தியடியம்மே
பெந்துவாய் ரகுநாதர திசதா சிவனார்வயிற்றில்
பிறப்பரென்று சொன்னவளென் பேத்தியம்மே
விந்தனிடமாது மையாள் வயிற்றிலே தஞ்சை
வெள்ளைப்பிள்ளை சனிப்பரென்றுசொன்னவளென் தமக்கை'

** ** **

விசையபாகவசுவாமி மேன்மேலும் வாழி
மெச்சுதளவாய் வேங்கடேந்திரனும் வாழி
இசையாகவே வெள்ளைப்பிள்ளையார் வாழி
ரசிக்குறத்தைக் கேட்டவரும் கற்றவரும் வாழி'

— சரசுவதி மஹால் ஏட்டுப்பிரதி 614 உ-ன் குறிப்பு

மற்றவை, அங்கங்கு தெரிந்தவரை குறிக்கப்பட்டுள்ளன.

22478

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 7 | சுற்றளவு | நான்கு புறத்திலும் சுற்றளவு |
| 4 | 25 | मुनिनांच | मुनीनां च । |
| 5 | 26 | நோக்கி | நோக்கி அமிருதத்தை எடுத்து |
| 7 | 20 | मृष्ट | मिष्ट |
| 8 | 21 | சொன்னார் | சொல்லிச் சென்றார் |
| 10 | 13 | पांवन | पावनं |
| 15 | 29 | மனது | மனதுக்குச் சரியாய் |
| 16 | 1 | செய்ய | செய்யப்பட |
| ,, | 17 | இருடபத்தின் | இடபத்தின் |
| 18 | 8 | கூடின | கூடின, |
| 19 | 22 | बलावती | बलवती |
| [illegible] | 15 | இஞ்சி | மிஞ்சி |
| [illegible] | 28 | ரூ. 2880-4-0 | ரூ. 2830—0—0 |
| 76 | 7 | ரூ. 117-2-0 | ரூ. 50—5—0 |
| | 27 | இல்லை | ரூ. 131—4—0 |

G2:3S.21193
N39

Sri Komalamba Press, Kumbakonam.